செந்தமிழ்ச் செல்வி

ஜனவரி, மார்ச் 1996.

JL
O31.m2.N, NOSC
N96
218533

செந்தமிழ்ச் செல்வி

சிலம்பு-70 பரல்-5
சனவரி 1996
வள்ளுவர் ஆண்டு 2026
மார்கழி

"செந்தமிழ்ச் செல்வி"
(செந்தமிழ்த் திங்கள் இதழ்)
நிறுவனர் : தாமரைச்செல்வர் வ. சுப்பையா பிள்ளை
இதழாசிரியர் குழு
முனைவர் பொன் கோதண்டராமன்
முனைவர் தமிழண்ணல்
முனைவர் க. ப. அறவாணன்
முனைவர் பொன் சௌரிராசன்
முனைவர் கு. சுந்தரமூர்த்தி
முனைவர் சொ. சிங்காரவேலன்
பேராசிரியர் கே. எஸ். சிவராமலிங்கம்
கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்
முனைவர் வீ. ப. கா. சுந்தரம்
ஆசிரியர் ; இரா. முத்துக்குமாரசுவாமி, எம்.ஏ., பி. லிப்.,

உள்ளுறை

	பக்கம்
இருண்ட கண்டத்தில் அருந்தமிழ்ப் பணி	161
இரண்டாம் வீரா நாய்க்கரின் தமிழ் உரைநடை (18நூ.)	165
தமிழில் இடிபஸ் தொன்மம்	169
தமிழ் இலக்கியங்களில் நாட்டுப்புறச் சாயல்கள்	174
தமிழ்க் கடவுள்	180
பாவலரேறு தமிழ்க்களம்	185
பாவேந்தர் நினைவுகள்	186
விகுதியின் பிறப்பு — ஒரு புதிய கருத்து	188
பொங்குகவே பொங்கல் நன்றுய் !	192
உலகந் தேடும் தமிழ் ; நமது தலைமுறைக் கடமைகள்	193

மானிட உடலியக்கவியல்

டாக்டர் அ கதிரேசன் எம். டி.,

இந்நூல் தமிழில் மருத்துவ அறிவியல் செய்திகளை புரிந்துகொள்ள பெரிதும் உதவுகிறது. தசைமண்டலம், எலும்புமண்டலம் மூச்சு மண்டலம் எனப் பல மண்டலங்களைப்பற்றி அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. நமது உடலிலுள்ள ஒவ்வொரு உறுப்புகளும் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை நமக்கு எளிமையான முறையில் அனைவருக்கும் புரியும்படியாகக் கூறுகிறுர்.

விலை ரூ. 35/-

29 சன 1996
தமிழ்நாடு அரசுக் காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

இருண்ட கண்டத்தில் அருந்தமிழ்ப் பணி

'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்ற முதுமொழிக்கிணங்கத் தமிழர்கள் மூன்று நூற்றாண்டுகட்கு முன்னரே பல நாடுகட்கும் சென்றனர். வாணிகநோக்குடன் இந்தியாவிற்கு வந்த வெள்ளையர்கள் இந்தியர்களின் கடும் உழைப்புத்திறனைக் கண்டு வியந்து பல்வேறு நாடுகளிலும் இந்தியர்களைக் குடியேற்றினர்.

'வெளி நாடுகளுக்குச் சென்று பொருள்தேடி வருவது என்பது மிகமிகப் பழங்காலத்திலேயே தமிழர் வழக்கமாக இருந்து வந்ததுதான். பொருள்தேடித் திரும்பிவந்து, தமிழ் நாட்டில் தங்கள் குடும்பத்துடன் இவர்கள் தங்கி விடுவார்கள். வெளிநாடுகளுக்கோ வெளியூர்களுக்கோ சென்று பணிகளைச் செய்பவர்களும், தொழில்களைச் செய்பவர்களும் பெரும்பாலும் தங்கள் மனைவி மக்களை அங்கே அழைத்துப் போவதில்லை. இதனால் அங்கே தமிழர் குடியேற்றங்கள் முன்பெல்லாம் பெரிதாக ஏற்படவில்லை.

தமிழகத்தைத் தவிர ஈழத்தைத் தங்கள் தாயகமாகக் கொண்ட தமிழர்கள் மட்டுமே அயலகத் தமிழர்களாகக் கருதி வந்த காலம் கி.பி.18 ஆம் நூற்றாண்டுவரை இருந்தது. சங்ககாலம் தொட்டு ஈழத்தில் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். அவ்வாறு இருந்தும் வெள்ளையர் ஆட்சிக்குள் இந்தியா வந்தபோது இலங்கையின் மேற்குப் பகுதியிலும் தெற்குப் பகுதியிலும் தேயிலைத் தோட்டங்களில் பணிசெய்யத் தமிழகத் தமிழர்களைக் குடியேற்றினர். இவர்கள் இன்னும் அடிமைகள் போல் அங்கு வாழ்ந்து வருகின்றனர்.

இதைப்போலவே ஆங்கில ஆட்சி நடைபெற்ற பல நாடுகளிலும் தங்கள் வேலைகளைச் செய்வதற்காக எண்ணற்ற தமிழர்களை அங்கெல்லாம் குடும்பங்களுடன் அழைத்துச் சென்று குடியமர்த்தியது ஆங்கில அரசு. இவற்றுள் இலங்கையை

218533

அடுத்துப் பெருவாரியாகத் தமிழர்கள் குடியேறியது தென் ஆப்பிரி[illegible]லதான். பர்மா, மலேசியா, சிங்கப்பூர், பிஜித் தீவு, மொரீசியசு, ரியூனியன் தீவு போன்ற பல நாடுகளிலும் தமிழர்கள் தொழிலாளர்களாகக் குடியேறினர். தொலைவு நாடுகளான ஆப்பிரிக்கா, பிஜி, மொரீசியசு, ரியூனியன் போன்ற நாடுகளில் குடியேறியவர்கள் தாய்நாட்டிற்கும் தாம் குடியேறிய நாட்டிற்கும் இடையே நீண்ட தொலைவு இருந்த காரணத்தினால் தாய் நாட்டுடன் தொடர்பை வெகுவாக இழந்து விட்டனர்.

இதன் காரணமாக அந்த நாடுகளில் வாழும் தமிழர்கள் தாய் மொழியான தமிழ் மொழியை மறக்கலாயினர். தமிழ் எழுதவும் பேசவும் வாய்ப்பு குறையக் குறையத் தமிழை மறந்தனர். தலைமுறை கூடக்கூடத் தமிழை மறந்தனர். உள்நாட்டு மொழியை அதிக அளவில் பயன்படுத்தத் தொடங்கிய நிலையில் தாய்மொழியின் தேவை இல்லாது போயிற்று. இன்று தென் ஆப்பிரிக்காவில் மிகமிக மூத்த பெரியோர்களுக்கு மட்டுமே பேசவும் எழுதவும் படிக்கவும் தமிழ் தெரியும். மூத்த தலைமுறைக்கு அடுத்த தலைமுறைக்கே தாய்மொழி அறிவு குறைவு. இளைய தலைமுறையினரிடம் அறவே இல்லை என்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

தென் ஆப்பிரிக்காவுக்கு 2000 கி. மீ. தொலைவில் உள்ள மொரீசியசு, ரியூனியன் தீவுகளில் உள்ள மூத்த தலைமுறையினருக்கே தமிழ் அறவே தெரியாத நிலை. இந்த நிலை தென் ஆப்பிரிக்காவில் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகச் சில தமிழ்ப்பெரியார்கள் பெருமுயற்சியெடுத்துக் கொண்டு தமிழ் மொழியை இளைய தலைமுறையினரிடையே பரப்பிவருகின்றனர். மறைந்த பெரியோர்களான ச.மு.பிள்ளை, கோ. இராமசாமி ஆகியோர் வழியில் இன்று தமிழ்மொழிக்காகத் தம் 87 ஆவது வயதிலும் பாடுபட்டுவருபவர் தமிழ்ப்பெரியார் திருவாளர் என்.சி. நாயுடு அவர்கள்.

திரு. நாராயணசாமி சின்னையா நாயுடு தென் ஆப்பிரிக்காவில் வாழ்ந்துவரும் நான்காவது ஐந்தாவது தலைமுறையைச் சேர்ந்தவர். 1909 ஆம் ஆண்டு (சூலை 1) தென் ஆப்பிரிக்காவில் பிறந்தவர். ச.மு.பிள்ளையிடம் முறையாகத் தமிழ் பயின்றவர். தம் இன மக்களிடையே தமிழ் மொழியைப் புறக்கணிக்கும் மனப்பாங்கு இருப்பதை உணர்ந்து எப்படியாவது தமிழ் மொழியை இளைய தலைமுறையினர்க்குக் கற்பித்துவிட வேண்டுமென்று 90 வயதை நெருங்குகின்ற நிலையிலும்

ஆண்டுதோறும் தமிழகத்திற்கு வந்து மூன்று மாதங்கள் தங்கித் தமிழ் நாட்டுப் பெரியவர்களையும் தமிழ் அறிஞர்களையும் கண்டு பேசி சிறந்த நூல்களை அச்சிட்டுத் தாய்நாட்டுக்கு எடுத்துச் செல்கிறார்.

தம் 16ஆவது வயதிலேயே பள்ளி ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கியவர் திரு. நாயுடு. அது முதல் 50 ஆண்டுகள் பள்ளி ஆசிரியராகவே பணியாற்றி ஓய்வு பெற்றவர். பணிக்கிடையில் ஆசிரியர் பயிற்சியும் பெற்றார். தொடக்கப்பள்ளி ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கியவர் படிப்படியாக உயர்ந்து பள்ளித் தலைமையாசியராகப் பொறுப்பேற்றவர். தென் ஆப்பிரிக்காவில் பல்வேறு பள்ளிகளில் இவர் பணி ஆற்றியுள்ளார்.

பள்ளியில் பணியாற்றிக் கொண்டே வெளியில் பல்வேறு தமிழ் அமைப்புகளைத் தொடங்கி அதன்வழி மாலைநேரங்களில் அகவை முதிர்ந்தவர்களுக்கும் தமிழ் கற்பித்து வந்தார். திருவள்ளுவநாயனார் தமிழ்ப் பள்ளி, தென் ஆப்பிரிக்கத் திராவிடக் கழகம், (எம்.கே.) மோ.க. காந்தி தமிழ்ப்பள்ளி. காந்தி செந்தமிழ்ப் பள்ளி போன்ற ஆறு அமைப்புகளின் வழி தமிழ் கற்பித்தார்.

மொழியை மறந்தது போலத்தமிழ்ப் பண்பாட்டையும் மறந்துவிடக்கூடாது என்பதற்காகப் பல்வேறு பண்பாட்டு அமைப்புகளைத் தொடங்கினார். 1925 இல் திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியைத் தொடங்கினார். தென் ஆப்பிரிக்கத் திராவிட கழகத்தை 1965 இல் தொடங்கினார். 1963 முதல் நேட்டால் தமிழ் வேதக் கழகத்துடன் தொடர்பு கொண்டு தலைவராகவும் ஆட்சிக் குழு உறுப்பினராகவும் பல்லாண்டுகள் பணிபுரிந்தார். தென் ஆப்பிரிக்கத் தமிழ்க் கட்டமைப்பு, நேட்டரல் தமிழ் இணையம் போன்ற அமைப்பின் அறங்காவலர் குழுவில் இன்றும் இடம் பெற்றுள்ளார். இவருடைய பணியைப் பாராட்டிப் பல்வேறு நிறுவனங்கள் விருதுகளும் பாராட்டுரைகளும் வழங்கியுள்ளன.

உலகத் தமிழ் மாநாடு மலேசியாவில் 1974 ல் முதலில் தொடங்கியதிலிருந்து தொடர்ந்து நடைபெறும் சென்னை, மதுரை, மலேசியா, மொரீசியசு மாநாடுகளிலும் கலந்து கொண்டுள்ளார்.

கடந்த கால் நூற்றாண்டாக ஆண்டுதோறும் நவம்பர்த் திங்களில் இந்தியாவுக்கு வந்து மூன்றுமாதங்கள் தங்கியிருந்து

OEIm24, NOSC N96

மொழி, சமயம், பண்பாடு தொடர்பான நூல்களை அச்சிட்டு எடுத்துச் சென்று ஆப்பிரிக்கத் தமிழ் மக்களிடையே பரப்பி வருகிறார். மொழி அறிவு புகட்டுவதில் மட்டுமல்லாது இசை, நடனம், தேவாரம், திருமுறை, சமயப்பாடல்கள் தொடர்புடைய ஒலிநாடாக்களில் பதிவு செய்தும் எடுத்துச் செல்கிறார்.

பழகுவதற்கு மிகவும் இனியவர். அமைதியாகச் செயல் படுவார். இனிக்கப் பேசுவார். சிக்கனமாக வாழ்பவர். தமிழ் தொடர்பான அறிஞர்கள் அனைவருடனும் நல்ல முறையில் பழகுவார். இசை, நாட்டியக் கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுடைய பாடல்களை நாடாவில் பதிந்துகொள்வார்.

முதன்முதல் தமிழகத்திற்கு வந்தபோது கழக மேனாள் ஆட்சியாளர் தாமரைத்திரு.வ. சுப்பையாபிள்ளை அவர்களுடனும் மேனாள் பொதுமேலாளர் திரு. இரா. கல்யாணசுந்தரம் அவர்களுடனும் நெருங்கிப் பழகித் தமக்குத் தேவையான தமிழ் நூல்களையெல்லாம் கழகத்தின் அப்பர் அச்சகத்திலேயே அச்சிட்டு எடுத்துச் செல்வார். நல்ல தனித்தமிழில் எழுதப்பெற்ற சிறுவர் நூல்களை நிரம்ப வாங்கிச்சென்று தம் சிறுவர்களிடையே கொடுப்பார்.

இவ்வாறு இவர் பதித்த நூல்களாவன : - நால்வர் திரட்டு, அருட்பா, திருப்புகழ், பாப்பா பாட்டுகள், பாரதியார் பாட்டுகள், காவடிப்பாடல்கள், நாமாவளிப் பாடல்கள், திருக்குள் (18 அதி) ஓரங்க நாடகங்கள், கர்நாடக சங்கீதம் போன்ற முப்பதுக்கும் மேற்பட்ட நூல்கள்.

பன்னிருதிருமுறை, தாயுமானவர், பட்டினத்தார், இராமலிங்கர் பாடல்களைத் திரட்டி 'சிவனருள் திரட்டு' என்ற பெரிய நூலை அழகாக அச்சிட்டுள்ளார். மாணவர்களுக்குப் பயன்படக்கூடிய ஆங்கிலத் தமிழ் அகராதி ஒன்றையும் தொகுத்து வெளியிட்டுள்ளார்கள்.

தமிழ் வரிவடிவத்தில் மட்டுமிருந்தால் ஆப்பிரிக்கத் தமிழர்களால் படிக்க முடியவில்லையென்று தமிழுடன் ஆங்கில வரிவடிவத்திலும் தமிழ்ப் பாடல்களை அண்மைக் காலத்தில் அச்சிட்டு வருகிறார்.

தோற்றத்தால் அயல்நாட்டவர் போல் கோட்டும் தொப்பியும் கைத்தடியுமாகக் காணப்பட்டாலும் உணர்வாலும் உள்ளத்தாலும் பழுத்த தமிழராக வாழும் நாயுடு அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து தமிழ்ப்பணி தொடர்ந்து செய்ய வாழ்த்துகிறோம்.

இரண்டாம் வீராநாய்க்கரின் தமிழ் உரை நடை (18.நூ.)

ஒர்சே மா. கோபாலகிருஷ்ணன் (பிரான்சு)

(சிலம்பு–70, பரல்–4, பக். 157 தொடர்ச்சி)

இவ்வளவு சுலபமாகப் பிரெஞ்சு மொழியை உபயோகிக்கும் நாட்குறிப்பாசிரியர் பலவிடங்களில், தாம் உபயோகிக்கின்ற சொற்களை வாசிப்பவர் நன்கு உணரவேண்டும் என்ற எண்ணத்தில் தெளிவுரையும் கொடுக்கின்றார்.

"கிறாந்து பிறத்தாஞ்யு என்ற இங்கிலீசு தேசம்..."
"உசார் என்றும் பச்சை சட்டை ராஜுவத்தார்... "
"ஒத்தை பாய் கலுப்பு..."
"L'avant-garde என்னும் முதல் படை வகுப்பு..."
"Ministre என்னும் மந்திரியவர்கள்..."
"கோட்டை கட்டுகிற ingenieur..."
"architecte என்னுமரண்மனை வீடுகள் கட்டி வைக்கிறவன்..."
"Receveur du domaine என்கிற கிராம விசாரணை உத்தியோகம்..."
"Revolution என்ற குளறுபடிகள்..."
"citoyens என்னும் குடிகள்..."
"Loi என்ற முறைமை..."
"அறே என்ற தீர்ப்பில்..."
"தபெலியோம் என்ற வூர்க் கணக்கப்பிள்ளை..."
"Gouvernement என்ற அரண்மனை..."

என்று அவர் எழுதியிருப்பதைப் பிரெஞ்சு அறியாத தமிழ் மக்கள் வெகுவாகப் பாராட்டுவார்கள் என்பது நிச்சயம்.

பல பிரெஞ்சுக்காரரின் பெயர்ப் பட்டியலை எழுத வேண்டியிருக்கிற ஓரிடத்தில், "தமிழ்ப் பாஷையில் எழுதும்போது மேற்சொன்ன (பிறாம்சு) பாஷையினுடை உச்சரிப்புக் கெடுதி வருகிறதுமன்றி கண்டுபிடிக்கிறது பிறையாசமாயிருக்கிறதினாலே மாறுபாடு வராமலிருக்க வேணுமென்று யோசித்த..." என்ற காரணங்காட்டி, மேற்கொண்டு பிரெஞ்சு மொழியில் தொடர்ந்திருப்பது அவருடைய அறிவியற் மனப்பான்மையைக் (scientific mind) காட்டுகிறது.

எனினும், தாமெழுதுவது தமிழில்தான் என்பதை மீண்டும் உணர்த்துவது போல், அவர் அப்படியே கீழ்க்கண்ட சொற்களை உபயோகித்துச் செல்கின்றார் :

ஷெவாலியே (Knight)
மறுக்கி (Marquis)
எவேக்கு (Bishop)
மிசியோனேர்(Missionnaries)
விக்கோந்து (Viscount)
கோந்து (Count)
பரோம் (Baron)
புறுபோம் (Bourbon)
மிசியே (Mr. Esq.)
பிளாசு (Grounds)
தம்புற் (Drum)
சாலை (Room)
காம்புறு (Chamber)
கசேத்து (Gazette)
பிளாம் (Plan)
சூப்பு (Soup)
மெதாலி (Medal)
மினுத்து (Minute)
கிறாங் குறுவா(Great Cross)
கொங்சேல் (Council)
புறோத்தெஸ்தான் (Protestants)
தொப்பாசு (Topas)
அபித்தாம் (People)
பிறசிதாம் (President)
நசியோம் (Nation)
கொமித்தே (Committee)
முனிசிபால் (Municipal)
அப்புறுவே (Approved)
ரெக்கேத் (Application)
மிசிக்கு (Music)
பிறிசோனியேர் (Prisoners)
விசீத்து (Visit)
மில்லியோம் (Million)
கரவான் (Caravan)
போஸ்து (Post)
கோந்துறோல் (Control)
கலேர் (galley)
கொறுதொம் றூமு (Red Ribbon)

இந்தச் சொற்களும் இது போன்று வரும் வேறு சில சொற்களும் புதுவையில் அவர் காலத்தில் பழக்கத்தில் இருந்திருக்க வேண்டும்.

இந்த அளவு இரவல் சொற்களை உபயோகிக்கும் இரண்டாம் வீராநாய்க்கர் தானே பல தமிழ்ச் சொற்களையும் உருவாக்குகின்றார். "Assemblee Generale என்ற பெரிய கூட்டம்" என்றோரிடத்தில் குறிப்பிடும் அவர் மற்றோரிடத்தில் "Assemblee Generale என்ற சறுவ சென சங்கம்" என்று புதிய கலைச் சொல்லை ஏற்படுத்துகின்றார். இது போலவே இரு மொழிப் பெயர்ப்பாளர் என்ற பொருளில் அவர் காலத்தில் உபயோகித்த "துபாசி" என்ற சொல்லைக் கொண்டு "துபாசித்தனம்", "தப்பு துபாசித்தனம்" என்ற சொற்களைக் கையாளுகின்றார். நாம் கடிகாரம் என்று சொல்வதை அவர் "நாழிகை வட்டம்" என்று குறிப்பிடுகிறார்.

"தூரயோசித்தல்", "அரைக்கொடி போடுதல்", "தூக்கி விடுதல்", "தமிழில் திருப்புதல்", "பாய்ச்சல் காட்டுதல்", என்று அவர் உபயோகிக்கும் சொற்றொடர்கள் இனிக்கின்றன. அவருடைய அழகிய நடைக்கு எடுத்துக்காட்டாக கீழ்க் கண்டவற்றையும் கூறலாம்.

அன்ன வஸ்திரம்...
ஆதிமுதல் அந்தியவரைக்கும்...
அசையும் பொருள் அசையாப் பொருள்...
ஆமல்ல வென்று...
இன்னாரினியார்...
இறக்கவும் ஏற்றவும்...
ஏற்றுமதி இறக்குமதி...
கண்டினை தெண்டினை...
கடலிலுங் கரையிலும்...
குடுக்கல் வாங்கல்...
சின்ன பின்னமாய்...
தட்டு முட்டு...
தாறுமாறு...
பண்டம் பாடிகள்....
பாலும் பழமும்...
ராவும் பகலும்...
லாபலோபம்...
வைக்கவும் வாங்கவும்...
நன்மை தின்மை...
நஞ்சை புஞ்சை...
மாடாடுகள்...

29 சன 1996
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

இவைகளுள் சில அழகான உம்மைத் தொகைகளாக விளங்குகின்றன. "ஆடுமாடு" என்று நாம் இக்காலத்தில் வழங்குவதை அக்காலத்தில "மாடாடு" என்று வழங்கினார்கள் என்பதையும் உணரலாம்.

"வீட்டுகளிலே நுழைந்து மாடாடுகள், தானியங்கள், கோழிகள், வைக்கல் கட்டுகள் மைற்றும் பாளையத்துக்கு வேண்டியதுகளெல்லாம் வலுமையின் பேரில் எடுத்துக் கொண்டார்கள்",

"மிகவும் ஊடாடிப்பேசி ஞாயங்களைச் சொன்னதின் பேரில்",
"அவர்கள் செய்யும் காரியங்களை விலக்கஞ் செய்யும்பொருட்டாய்",
"பலவிதமா யந்தச் சொல்தாதைக் கலைச்சு அவன் இவனுடைய போதனைக்குள்ப்பட்டு",
"ராத்திரி முப்பது நாழிகையும் நித்திரையில்லாமல்",
"ராச காரியங்களைக் கொண்டு திருப்ப ஒருவன்",
"வியாதி பழுதறக் குணமானபின்",
"இரு கட்சியிலும் சுடுகிறதை நிறுத்தினார்கள்".

என்று வரும் வாசகங்கள் நமக்குப் புதியவையாகவும் இனியவையாகவும் இருக்கின்றன.

இரண்டாம் வீராநாய்க்கர் தன்னையறியாமலே நம்மைச் சிரிக்கவைக்கிறார். கல்யாண வீட்டுக்கு வந்த வெள்ளைக்கார துரைகள் "ஒன்பது மணிக்கு தெருப்பந்தலில் தீனி சாப்பிட்டார்கள்" என்று எழுதுகின்றார். மற்றோர் இடத்தில், அதிகாலையில் சண்டைப் பயிற்சி செய்து முடித்தபின், "படைத்தலவரெல்லாம் பழையது சாப்பிட்டார்கள்" என்று எழுதியிருப்பதைப் படிக்கும் போது சிரிப்பு வருகின்றதல்லவா? இன்னு மோரிடத்தில், பிரெஞ்சுக்காரர் "கூத்தர்டினார்கள்" பிறகும், "சாப்பிட்டானவுடனே 12 மணிக்கு மேல் கூத்தாடத் துவக்கி, மூணு மணி வரைக்கும் கூத்தாடினார்கள்" என்று மிகத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். பிறகொரு முறை, சவப்பெட்டியின் மேல் போட்டிருக்கும் போர்வைத் துணியைப் பிடித்துக் கொண்டு செல்வதை, "..இன்னான்கு பேர்களும் நான்கு பக்கங்களிலுமிருந்து முந்தாணி பிடித்தார்கள்" என்று வர்ணிக்கின்றார்.

ஓரிடத்தில் அவர் விரும்பி நகைச்சுவையூட்டும் விதம் மேலிடுகின்றது: 1782 ஆம் ஆண்டிப் புதுவைப்பட்டணத்தில் தன்னுடைய நாட்டவர்தான் இருப்பர் என்று "அதி நிச்சய"த்துடன் கப்பலிலிருந்து இறங்கி வந்த ஆங்கிலேய னொருவன் தன் நாட்டினரொருவரும் அங்கில்லாததை உணர்ந்தவுடன் அவசரமாக அவசரமாகத் திரும்பி ஓடிவந்து "கடலிலே விழுந்து நீந்திக் கொண்டுபோய் கப்பலேறி வந்த வழியாகத் திரும்பிவிட்டா"னாம்.

இப்படியாக, இரண்டாம் வீராநாய்க்கர் தம் நாட்குறிப்பில் தமிழ்க் "கொச்சை"ச் சொற்கள், தமிழ்க் கலைச் சொற்கள், சமக்கிருத - பாலிச் சொற்கள், உர்து - ஆங்கில - பிரெஞ்சுச் சொற்கள் ஆகியவைகளை சமயத்துக்கேற்றவாறு உபயோகிக் கின்றார். பொதுவாக அவருடைய வாக்கியங்கள் புள்ளி யேதுமில்லாமல் வெகு நீளமாக அமைந்திருக்கின்றன. மாட்டுகள் நிறைய இருக்கும் இவருடைய வசனநடை சிலவிடங்களில் சற்றே பழைய செய்யுள் வகையான ஆசிரியப்பாவை ஞாபகப் படுத்துகின்றது.

இலக்கண ரீதியில் பார்த்தோமானால், நீண்ட அடுக்குத் தொடர்களைப் பெருவாரியாக உபயோகப்படுத்தும் அவர் சந்திகளையும், உடம்படுமெய்களையும் சரிவரப்போட்டு எழுதுகின்றார்.

(தொடரும்)

தமிழில் இடிபஸ் தொன்மம்

– சு. சந்திரா, எம்.ஏ., எம்.ஃபில்.,
ஆய்வாளர் (யுஜிசி – முதுநிலை)
ஒப்பிலக்கியத் துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

இலக்கியமும் உளவியலும்

இலக்கியத்திற்கும் உளவியலுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு. "எல்லா அறிவியல் கோட்பாடுகளுக்கும், கலைகளுக்கும் கருவாக மனித உள்ளம் உள்ளது; உள்ளச் செயல் வகைக்கான பயிற்சியாக உளவியல் இருப்பதால் இலக்கியப் பயிற்சிக்கும் அது உறுதுணையாக இருக்கும்" என்று யுங் (Jung ; 1972 · 175) கூறுவது இதனை அரண் செய்கிறது.

உளவியல் திறனாய்வு

இலக்கியத்தை உளவியல் அணுகுமுறையில் நோக்கும் பொழுது இலக்கியப் படைப்பின் திறன், படைப்பாளியின் திறன் முதலியவற்றைத் தெளிவாக அறியலாம். இவ்விரு துறைக்கும் இடையிலான தொடர்பினை நான்கு வழிகளில் காணலாம். அவை :

1. படைப்பாளர் உளவியல்
2. படைப்பாக்க உளவியல்
3. படைப்பில் உளவியல்
4. படிப்பவர் உளவியல்

என்று நான்கு வகைகளில் அமையும். இவற்றுள் முதல் இரண்டு முறைகளும் படைப்பாளரின் வரலாறு, காலச்சூழல் முதலியவற்றின் அடிப்படையில் படைப்பினை அணுகும் முறையாகும். இறுதி முறையான படிப்பவர் உளவியல் என்பது வாசகர் நிலையில் நின்று காண்பதாகும்.

படைப்பில் உளவியல் என்பது இலக்கியம் சார்ந்தது; இலக்கியத்தின் உள்ளார்ந்த தன்மையையும், வளர்ச்சியையும் சுட்டுவது. இம்முறையில் படைப்பில் பொதிந்து கிடக்கும் உளவியல் வகைமாதிரிகள், கொள்கைகள் போன்றவற்றைக் காணமுற்படலாம் (Rene Wellek and Austin Warren, 1985, p.81).

'படைப்பில் உளவியல்' என்ற அடிப்படையில் தமிழ் இலக்கியத்தினை அணுகுவதும், அவற்றுள் பொதிந்து கிடக்கும்

இடிபஸ் சிக்கலை ஆய்ந்தறிவதும், அதன்வழி காலந்தோறும் படைப்பாக்க நெறியில் ஏற்படும் சீர்மைகளையும் கட்டுரையின் செல்நெறியில் காணலாம்.

உளச்சிக்கலில் இடிபஸ்

உளப் பகுப்பாய்வுக் கோட்பாட்டின் தந்தை எனப்படும் பிராய்டு (Freud) மனித உணர்வுகளை, இச்சையுணர்வு (Id), தன்னுணர்வு (Ego), பண்பாட்டுணர்வு (Super Ego) என்ற மூன்று நிலைகளில் விளக்குகிறார். இவற்றுள் இச்சையுணர்வு தன் தேவையை நினைத்த மாத்திரத்தில் உருவாக்கிக் கொள்ளத் துடிக்கிறது. பண்பாட்டுணர்ச்சியோடு ஏற்படும் இத்தகைய முரண்பாட்டினால் உளச்சிக்கல் ஏற்படுகிறது. 'ஒரு குறிப்பிட்ட வயதில் குழந்தை (3-6) தாய், மற்றும் தந்தையர் மீது கொள்ளும் நாட்டம், இவ்விதமான போராட்டங்களைச் சந்திக்கும்போது அச்சிக்கல் உளச்சிக்கலாகி விடுகின்றது' எனும் (Freud; 1986; 403) பிராய்டு, இவற்றை விளக்க இடிபஸ், எலெக்ட்ரா முதலிய கிரேக்கத் தொன்மங்களை எடுத்தாண்டார்.

இடிபஸ் தொன்மம்

இவ்வரைவு இடிபஸ் சிக்கலை மையமிடுவதால், இடிபஸ்தொன்மம் பற்றி அறிய வேண்டியது அவசியமாகிறது. பிராய்டு இடிபஸ் சிக்கல் (Odepus Complex) எனும் சொல்லைக் கிரேக்கத் துன்பியலான இடிபஸ் ரெக்ஸ் என்பதிலிருந்து முதன்முதலாக எடுத்தாளுகின்றார். இடிபஸ் தொன்மம் வருமாறு:

> "கிரேக்கத் தொன்மவியலில் இடிபஸ் பற்றிய கதை காணப்படுகிறது. 'இடிபஸ்' என்ற புராணப்பாத்திரம் முதலில் ஹோமராலும் (Homer) பின்னர் ஹீசியட் (Hesiod) என்பவராலும் குறிப்பிடப்பட்டது.
>
> லூாயி இடிபஸின் தந்தை; லூாயிக்கு பெலாப்ஸ் அடைக்கலம் தந்தான். லூாயி தனக்கு அடைக்கலம் தந்த பெலாப்ஸின் மகனான கீரைசிப்பஸைக் கடத்திவிட்டுத் தெப்ஸ் நாட்டின் மன்னன் ஆனான்; அதனால், லூாயி, 'நீ உன் மகனாலேயே கொல்லப்படுவாய் என்று அப்பல்லோ தெய்வத்தால் எச்சரிக்கப்படுகின்றான். ஆனால், லூாயி அதனைப் பொருட்படுத்தாமல் அயோகாஸ்டா மூலம் ஒரு குழந்தையைப் பெற்றான். மகனின் காலை ஈட்டியால் குத்தி அவனைக் கவனிக்காமல் காட்டில் விட்டு விட்டான். குழந்தை இல்லாமலிருந்த காரிந்த் (Carinth) நாட்டு மன்னனான பாலிப்ஸ் (Polypus) பாதம் வீங்கியிருந்த குழந்தையைக் காப்பாற்றி இடிபஸ் என்று பெயரிட்டு வளர்த்து வந்தான். ஒருநாள் இடிபஸ் டெல்பிக் கடவுளால், 'அவனே அவன் தந்தையைக் கொன்று தாயை மணப்பான்' என்று எச்சரிக்கப்பட்டான். பாலிபாஸையே தன் தந்தை என்றெண்ணி, இடிபஸ் காரிந்த் நாட்டைவிட்டு வெளியேறினான்; வழியில் அறியாது லூாயியைக் கொன்றுவிட்டான்; பின்னர் தெப்ஸ் நாட்டிற்குச் சென்றான். அந்நாட்டிலுள்ள ஸ்பிங்க்ஸின் (Sphinx) புதிரை விடுத்து அயோகாஸ்டாவைத் திருமணம் செய்து அந்நாட்டின் மன்னன் ஆனான். இடிபஸுக்கும் அயோகாஸ்டாவுக்கும் நான்கு குழந்தைகள் பிறந்தனர். ஒழுக்கக்கேட்டின் தண்டனையால் தெபஸ்நாடு கொள்ளை நோயால் பாதிக்கப்பட்டது. பின்னால் உண்மை தெரிந்தவுடன் அயோகாஸ்டா தற்கொலை செய்து கொண்டாள். இடிபஸ், தன் கண்ணைத் தானே குத்திக் கொண்டு, தன் மகன் ஆண்டிகோனுடன் நாட்டைவிட்டு வெளியேறினான்' (Michancel Ariyonals, 1976, 320).

இடிபஸ் பற்றிய இக்கதை வரலாற்று உண்மையை அடிப்படையாகக் கொண்டது. இக்கதை அல்பேனியா, பின்லாந்து, சைப்ரஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளின் நாட்டுப்புறக் கதைகளில் காணப்படுகின்றது. இந்தக் கதையை அடிப்படையாகக் கொண்டு பிராய்டு தமது உளவியற் பகுப்பாய்வுக் கொள்கையை விளக்குகின்றார். 'ஒரு குறிப்பிட்ட வயதில் (3-6) ஆண் குழந்தைகள் தன் தாயார்பால் பற்றும் தந்தையின்பால் அழுக்காறும் கொண்டவர்களாக உள்ளனர். இச்சிக்கலினை, இடிபஸ் தொன்மத்தோடு இணைத்து இதற்கு இடிபஸ் உளச்சிக்கல் எனப் பெயரிடுகின்றார்' (Ibid., 321).

பிராய்டிச நோக்கில் ஆம்லெட்

எர்னஸ்ட் ஜோன்ஸ் என்பவர் முதன்முதலாக ஓர் இலக்கியப் படைப்பை முழுமையான அளவில் உளவியல் பகுப்பாய்வுக்கு உட்படுத்தினார். ஆம்லெட் தனது சிறிய தந்தையைக் கொல்வதற்குக் காலங்கடத்தியமைக்குக் காரணம் அவனது இடிபஸ் மனச்சிக்கல் என்று தமது 'ஆம்லட்டும் இடிபஸும்' என்ற நூலில் விவரித்தார் (மறைமலை, 1979; 119).

அதன்பின்னர் உலகம் முழுவதும் இலக்கியப் படைப்பாக்க முறையிலும், திறனாய்வு நெறியிலும் புதிய சீர்மைகள் தோன்றின. ஜேம்ஸ் ஜாய்ஸ், ஜெர்வுட் ஆண்டர்ஸன், பிரான்ஸ் காப்கா முதலிய படைப்பாளிகளும், எட்மண்ட் வில்சன், லயனல் டிரில்லிங், எஃப்.எல். லூகாஸ் முதலிய திறனாய்வாளர்களும் இடிபஸ் உளச்சிக்கல் கோட்பாட்டின் தாக்கத்திற்கு உள்ளானார்கள்.

மேலைநாட்டின் பரவலாகக் கையாண்ட இப்போக்கு ஆங்கிலக் கல்வியால் தமிழிலும் பரவியது. அவ்வகையில் தொல்பழங்காலம் முதல் இக்காலம் வரையிலான தமிழ் இலக்கியங்களில் இடிபஸ் உளச்சிக்கல் ஊடாடுவதைக் கணிக்க முற்படலாம்.

இந்தியப் புராணங்களில் இடிபஸ்

தாய்மீது மகன் கொள்ளும் இவ் வேட்கையுணர்வு இருவிதங்களில் வெளிப்படலாம். அவை:

1. தொடக்கச் செயற்பாடு
2. உயர்வழிப்படுத்துதல்

1. தொடக்கச் செயற்பாடு

இடிபஸ் உளச்சிக்கல் பண்பாட்டுச் சூழல் முதலிய புறக்காரணிகளால் தடைபடாமல் அப்படியே வெளிப்பட முயல்வதை மனிதனின் தொடக்கச் செயற்பாடு (Primary Process) என்று பிராய்டு குறிப்பிடுகின்றார். (Freud; 1986; 523-533) சமுதாய மதிப்புக்களுக்கு எதிரான இப்பாலியல் உந்துதலின் விளைவு 'அழிவு என்கின்றன இந்தியப் புராணங்கள்.

தேவிபாகவதத்தில் நிகழும் மகிஷாசுரன் வதம், சும்ப, நிசும்ப அசுரர்கள் வதம் போன்றவற்றைக் கூறலாம். உலகிற்கே அன்னையாக விளங்கும் தேவியின் மீது இவ்வசுரர்கள் கொள்ளும் காமம், தாய்மீது மகன் கொள்ளும் பாலியல் வேட்கையின் எதிர்நிலைக் குறியீடு எனக் கொள்ளலாம். சமுதாயம் சார்ந்த கட்டுக்களால், இப்பாலியல் உந்துதல்கள், பெறும் தடையே, அசுரர்களின் வதமாய்க் குறியீடாகிறது எனலாம். இவற்றை இடிபஸ் உளச்சிக்கல் பற்றிய சமயரீதியிலான வெளிப்பாடு என்றும் கொள்ள இடமுண்டு.

2. உயர்வழிப்படுத்துதல்

இடிபஸ் உளச்சிக்கல் பண்பாட்டுச் சூழலால் அமுக்கப்படுகின்றது. இதன் காரணமாக வேறுவழிகளில் மாற்றமுறுவதை இரண்டாம் வகைச் செயற்பாடு (Secondary process) எனவும் அழைப்பர்; இதனைச் சமனிலையாக்கம் (Compromise Formation) என்றும் கொள்வர். அதாவது, முறையற்ற பாலியல் வேட்கை உயர்நிலைப்படுத்தப்படுகின்றது. இத்தகு மாற்றத்தை 'இட் உளவியல்' (Id Psychology) என்பர்.

இடிபஸ் சிக்கல் இட் உளவியலாக வெளிப்போந்தமைக்கு விநாயகர் புராணத்தைச் சான்றாக்கலாம். தாயைப் போலப் பெண் வேண்டும் எனக் குளத்தங்கரையில் காத்திருக்கும் விநாயகர் சந்நியாசியாகவே இந்துப் புராணங்களில் சித்திரிக்கப் படுகின்றார். அதாவது, ஞானமுதல்வனாகவும், அதீத ஆற்றல் பெற்றவனாகவும் பேசப்படுகின்ற விநாயகரின் முறையற்ற பாலுணர்வு உந்துதல் இக்கதையில் உயர்வழிப்படுத்தப்படுகிறது; அதாவது இடிபஸ் சிக்கல் சமனிலையாக்கப்படுகின்றது.

இடிபஸ் சிக்கலும் இறைநெறியும்

தமிழ் இலக்கியமான திருவிளையாடற் புராணத்துள் வருகின்ற மாபாதகம் தீர்த்த படலம், அங்கம் வெட்டின படலம் முதலிய கதைகள் இவ்விடிபஸ் சிக்கலை மையமிட்டுச் செல்லுகின்றன.

மாபாதகம் தீர்த்த படலத்துள், மாபாதகன் ஒருவன் தன் தாயைப் புணர்ந்து தந்தையை வெட்டியதாகவும், அதனால் ஏற்பட்ட பாவம் (மாபாதகம் (அ) பிரம்மகத்தி) பற்றி வருந்தினான் என்றும், இறையருளால் அப்பாவம் நீங்கியதாகவும் உள்ளது.

அடுத்த கதையான அங்கம் வெட்டின படலத்துள், தாயையொத்த குருபத்தினியிடத்து வேட்கையுற்ற சித்தன் என்பவனை இறைவன் குருவடிவாகிப் போரிட்டுக்கொன்ற கதை விவரிக்கப்படுகின்றது.

இவ்விருகதைகளிலும் இடிபஸ் சிக்கல் 'இறையருள்' என்ற புறக் காரணியால் நேர்மறையாகவும் (Positive) எதிர்மறையாகவும் (Negative) இரு நிலைகளில் மாற்றமுறுகிறது. இவ்விரு கதைகளையும் இடிபஸ் தொன்மத்தின் மாற்றீடு எனக் கொள்ளலாம்.

(தொடரும்)

தமிழ் இலக்கியங்களில் நாட்டுப்புறச் சாயல்கள்*

– மு. இளங்கோவன்,
தமிழ் ஆராய்ச்சியாளர்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி – 620 024.

"காம்பில் மணக்கும் மல்லிகை
காதில் மணக்கும் செந்தமிழ்"

என்றார் பாவேந்தர் பாரதிதாசன். இத்தகு இனிமை பொருந்திய செந்தமிழ் மொழியை இயலென்றும், இசையென்றும், நாடகமென்றும் பகுத்துப் பார்த்தனர் பண்டைக் காலத்துப் பாவலர்கள். இத் தமிழினுள் கற்றவர் முதல் கல்லாதவர் ஈறாக அனைவரின் உள்ளத்திலும் புகுந்து, உயிரைத் தொடுவது இசைத் தமிழாகும். இந்த இசைத் தமிழினுக்குத் தாயாகவும் தந்தையாகவும் இருந்தது - இருப்பது நாட்டுப்புறப் பாடலாகும். நாட்டுப்புறப் பாடல்களின் இனிமையில் மயங்கிய சு. சண்முகசுந்தரம் என்னும் கிராமத்துப் பேராசிரியர், நாட்டுப்புறப் பாடல்களை ஒரு தேவதையாக உருவம் காணுகின்றார். "இந்த இசைத் தேவதையின் உறுப்புகள் ஒவ்வொன்றும் ஒரு பாடல், இவளது நெஞ்சமே தாலாட்டு, கண்களே ஒப்பாரி, கைகளே கும்மி, கால்களே ஒயில், தலையே கரகம், தோள்களே காவடி, மூச்சே தெம்மாங்கு" என்று நாட்டுப்புறப் பாடல்களின் முழுவடிவத்தைக் காட்டுகின்றார். ("தமிழில் நாட்டுப்புறப் பாடல்கள்" முன்னுரை ப. 5) இவ்விசை நயம் மிக்க நாட்டுப்புறப் பாடல்களைக் கொண்டே தமிழ் யாப்பிலக்கணங்கள் வரையப்பட்டிருக்க வேண்டும் என்று முனைவர் இரா. திருமுருகனார் போன்ற அறிஞர்கள் கருதுகின்றனர். எனவே, தமிழ்ப்பாடல் வரலாற்றில் நாட்டுப்புறப் பாடல்கள் மிகவும் தொன்மை வாய்ந்தது என்ற முடிவிற்கு வரலாம்.

தமிழ் இலக்கியங்களில் நாட்டுப்புறச் சாயல்கள் என்பது பற்றி அறியும் முன்னர், நாட்டுப்புறப் பாடல்கள் பற்றிய பொதுவான சில செய்திகளைத் தெரிந்து கொள்வது நன்று.

* திருச்சிராப்பள்ளி வானொலியில் இலக்கியப் பேருரையாக ஒலிப்பரப்பானது.

நாட்டுப்புறப் பாடல்கள் 'நாட்டுப்பாடல், நாட்டார் பாடல், நாடோடிப்பாடல், வாய்மொழிப் பாடல், செவிவழிப் பாடல், பாமரர் பாடல், பரம்பரைப்பாடல், கிராமியப் பாடல், ஊர்ப் பாடல், கல்லாதார் பாடல், மக்கள் பாடல், ஏட்டில் எழுதாக் கவிதைகள், மலையருவி, காட்டுப்பூக்கள், வனமலர், காற்றிலே மிதந்த கவிதை, கிராமத்துக் கீதம் என்றெல்லாம் அழைக்கப்படுவதை நாட்டுப்புறவியலறிஞர் சு. சக்திவேல் குறிப்பிடுவர். (நாட்டுப்புறவியல் ஆய்வு 1983) 'நாட்டுப்புறப்பாடல்' என்ற வழக்காற்றினைப் பேராசிரியர் ஆறு. இராமநாதன் நடைமுறைக்குக் கொண்டு வந்தார் என அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

வகைப்பாடு :

இதுவரை கிடைத்துள்ள நாட்டுப்புறப் பாடல்களின் தொகுப்பினைக் கொண்டு, நாட்டுப்புறப் பாடல்களுள் ஏறத்தாழ 211 வகைகள் உள்ளன என்று 'தமிழில் நாட்டுப்புறப் பாடல்கள்' எனும் நூல் சுட்டும். (பக்கம் - 46, 47) இவ்வகைகளை மூன்று பெரும் பகுப்புக்குள்ளும் அந்நூல் அடக்குகின்றது. அவை,

1. பாடலின் உருவம் (அதாவது பாடல் அமைந்துள்ள உருவம் கொண்டு தெம்மாங்கு, சிந்து என்று வகைப்படுத்துதல்)
2. பாடல்களின் கரு
3. பாடுபவர் (அதாவது சிறுவர்கள், இளைஞர்கள் என்று பருவம் சார்ந்த பகுப்பு)

இம்மூன்று பகுப்புக்குள்ளும் பாடல்கள் அடக்கப்பட்டாலும், பெரும்பான்மையானவர்களுக்கு நாட்டுப்புறப் பாடல்கள் என்றதும் தாலாட்டு, ஒப்பாரி, கும்மி, கோலாட்டம், பழமொழி, விடுகதை, தெம்மாங்கு முதலியனவே நினைவுக்கு வரும்.

நாட்டுப்புறப்பாடல்கள் பற்றிய ஆய்வு :

நாட்டுப்புறவியல் ஆய்வு கி.பி. 18 ஆம் நூற்றாண்டளவில் ஐரோப்பாவினை மையமிட்டுத் தொடங்கியது. ஐரோப்பிய ஆதிக்கம் உலகம் முழுவதும் பரவத் தொடங்கியதும், தான் ஆதிக்கத்திற்கு உட்படுத்த நினைத்த மரபுவழிச் சமூகங்களின் பண்பாடு, மரபு, பழக்க வழக்கங்களைத் தொகுக்க ஐரோப்பியர்கள் தொடங்கினர் என்பதைத் திரு. பொ. வேலுசாமியின் ஆய்வுக் கட்டுரை குறிப்பிடும். (நாட்டுப்புறவியல் ஆய்வுக் கோவை - 1 பக்.19) இந்தியாவில் 1970 இல் Inidian Antiquary

இதழில் நாட்டுப்புறக் கதைகள், பழக்க வழக்கங்கள் பதிவு செய்ய முதன்மையளிக்கப்பட்டன. 'பர்சி மாக்வின்' அவர்களின் தொகுப்பு முயற்சி அனைவராலும் போற்றப்படுகிறது. இவரின் தொகுப்பு 'மலையருவி' எனும் பெயரில் சரசுவதிமகால் நூலகம் வெளியிட்டுள்ளது. நாட்டுப்புறப் பாடல்களை அறிஞர்கள் தொகுத்தும், பகுத்தும் ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளனர். திருவாளர்கள் உ.வே.சா., பெ.ந. அப்புசுவாமி, மு. அருணாசலம், கி.வா. சகந்நாதன், சோமலெ, மு. இராமலிங்கம், நா.வானமாமலை, எழில்முதல்வன், அ.மு. பரமசிவானந்தம், மு.வை. அரவிந்தன், அன்னகாமு, இராசாராம், அ.இராகவன், ஆறு. அழகப்பன் முதலானவர்களின் பணி குறிப்பிடத்தக்கனவாகும். இன்றைய நிலையில் நாட்டுப்புறவியல் ஆராய்ச்சியில் திருவாளர்கள் தே.லூர்து, ஆறு. இராமநாதன், சு. சக்திவேல், சு. சண்முகசுந்தரம், ச. முருகானந்தம், ஆ. சிவசுப்பிரமணியன், பி.எல்.சாமி முதலானவர்கள் மிகுந்த அக்கறையுடன் ஈடுபட்டு வருகின்றனர். நாட்டுப்புறப் பாடல்களை அனைவரும் கேட்கும்வண்ணம் திரைப்படம் மற்றும் ஒலிநாடாக்களில் வெளியிட்ட பெருமை முனைவர் விசயலெட்சுமி நவநீதிகிருட்டினன், திரு. புஷ்பவனம் குப்புசாமி, முனைவர் கே.ஏ. குணசேகரன், திரு. கோட்டைச்சாமி ஆறுமுகம், திரு. ஓம். முத்துமாரி, திருவாட்டி கொல்லங்குடி கருப்பாயி, திருவாட்டி பரவை. முனியம்மா, தேக்கம்பட்டி சுந்தரராசன், முதலானவர்களைச் சாரும்.

நாட்டுப்புறப் பாடல்களின் தொன்மை :

தமிழில் கிடைத்துள்ள முழு முதல் நூலான தொல்காப்பியத்தில் நாட்டுப்புறப் பாடல்கள் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இசைத் தமிழுக்கு இலக்கணம் இருந்துள்ளமை இந்நூலின்வழி அறிய முடிகின்றது. தொல்காப்பியம் நாட்டுப்புற இலக்கிய வடிவங்களைப் பல பெயர்களில் குறிப்பிடுகின்றது. அடி வரையறையின்றி வரும் செய்யுளைப் பற்றிக் குறிப்பிடும் தொல்காப்பியர்,

"நூலி னான. உரையினான
நொடியொடு புணர்ந்த பிசியி னான
ஏது நுதலிய முதுமொழி யான.
மறைமொழி கிளந்த மந்திரத் தான.
கூற்றிடை வைத்த குறிப்பி னான" (செய்யுளியல், 158)

என்று பிசி (அதாவது விடுகதை), முதுமொழி (அதாவது பழமொழி) மேலும் குறிப்பு மொழி என்ற மூன்று வகையைக் காட்டுகின்றார்.

"பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்
பாட்டின் இயல பண்ணத்தி இயல்பே"

(செய்-173 நூற்பா)

என்னும் நூற்பாவில் 'பண்ணத்தி' என்ற வகை பற்றிக் குறிப்பிடுகின்றார். பண்ணத்தி என்பது பண்+நந்தி. அதாவது பண்ணை விரும்புவது என்று பொருள். இசைப்பாட்டைப் போல் இனிய ஓசை உடைமையின் இதனைப் பண்ணத்தி என்றார் போலும். பண்ணத்தி என்பது, நாடகம் செய்யுளாகிய பாட்டுமடையும், வஞ்சிப்பாட்டும், மோதிரப் பாட்டும், கடகண்டும்' என்று பேராசிரியர் விளக்கம் தருவார். இவற்றுள் பாட்டுமடை என்பது கூத்தின் இடையிடையே பாடும் பாட்டையே பாட்டுமடை என்றும், வஞ்சிப்பாட்டு என்பது ஓடப்பாட்டு என்றும் அறிய முடிகின்றது. இன்றும் மலையாளத்தில் ஓடப்பாட்டை வஞ்சிப்பாட்டு என வழங்குவர். மேற்கண்ட செய்திகளிலிருந்து பிசி, முதுமொழி, குறிப்புமொழி, பண்ணத்தி என்றெல்லாம் நாட்டுப்புற வடிவங்கள் தொல்காப்பியர் காலத்தில் வழங்கின என்று நம்பலாம்.

தமிழ் இலக்கியங்களில் நாட்டுப்புறச் சாயல்கள் :

இன்று சிறப்புடன் பேசப்படும் இராமாயணம், பாரதக் கதைகள் முன்பே மக்கள் வடிவங்களில் வழங்கின என்பதைச் சங்க இலக்கியங்கள் வழி உணர முடிகின்றது.

"ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"

(புறம்-பாடல்-2)

எனப் புறநானூற்று அடிகளில் பாரதக் கதையும்,

"வெல்போர் இராமன் அருமறைக் கவித்த
பல்வீழ் ஆலம் போல" (அகம் - 70)

எனும் அகநானூற்று வரிகள் இராமாயணக் கதையையும் குறிப்பாக உணர்த்துகின்றன. இவை போன்ற ஓரிரு சான்றுகள் நாட்டுப்புறப் பொருண்மைகளைக் காட்டுவனவாக சங்க இலக்கியங்களில் உள்ளன.

எனினும், சேரநாட்டு இளங்கோவின் சிலப்பதிகாரத்தில் தான் பல்வேறு வகையான வரிப்பாடல்கள், வள்ளைப் பாடல்கள், பந்தடிக்கும் பாடல்கள், ஆய்ச்சியர் பாடும் பாடல்கள் முதலானவற்றை அறிய முடிகின்றது. நாட்டுப்புறப் பாடல்களின் உயிர்நாடியாக இருப்பன உரையாடல் முறையிலான ஓசை நயம் பொருந்திய பாடல்களாகும். இவ்வுரையாடல் முறையை 'எதிர்ப்பாட்டு' என்று எம்முன்னோர்கள் வழங்கினர். சிலப்பதிகாரக் கானல் வரியில் கோவலன், மாதவி பாடும் ஆற்றுவரிப்பகுதி இங்குச் சுட்ட வேண்டிய பகுதியாகும். மாதவியின் மனம் மகிழ கோவலன் பாட்டிசைக்கத் தொடங்கினான். எனினும், இந்தப் பாடல்கள்தான் இருவரின் பிரிவுக்கும் காரணமாய் அமைந்தன.

கோவலன் காவிரியைப் பெண்ணாக உருவகித்தான். சோழ அரசன் காவிரிப் பெண்ணை மணந்தவன். இவன் காவிரியை விடுத்து வடதிசைக்கண் உள்ள கங்கை என்ற பெண்ணையும் மணந்தான் எனினும், காவிரிப் பெண் கற்புள்ள குலமகள் என்பதால், சோழ அரசனுடன் ஊடவில்லை எனும் பொருளமைத்துத்,

"திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோல் அதுவோச்சிக்,
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென்று
அறிந்தேன் வாழி காவேரி"

(சிலம்பு - கானல் வரி)

என்று மணந்தவளை விடுத்துக், கணவன் வேறொருத்தியை விரும்பினாலும் குலமகளான மனைவி ஊடல் கொள்ளாமல் இருப்பது அவளின் உயர் பண்பைக் குறிக்கும் என்று பாடினான். இதனைக் கேட்ட மாதவி, தன்னை மறைமுகமாக இப்பாடல் சுட்டுகின்றது என்று உணர்ந்து, இவன் தன்னிலை மயங்கினன் எனக் கொண்டு, தானும் வேறு ஒரு குறிப்பினைப் பொதித்து,

"மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ ஆடை அதுபோர்த்துக்
கருங்கயற்கண் விழித்தொல்கி
நடந்தாய் வாழி காவேரி!
கருங்கயற்கண் விழித்தொல்கி
நடந்தவெல்லாம் நின்கணவன்
திருந்து செங்கோல் வளையாமை
அறிந்தேன் வாழி காவேரி"

(சிலம்பு - கானல்வரி)

என்று பாடுகின்றாள். இங்குச் சுட்டப்படும் செய்தி என்னவெனில், ஆணும், பெண்ணும் மாறி மாறிப் பாடல் இசைக்கும் முறைமை இளங்கோவடிகளின் காலத்திலேயே இருந்துள்ளது என்பதுதான்.

சிலப்பதிகாரத்தில் எதிர்ப்பாட்டு இசைக்கும் தன்மையுடன் மட்டுமன்றி, வரிப்பாடல்கள் பலவும் இடம்பெற்றுள்ளன. மேலும் 'ஆய்ச்சியர்' என்று அழைக்கப்படும் முல்லை நில மக்கள் ஆடிப்பாடி மகிழ்ந்த பாடல்களும் சிலம்பில் இடம் பெற்றுள்ளன.

பசுவின் கன்றையே குறுந் தடியாகக் கொண்டு விளாங்கனியை உதிர்த்த திருமாலின் இனிய குழலோசையைக் கேட்க ஆர்வமுடன் இருந்த ஆய்ச்சியர்கள்,

"கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் ஆனுள் வருமேலவன் வாயில்
கொன்றையம் தீங்குழல் கேளாமோ தோழி

(சிலம்பு - ஆய்ச்சியர்குரவை - 19)

பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் ஆனுள் வருமேலவன் வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழி

(சிலம்பு - ஆய்ச்சியர்குரவை - 20)

என்று பாடுகின்றனர். மேலும், சிலப்பதிகார வாழ்த்துக் காதையில் அம்மானை வரி, கந்துகவரி, ஊசல்வரி என்று மூவேந்தர்களைப் புகழ்ந்து பாட அடிகளார் வரிப்பாடல்களைக் கையாண்டுள்ளார். இவர்களுள் தென்னவனாகிய பாண்டியனைப் புகழ்ந்து பாட கந்துகவரி எனும் பந்தாட்டப் பாடல் ஓசை இடம்பெற்றுள்ளது. பந்தாட்டத்திற்கு ஏற்ற ஓசையை அடிகளார் ஆண்டுள்ளது அவரின் புலமைத் திறத்தைக் காட்டுகின்றது.

"பொன்னிலங்கு பூங்கொடி பொலஞ்செய் கோதை வில்லிட
மின்னிலங்கு மேகலைகள் ஆர்ப்ப ஆர்ப்ப எங்கணும்
தென்னன்வாழ்க வாழ்கவென்று சென்றுபந்து அடித்துமே
தேவர்ஆர மார்பன் வாழ்க என்று பந்து அடித்துமே;

பின்னும் முன்னும் எங்கணும் பெயர்ந்துவந்து எழுந்துலாய்
மின்னுமின்னு இளங்கொடி வியனிலத்து இழிந்தெனத்
தென்னன்வாழ்க வாழ்கவென்று சென்று பந்து அடித்துமே
தேவர்ஆர மார்பன் வாழ்க என்று பந்து அடித்துமே"

(சிலம்பு, வாழ்த்துக்காதை 20, 21)

என்ற பந்தடிக்கும் ஓசை இப்பாட்டினில் அடிகளாரால் காட்டப்படுகின்றது

(தொடரும்)

தமிழ்க்கடவுள்

தமிழகக் கோயிற் கலைச் செல்வர்

தி . இராசமாணிக்கம் , பி.ஏ., பி.காம்., விசாரத்,

கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் (ஓய்வு)

பொள்ளாச்சி.

இந்து சமயக் கடவுள்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தலைகளும், இரண்டுக்கு மேற்பட்டகைகளும் அமைந்துள்ளதை ஒருகுறையாகக் கருத்து தெரிவித்துள்ளார் வி.ஏ. வின்செண்ட் ஸ்மித் என்பார். இவ்வாறு இறைவடிவங்களுக்குப் பல தலைகளும் கைகளும் உள்ளதைக் கற்பனை என ஒதுக்கக்கூடாது; அவற்றிற்கு அடிப்படையான தத்துவங்கள் உண்டு.

தமிழ்க் கடவுள் எனப் போற்றி பரவப்பெறும் முருகப் பெருமானுக்கு 6 தலைகள், 12 கைகள் அமைக்கப்படுகிறது. இதன் இயல்புகள் செயல்கள் ஆகியவற்றைப் பார்ப்போம்.

ஆறு முகங்களையும் ஆறு அறிவைக் குறிப்பதாகக் கொள்ளலாம். குறிப்பிட்ட குணத்தில் மிக்கானை அக் குணமாகக் கொள்வது தமிழ் இலக்கிய மரபு. திருஞானசம்பந்தப் பெருமானை ஞானத்தின் திருவுரு என்றும், கண்ணப்பரை அன்பின் திருவுரு என்றும் போற்றுவது போன்று, இவனை அறிவின் திருவுரு எனக் கருதலாம். எனவே இவன் யாவற்றையும் அறிந்தவன் என்பதாகிறது. இதை ஆங்கிலத்தில் "Omniscient" என்பர்.

சிவபெருமானது நெற்றிக்கண்களினின்றும் தோன்றிய ஆறு தீப் பொறிகள் வான வெளியில் (ஆகாயம்) சென்று, வாயு (காற்று), அக்னி (தீ), கங்கை (நீர்) ஆகியவற்றால் சுமக்கப்பெற்று, மண்ணில் உள்ள சரவணப் பொய்கையில் ஒரு திருமுருகனாகத் தோற்றம் பெற்றன. இவ்வாறு ஐம்பெரும் பூதங்களுடன் தொடர்புடைய இவனது 5 தலைகளை ஐம்பெரும் பூதங்களாகக் கொள்ளலாம். உலகில் உள்ள எல்லாப் பொருள்களும் ஐம்பூத சேர்க்கையால் உண்டானவாம். அவையின்றி, எப்பொருளும் இல்லை. எனவே இவனை அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்தவனாகக் கொள்ளலாம். இதை ஆங்கிலத்தில் "Omni-present" என்பர்.

ஆறுதலைகளில் 5 தலைகளை ஐம்பெரும்பூதங்களாகக் கொண்டமையால், ஆறாவது தலையைப் பகுத்தறிவாகக்

கொள்ளலாம். பகுத்தறிவு உலகை இயக்கும் சக்தி. எனவே இவனை ஒப்புவமையில்லா முடிவிலாற்றல் உடையவனாகக் கருதலாம். இதை ஆங்கிலத்தில் "Omnipotent" என்பர்.

இந்து சமயத்தில் ஆறு சமயங்கள் உண்டு என்பர். "அறுவகைச் சமயம் வைத்தாய்" என்பர் நாவின் மன்னர். அறுவகைச் சமயங்கள் எவை என்பது பற்றி கருத்து வேறுபாடுகள் உள்ளன. அவற்றில் ஆதி சங்கரரால் வகுக்கப்பட்ட ஆறு சமயங்கள் அடங்கும். அவையாவன: சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம். கௌமாரம், சௌரம். சைவத்தில் சிவ பெருமானும், வைணவத்தில் திருமாலும், சாக்தத்தில் சக்தியும், காணாபத்தியத்தில் பிள்ளையாரும், கௌமாரத்தில் முருகனும், சௌரத்தில் சூரியனும் ஆதியும் அற்ற முழுமுதற்கடவுளாக வணங்கப்படுகின்றனர். முருகப் பெருமானது ஆறுதலைகளும் இந்த ஆறு சமயக்கடவுள்களைக் குறிக்கின்றன என்றும், இவனைத் தொழுவது இந்த அறு சமயக் கடவுள்களை வணங்குவதற்கு ஒப்பாகும் என்றும் ஆன்றோர் கூறுவர்.

சாதாரண மனிதனைக் காட்டிலும் வானவர்கள் ஆற்றல் மிக்கவர்கள் என்பதைச் சுட்டிக்காட்ட அவர்களுக்கு 4 கைகள் உருவாக்கப்பட்டன. இறைவனது இணையற்ற பேராற்றலைக் குறிக்க 8, 16, 32 கைகள் அமைக்கப்பட்டன. சிவபெருமானது திரிபுராந்தக, சரபேச வடிவங்கள், திருமாலின் திரிவிக்ரம், நரசிம்ம வடிவங்கள் ஆகியவற்றை உதாரணங்களாகக் கூறலாம். முருகன் தன் ஒப்பரிய பேராற்றல் காரணமாகக் குழந்தைப் பருவத்திலேயே படைக்கலம் எதுமின்றி வானவர் மகானாம் இந்திரனைப் புற முதுகிடச் செய்தான் எனப் "பரிபாடலில்" கூறப்பட்டுள்ளது. எனவே இவனுக்கு 12 கைகள் அமைக்கப்பட்டன; இவன் "வானவர்களின் தானைத் தலைவன்" எனப் போற்றிப் புகழப்படுகிறான்.

இவனது 6 தலைகள் 12 கைகள் பற்றி அருளாளர்கள் என்ன கூறியுள்ளார்கள் என்பதை இனிப் பார்ப்போமா!

நக்கீரர் தம் திருமுருகாற்றுப்படையில் "மாயிருள் ஞானம்" எனத் தொடங்கி "நகையமர்ந்தன்றே" என்பது ஈறாக உள்ள பகுதியில் ஆறுமுகங்களின் இயல்புகளையும், "வண்புகழ் நிறைந்து" என்பது முதல் "பாற்பட இயற்றி" என்பது வரையில் உள்ள பகுதியில் 12 கைகளின் செயல்களையும் விரிவாகக் கூறியுள்ளார். குமரகுருபர சுவாமிகள் தம் "கந்தர்கலி வெண்பா"வில் "விண்மலிதோள்" எனத் தொடங்கி

"தெய்வமுகத்தாமரையும்" என்பது ஈறாக உள்ள பகுதியில் ஆறு முகங்களின் இயல்புகளையும், "ஆரமுதம்" எனத் தொடங்கி "விதிர்க்கும்கரமும்" என்பது வரையில் உள்ள பகுதியில் 12 கைகளின் செயல்களையும் அருளியுள்ளார். அருணகிரிப்பெருமான் "ஏறுமயில் ஏறி" எனத் தொடங்கும் தம் திருப்பாடலில் ஆறு முகங்களின் செயல்களைக் கூறுகிறார்.

மேலே குறிப்பிட்ட திருவருட் செல்வர்களின் திருவாக்குகளைத் தொகுத்துக் காணும்போது இறைவனது அறப்பண்புடன் மறப்பண்பும், இல்லற மாண்பும் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. அது வருமாறு :

அறப்பண்பு :

"ஞான பண்டித சாமி", "ஞான பண்டித நாதர்" என்ற அருணகிரி வள்ளலின் திருவாக்குக்களின்படி ஒருமுகம் ஞானப் பிழம்பாக இருக்க, அதன் ஒளியால் அஞ்ஞான இருள் அகல, இவன் உதிக்கும் சூரியன் போன்று ஒளிவீசித் திகழ்கிறான். எனவே இவனை,

> **"உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு**
> **பலர் புகழ் ஞாயிறு"** (வரிகள் 1-2)

உடன் ஒப்பிடுகிறார். நக்கீரர்தம் "திருமுருகாற்றுப்படை"யில் இரண்டாவது முகம் தன் அடியை அடைக்கலமாக அடையும் அடியார்களுக்கு அருள, அதற்கு ஏற்ப ஒரு கை வானவர்களுக்கு அமுதை வழங்க, இரண்டாவது கை உலகம் வாழ மழையைப் பொழிய, மூன்றாவது கை இடையில் வைக்கப்பட்டுள்ளது. மூன்றாவது முகம் வேள்வியைக் காவல்புரிய, அதற்கு இயைய ஒரு கை மணியை அடிக்க, இரண்டாவது கையில் உள்ள தொடி என்ற அணிகலன் வேள்விப்பலியை உண்ணும் முத்திரையைக்குறிக்கும் வகையில் சுழன்று காணப்படுகிறது. "வேதமுங் கலைகள் யாவும் விளம்பிய புலவ போற்றி" என்ற இராமலிங்க சுவாமிகள் திருவாக்குப்படி, மறைகளுக்கு எட்ட மெய்ப்பொருளை நான்காவது முகம்விளக்க அதற்கு இயைய ஒரு கை மார்பின் மீது இருக்க, மற்றொரு கையில் மலர் காணப்படுகிறது.

இவ்வாறாக 4 முகங்களும் 7 கைகளும் இவனது அறப்பண்பை வலியுறுத்துகின்றன.

மறப்பண்பு :

ஐந்தாவது முகம் பகைவரை அழிக்க, அதற்கு ஏற்ப ஒரு கையில் வேற்படையும், இரண்டாவது கையில் பரிசையும், பகைவருடன் போர் புரியச் செல்லும் இவன் தன் ஊர்தியான யானையைச் செலுத்த மூன்றாவது கையில் அங்குசம் வைத்திருக்க, நான்காவது கை யானைப் பாகனைப் போன்று தொடை மீது வைக்கப்பட்டுள்ளது.

இங்ஙனம் ஒரு முகமும் நான்கு கைகளும் இவனது மறப் பண்பைச் சுட்டிக் காட்டுகின்றன.

இல்லற மாண்பு :

இறைவன் இறைவியுடன் இருப்பது உலகம் வாழையடிவாழையாகத் தழைத்து இருக்கத்தான். ஆறாவது முகம் வேழமடந்தை மற்றும் வேட மடந்தையுடன் காதல் விளைவிக்க, அதற்கு இயைய பன்னிரெண்டாவது கையில் மண மாலை உள்ளது.

இல்லறத்தின் மாண்பினை இவனது ஒரு தலையும் ஒரு கையும் குறிக்கின்றன.

மேலே கூறியவற்றினின்றும் இவனது அறப்பண்பின் சிறப்பினை உய்த்து உணரலாம்.

முருகப் பெருமான் எழுந்தருளியுள்ள தலங்கள் ஆறுபடை வீடுகள் எனப் போற்றி வணங்கப்படுவது யாவரும் அறிந்த ஒன்று. அவை இவனது இயல்புகளுடன் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளன என்பதைப் பார்ப்போம் :-

1. திருப்பரங்குன்றம்

இங்கு இவன் யானை தன் அணங்கான தெய்வயானையை மணம் புரிந்ததாகப் பரவப்படுகிறது.

இது இவனது இல்லற மாண்பினைச் சுட்டிக்காட்டுகிறது.

2. திருச்செந்தூர்

சூரன் ஆகியோர் மீது படையெடுத்துச் செல்லும்போது, இவன் இங்கு படை வீடு அமைத்ததாகப் போற்றப்படுகிறது.

இது இவனது மறப்பண்பினைக் குறிக்கிறது.

3. திருவாவினன்குடி

இங்கு இவன் இறைவன் மற்றும் இறைவியால் "ஞானப்பழம்" என அழைக்கப்படுகிறான். இது இவன் "ஞானப்பிழம்பு" என்பதை வலியுறுத்துகிறது.

4. திருவேரகம்

இங்கு இவன் தன் தந்தையான சிவபெருமானுக்கு "ஓம்" என்ற பிரணவப் பொருளுக்குப் பொருள் உரைத்ததாகப் பரவப்படுகிறது. இது இவன் மறைகளுக்கும் எட்டா மெய்ப் பொருளை விளக்குவதை உணர்த்துகிறது

5. பழமுதிர்சோலை

இங்கு இவன் தமிழ் மூதாட்டியான ஔவையாருக்கு அருள் புரிந்ததாகப் புகழப்படுகிறது. இது அடியார்கள் வேண்டியதை வேண்டியவாறு அளிக்கும் இவனது அருட்திறத்தினைக் குறிக்கிறது.

6. குன்று தோறாடல்

மேலே குறிப்பிட்ட 5 தலங்கள் நீங்கலாக ஏனையதலங்கள் எல்லாம் இதில் அடங்கும். குன்றின் மேலிட்ட விளக்கின் ஒளியால் நாற்புறமும் பரவியுள்ள இருள் சிதறுண்டு போவது போன்று, ஞானப் பிழம்பாகிய இவனது அருள் ஒளியால் அடியார்களது மனதில் உள்ள அஞ்ஞானம், ஆணவம் ஆகியவை அகன்று விடுகின்றன.

இவ்வாறு இவன் எழுந்தருளியுள்ள இவனது நான்கு தலங்கள் இவனது அறப்பண்பை உணர்த்துவனவாக உள்ளன.

உலகவாழ்வில் அல்லல்பட்டு அவதியுறும்போது ஆறுதலை அளிக்கும் ஆறு தலைகளைக் கொண்ட அறுமுகச் செவ்வேளின் மலரடிகளைச் சிந்தித்து வந்தித்து உய்வோமாக.

பாவலரேறு தமிழ்க்களம்

பாவலரேறு ஐயா பெருஞ்சித்திரனார் அவர்கள் துயில் கொள்ளும் சென்னை - மேடவாக்கம் செந்தமிழ் நகரில் 'பாவலரேறு தமிழ்க்களம்' என்னும் அமைப்பினை நிறுவ முயன்று வருகிறோம்.

'பாவலரேறு பெருஞ்சித்திரனார் அறக்கட்டளையின் சார்பில்எழுப்பப்பெறும் நினைவு நிலையத்தில் காட்சியகம், நூல்நிலையம்,அரங்க மண்டபம் ஆகியவை இடம்பெற உள்ளன. தமிழ்மொழி இனநல மேம்பாட்டு முயற்சிகளுக்கான செயற்களமாக இத்தமிழ்க்களம் திகழும்.

ஐயா படைப்பின் அடுக்கடுக்கான கையெழுத்துப் படிகள் ஓவிய வரைவுகள் போற்றிப் புழங்கிய பொருள்கள் ஒளிப்படத் தோற்றம் பற்பல, பெருந்தண் வாழ்க்கை மாட்சியைக் காட்டுமாறு சிறந்த காட்சிக் கூடம் அமைத்தல் அன்றியும், அறிஞர் பெருந்தகை ஆராய்ந்து பயின்ற செறிவுறு நூல்களும் சிறப்புறப் படைத்தவும் பற்பல துறையினும் நாளும் வளரும் நற்பெரு நூல்களும் தாங்கி ஆய்வில் முனைவோர் மாணவர் மற்றும் மக்கள் அனைவரும் பயன்கொள் நூலகம் ஆக்கலும், அருந்தமிழ் அன்பர்கள் பெருந்திரளாக ஒருங்கு கூடிக் கலந்துரை யாடவும் வினைபடு திட்ட விளக்கங் காணவும் இனைய பணிகளுக் கேற்ற கூடமாய் அரங்க மண்டபம் அமைத்தலும் இவற்றால் துறைதோறும் தூய தமிழ் நிறைவுற்று நெடிதிலங்கவும் வினைத்திறத்தில் வியன்தமிழர் முனைப்புற்று முன்னேறவும் சூழ்வுற்ற தளையறுத்து வாழ்நிலத்தின் வளம் பெருக்கவும் உலகம் போற்றும் உயர்பணி செய்தற்கு இலகுபுகழ்ப் பாவல ரேறு தமிழ்க்களம் ஏற்ற வினைக்களமாக அமைதலின் ஆற்றல் வாய்ந்த அருந்தமிழ் உணர்வினர் சாற்றுநல் லறிஞர் ஆர்வலர் யாவரும் உறுபொருள் வழங்கி ஒத்துழைத்துச் செறிபுகழ்ப் பெரும்பணி செய்குவம் நன்றே.

தொடர்பு முகவரி : **'பாவலரேறு தமிழ்க்களம்'**
தாமரை பெருஞ்சித்திரனார்,
5, அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.

பாவேந்தர் நினைவுகள்

(டாக்டர் மு. துரைசாமி, மலேசியா)

(டிசம்பர் – 95, பக். 136 ன் தொடர்ச்சி)

8. புரட்சிக் கவிஞரைப் போற்றியே வாழ்ந்தார்

சின்ன வயதில் இன்னொரு நிகழ்ச்சியும்
நடந்ததாய்க் கவிஞர் நவின்றார் மேலும்:
பொடிப்பயல் என்றுநம் புரட்சிக் கவிஞரை
மதிப்பதே இலையாம் மற்றொரு புலவரும்.
பெரியவர் வயதில் என்பதைக் கருதிக்
கவிஞரும் அதனைக் கடுமையாய்க் கருதார்.
எனினும் அவரும் ஏற்றதோர் நாளில்
தமது தவற்றை உணர்வார் என்றே
புரட்சிக் கவிஞரும் பொறுமையாய் இருந்தார்.
வேண்டிய வாய்ப்பும் விரைவில் வந்தது.
அப்பெரும் புலவர் ஆக்கிய நூலை
வெளியிடு தற்கு விளம்பரம் செய்து,
இளையநம் கவிஞரை இறுமாப் புடனே.
'நீயும் வாயேன்!' என அழைத் தாராம்!
கவிஞரும் ஏற்றொரு கருத்துடன் சென்றார்.
அந்தி மாலையில் கூடிய அவையில்,
மேடையில் புலவர் மிடுக்காய் இருந்தார்.
அவையில் இருந்தநம் கவிஞர் எழுந்து
மேடையின் பக்கம் மெதுவாய்ச் சென்றே,
அப்பெரும் புலவரை அழைத்தார். ஓமே
அலட்சிய மாக அவரோ, 'என்ன?'
என்றே கேட்க, 'இறங்கி வாரும்
சொல்கிறேன்' என்று சொன்னார் கவிஞர்.
அந்தப் புலவர் வந்தார் இறங்கி,
கவிஞர் அவரின் அருகில் நெருங்கித்
'தலைப்பே தவறாம் உமது நூலில்!'
என்று கூறவும், 'என்னநீ சொல்வது?'
என்றுஅப் புலவர் ஏளன மாகக்
கவிஞரைக் கேட்டார். கவிஞர் கூறினார்!
'நூலின் பெயரை நோக்கில் இலக்கணப்
பிழையொன் றிருத்தலைப் பெரியீர் அறிவீர்'
என்றதை விளக்கமாய் எடுத்துரைத் தாராம்.
பிழையினை உணர்ந்த புலவர் பின்னர்க்
கைகால் நடுங்கிக் கவிஞரைப் பின்புறம்
விரைவாய் இழுத்து வேண்டிக் கொண்டார்:
'சுப்பு இரத்தினம்! எப்படி யுரைப்பேன்
எனது நிலையை? இப்பிழை தன்னை
எடுத்துநீ கூறிலென் மதிப்பென் னாகும்?
இவணுளோர் எவருமித் தவறினைச் சுட்டினால்
என்னநான் செய்ய?' என்றவர் வேண்டினார்.
புலவரின் நிலைமையைப் புரிந்துபுன் னகைத்தே,
'அஞ்ச வேண்டிய அகத்தியம் இல்லை.
கூறிய தலைப்பைக் குறுகப் பிளந்தே
இப்படிப் பொருளை இயம்பிடில் தவறிலை!'
என்றுநம் கவிஞர் எடுத்து விளக்கவும்,
அச்சமும் அகன்றே அப்பெரும் புலவர்
கவிஞரின் கைகளை இறுகப் பற்றிச்,
'சுப்பு! நின் புலமை செப்புதற் கரிதாம்!
இப்பெரும் உதவியை என்றும் மறவேன்.'
என்றே பலமுறை நன்றி நவின்றார்!
அன்றுநாள் தொடங்கி அப்பெரும் புலவரும்
புரட்சிக் கவிஞரைப் போற்றிவாழ்ந் தாரே!

விகுதியின் பிறப்பு –

ஒரு புதிய கருத்து

முனைவர் மலையமான்

காஷ்மீரத்திற்குப் படிக்கட்டாக உள்ள ஜம்முதாவி நகரத்தின் ஓரத்தில் சிந்து நதியின் கிளையாறு பாய்கிறது. அந்த ஆற்றில் மணலே கிடையாது. அங்குப் பெரிய கூழாங்கற்களே உள்ளன. மலையிலிருந்து அந்த ஆறு அடித்துக் கொண்டு வரும் கற்களின் முனைகள் மழுங்கி அந்தப் பெருங் கூழாங்கற்கள் அங்கு உள்ளன. 500 கிலோ மீட்டர் தள்ளிச் சென்று அந்தக் கிளையாற்றைப் பார்த்தால், அங்குப் பெரிய கூழாங்கல் இருக்காது. அவை சிறு கூழாங்கற்களாக மாறி இருக்கும்.

மொழி என்பதும் ஒருவிதத்தில் ஆறு போன்றதுதான். அதிலுள்ள நீளமான சொற்கள் கால வெள்ளத்தில் நீளம் குறைந்து குறுகிவிடும். இது இயற்கையின் நியதி. திருஞானசம்பந்தர் என்ற சொல், நாளடைவில் முற்பகுதி நீங்கி, சம்பந்தர் என்ற சொல்லாட்சியைப் பெற்றுவிடுகிறது. மங்கையர்க்கரசி என்ற பெயர் காலப்போக்கில் பிற்பகுதி மறைந்து, மங்கை என்ற அளவிலேயே ஆளப் பெறுகிறது. திருநெல்வேலி என்பது முன்னும் பின்னும் நீங்கி, நடுப்பகுதிமட்டும் நெல்லை என்று வழங்கப்படுகிறது.

இப்படிப்பட்ட சொல் குறுக்கத்திற்கு, முயற்சிச் சுருக்கம், எளிமைப்படுத்தல், நேர மிச்சம், சோம்பல் தனம் முதலியவை காரணமாக அமையும் (முருகேசன் என்ற சொல் முருகேஷ் என்று குறுகிவிடுவதற்குப் பிற மொழி மோகமே காரணமாகும்)

சொல் குறுக்கப் பிற மொழிகளிலும் உண்டு. ஆங்கில மொழியில் 'மார்க்கெட்' என்ற சொல் 'மார்ட்' என்றும் 'ரெஃப்பிரிஜிரேட்டர்' என்பது 'ஃப்பிரிஜ்' என்றும் 'ஃபெனேடிக்' என்பது 'ஃபேன்' என்றும் 'அட்வர்டைஸ்மென்ட்' என்பது 'அட்' என்றும் குறுக்கம் பெற்று விடுகிறது.

சிறிய கூழாங்கல் ஆற்றின் தூரத்திற்கு அடையாளச் சின்னம் ஆவது போல, சொல்லின் குறுக்கம் மொழியின் தொன்மை நீட்சிக்கு அடையாளச் சின்னமாக அமைகிறது எனலாம். தற்போதும், வீட்டில் முழுப் பெயரால் முதலில் அழைக்கப் படுபவன், நாளடைவில், அதன் குறுகிய பகுதியால்

விளிக்கப்படுவது கண்கூடு. சந்திரசேகரன் என்ற பெயர் சந்துரு என்றோ, சேகர் என்றோ குறுகி விடுகிறது. இந்த நிலை, சங்ககாலத்திலும் இருந்திருக்கிறது. பிசிராந்தையார் என்ற புகழ் ஏந்திய புலவருடைய பெயரில் உள்ள 'ஆந்தை' என்பது 'ஆதன் தந்தை' என்பதன் குறுக்கம் ஆகும். இந்தச் சொல் குறுக்கம், மனிதனின் பெயர், இடத்தின் பெயர் என்ற அளவில் நின்றுவிடவில்லை. இது பொருட்பெயரின் பலநிலையிலும், வினைச் சொல்லிலும் அமைந்துள்ளது. 'வருகிறான்' என்பது 'வறான்' என்றும் 'இருக்கிறான்' என்பது 'கீறான்' என்றும் சிலருடைய பேச்சில் குறுக்கம் பெற்று விடுகிறது.

ஒரு சொல்லின் முதலில் அல்லது இறுதியில் இரு குறில்கள் இருந்தால் அவை சொல் குறுக்கத்திற்கு வழி அமைக்கின்றன. அவை இரண்டும் இணையும் போது இரண்டாவது குறில்எழுத்து மறைந்துவிடுகிறது. முதலாவதாக உள்ள குறில் நெடிலாக மாறிவிடுகிறது. இதைப் பின் வரும் எடுத்துக்காட்டு விளக்கும்.

மரங்கள், பொதுவாக உயரமாய் வளரும். ஆனால் ஒரு மரம் மட்டும் குறிப்பிட்ட உயரம் அடைந்ததும். பக்கவாட்டில் கிளைகளை நீட்டிப்பரவுகிறது. அந்த நெடுங்கிளைகள் விழுந்து விடாதபடி, விழுதுகளை அது விடுகிறது. (இதற்காகவே, இயற்கை இப்படி அம்மரத்திற்கு உதவி செய்கிறது.) அந்த மரம் ஏனைய மரங்களைவிட அகலமாகப் பரந்து வளர்வதால், அது தொடக்கக் காலத்தில் ' அகல மரம்' எனப்பட்டது. 'அகலம்' என்ற சொல்லில் முதல் இரு எழுத்துகள் குறில்கள். இவை இரண்டும் ஒன்று சேரும் நிலையில் இரண்டாம் குறிலான 'க' கெடுகிறது. முதல் குறிலான 'அ' என்பது 'ஆ' என்று நெடிலாகிறது. எனவே, அகல என்ற சொல் குறுகி 'ஆல' என்றாகி 'ஆலமரம்' என்று பிற்காலத்தில் ஆளப்படுகிறது.

'பகல்' என்றால் பகுத்தல் என்று பொருள். (நாளின் ஒளியுள்ள பொழுதாகப் பகுக்கப்பட்ட காலமே பகல் ஆகும்) இதில் குறுக்கம் நேரும்போது 'இரண்டாம் குறிலான 'க' கெடுகிறது. முதல் குறிலான 'ப', 'பா' என நெடிலாகிறது. இப்படி, பகல் - பால் என்று குறுகிவிடுகிறது. (எடு - அறத்துப்பால்). 'பகுத்தூண்' என்பது இதே முறைப்படி 'பாத்தூண்' என்றாகிறது. (எடு பாத்தூண் பரீஇயானை - கு-) முதுமை + இல் - மூதில் என்று மாறுவதும் பெருமை + ஊர் - பேரூர் என்று சுருங்குவதும் இங்கு நினைவு கூரத் தக்கது (இதை 'ஆதி நீடல்' என்று பண்புப் பெயர்ப் புணர்ச்சியில் நன்னூல் அமைக்கும்)

இத்தகைய சொற்குறுக்கம் பற்றி யான் முன்னரே என்னளவில் சிந்தித்திருப்பினும், அறிஞர் சாத்தூர் சேகரன், இதை மொழியியல் விதியாக்கித் தந்த பெருமைக்கு உரியவராக உள்ளார்.

'மகன்' என்ற சொல் மேற்சொன்ன முறைப்படி 'மான்' என்றாகிறது. எனவே மலையமகன் (மலைநாட்டு மகன்) என்பது 'மலையமான்' என்று சொற்குறுக்கம் உறுகிறது. அதியனுடைய மகன், என்பது அதியமான் என்றாகிறது.

மரங்களின் "தொகுப்பு" - இம்முறைப்படி 'தோப்பு' என்று சுருங்குகிறது. துகள் என்பதும் தூள் என்றாகிறது. மனக்கோட்டம் தீர்க்கும் நூல் போறலின் "நூல்" என்பது புத்தகத்திற்குக் காரணப் பெயர் என்று காட்டுவார் பவணந்தியார். சுவடி, அறம், பொருள், இன்பம் ஆகியவற்றைப் பற்றி நுவல்கிறது. எனவே 'நுவல்' என்ற சொல் மேலுரைத்த முறைப்படி ('வ' கரம் கெட்டு 'நு' கரம் நீண்டு) நூல் என்று குறுக்கம் பெற்றுள்ளது.

'தரு' என்பது 'தா' என்றும் 'வரு' என்பது 'வா' என்றும் இம்முறையை ஒட்டி மாறியுள்ளது போலும். முதனிலை நீண்ட தொழிற் பெயர்களிலும், இவ்விதியின் நிழல் படிந்துள்ளது. விடு - வீடு என்றும் கெடு - என்பது கேடு என்றும், சுடு என்பது சூடு என்றும் மாற்றம் பெற்றுள்ளது (ஆனால், இதில் குறுக்கமோ இரண்டாம் குறிலின் மறைவோ இல்லை) (ஒரு என்பது ஓர் என்றும் இரு என்பது ஈர் என்றும் மாறுவது இங்கு நினைக்கத்தக்கது)

இந்தச் சொற்குறுக்க விதி, தமிழ்த்தாயின் கடைசி மகளான, மலையாள மங்கையின் நாவிலும் மாறாமல் உள்ளது. 'மகனே' என்ற சொல் மேல் கூறிய முறைப்படி மானே என்று சுருங்குகிறது. இச்சொல் மேற்கொண்டு ஒரு திரிபைப் பெறுகிறது. அதாவது 'ஆ' காரம் 'ஓ' காரம் ஆகிறது. அதன்படி 'மானே' என்பது 'மோனே' என்ற விளிப்பெயராக இன்றும் அம்மொழியில் இருக்கிறது. இவ்வாறே 'மகளே' என்பது 'மோளே' என்று குறுக்கம் பெற்றுள்ளது.

இப்படிப்பட்ட 'சொற்குறுக்கம் சொல்லின் முதலில் மட்டுமன்றி ஈற்றிலும் வரும். இதன்படி, கனவு - கனா என்றும் நிலவு - நிலா என்றும் சுறவு என்பது சுறா என்றும் இரவு என்பது இரா என்றும் பலவு என்பது பலா என்றும் குறுகிவிட்டது.

பெயர்ச் சொல்லுக்குத் திணைப்பால், எண், இடம் வேற்றுமை உண்டு. வினைச்சொல்லுக்குத் திணை, பால், எண், இடம், காலம் உண்டு. இவற்றில் காலம் தவிர ஏனையவற்றை வினைச் சொல்லின் விகுதியே உணர்த்துகிறது. இதன் காரணம் சிந்தனைக்கு உரியது .

படித்தான் என்ற வினையின் விகுதி 'ஆன்' என்பது 'அவன்' என்பது பெயர்ச் சொல். இதற்குத் திணை, பால், எண், இடம், வேற்றுமை உண்டு. 'அவன்' என்பது மேற்காட்டிய விதிப்படி 'ஆன்' என்று மாறுகிறது. அப்படி மாறிய போதிலும் அது திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் காட்டுகிறது. ஆனால் தொடரின் எழுவாயாக இல்லாத நிலையில் வேற்றுமையைக் காட்டாது படி+த்+த்+ஆன் என்ற பகுபத இலக்கணத்தில் அவன் என்ற பெயர்ச் சொல், ஆன் என்று குறுகி, விகுதி என்ற பெயரைப் பெறுகிறது. எனவே அவன் என்ற பெயர் எழுத்துக் குறுக்க விதிப்படி 'ஆன்' என்றாகி வினைச் சொல்லின் ஈற்றில் அமைந்திருப்பதாக எண்ணத் தோன்றுகிறது. இவ்வாறே படித்தாள் என்பதில் 'அவள்' என்ற சொல்லும் படித்தார் என்பதில் 'அவர்' என்ற சொல்லும் குறுகி, ஆன், ஆர், என்றாகி, வினையின் விகுதிகளாக அமைந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. இந்தக் கருத்து அறிஞர்களின் சிந்தனைக்கு உரியது.

பேதமில்லா இறைவன்

இறைவனுக்கு எதிலும் பேதம் இல்லை. எதையும், வெறுப்பதில்லை. அவன் வேண்டுதல் வேண்டாமை இலான். அப்படி நாம் செய்வது அனைத்தையும் ஒரு குழந்தையின் செயலாக எண்ணி மகிழ்வான். கண்ணப்பர் வாயில் எடுத்துப் போய் கொட்டிய நீரைக் கலச நீர் என்றே ஏற்றுக் கொள்ளுகின்றான். சிவகோசரியார் செய்த பூசையைப் பற்றிச் சொல்லவில்லை. கண்ணப்பர் செருப்புக் காலால் தன்னை உதைத்ததையும் தவறாக எடுத்துக் கொள்ளவில்லை ஏன்? 'அவருடைய அன்பு எல்லாம் நம்பக்கம்' என்கின்றான்.

– திருமூலர் அருளுரை

– தவத்திரு தேமொழியார் சுவாமிகள்

பக். 241

பொங்குகவே பொங்கல் நன்றாய்!

பாவலர். கருமலைத்தமிழாழன்

முத்தமிழே எங்கெங்கும் முழக்க மிட்டு
மூவாத தமிழிங்கே ஆட்சி ஏறி
தத்துவங்கள் கூறுகின்ற தமிழில் வானம்
தங்கிருக்கும் கோள்களினை அறியும் கல்வி
தித்திக்கும் தமிழினிலே மருத்து வங்கள்
திறன்காட்டும் பொறியியலும் தமிழிலாகி
எத்துறையும் தமிழாகித் தமிழர் வாழ்வில்
எழில்கூட்டிப் பொங்குகவே பொங்கல் நன்றாய்!

வன்முறைகள் தலைதூக்கி நாளும் நாட்டில்
வளர்ந்துவரும் கொடுமைகளில் அஞ்சி யஞ்சி
நன்முறைகள் தலைகுனிந்து லஞ்ச மென்னும்
நச்சுமரக் காற்றினிலே மூச்சு முட்டி
மென்மொழியில் ஆட்சியேறி அதிகா ரத்தால்
மேலிருந்து அழுத்துவதால் கூனித் தாழ்ந்து
புன்மையிலே வெதும்பிருக்கும் மக்கள் வாழ்வில்
புத்தொளியாய்ப் பொங்குகவே பொங்கல் நன்றாய்!

சுயநலத்தால் பிறர்நலத்தைச் சுரண்டி; தம்மின்
சுற்றத்தைப் பணச்செழிப்பால் சுட்டி; நெஞ்ச
வயல்தனிலே களைகளையே வளர்த்து; அன்பு
வறட்சியிலே பண்புநிலம் பிளந்து போக
முயலாத சோம்பலிலே வாழ்வை ஓட்ட
முனைகின்ற மக்கள்தம் எண்ணம் மாறி
அயலவரை அரவணைக்கும் மனிதநேய
அரும்பவிழ்த்துப் பொங்குகவே பொங்கல் நன்றாய்!

உலகந்தேடும் தமிழ் :
நமது தலைமுறைக் கடமைகள்

டாக்டர் கி. நாச்சிமுத்து
வருகைப் பேராசிரியர்
வார்சா பல்கலைக் கழகம்
போலந்து.

திரு. வா. செ. குழந்தைசாமி அவர்கள் தமிழை வடமொழி, அரபி, பாரசீகம் போன்று செம்மொழியாக அறிவிக்க வேண்டியதன் நியாயங்கள் பற்றியும் தேவை பற்றியும் அண்மையில் தினமணியில் எழுதியிருந்தார். தமிழ் வாழும் மொழி; அத்துடன் செம்மொழிச் சிறப்பும் நீண்ட வரலாறும் தொல்லிலக்கியச் சிறப்பும் உடைய மொழி; இத்தகைய சிறப்பு உலகில் சில மொழிகட்கே உண்டு.

வாழும் மொழியாகவும் செம்மொழியாகவும் விளங்கும் மொழிகட்குப் பல நன்மைகளும் உண்டு; சங்கடங்களும் உண்டு.வாழும்மொழி சமகால மக்களின் வாழ்க்கைத் தேவைகளை நிறைவுசெய்யக் கூடியதாக வளர்ச்சி பெறுவதற்கு அம் மொழியின் வளம் பெரும் முதலீடு போல உதவக் கூடும்; ஆனால் அம் மொழிக்கு அரசியல், பொருளாதாரம், அறிவியல், சமூகம், பண்பாடு போன்ற களங்களில் தனி உரிமையும் வாய்ப்பும் இருந்தாலேயே அது முழுவளர்ச்சியை நோக்கி நடைபோட இயலும். ஆனால் அத்தகைய முழு உரிமைகளும் வாய்ப்புக்களும் வரலாற்றாலோ எதனாலோ தமிழ் போன்ற செம் மொழிக்கு இல்லாமலிருப்பதால் அதன் செம்மொழிச் சிறப்பு சமகால வளர்ச்சிக்கு எத்துணை உதவுகிறது என்பது கேள்விக்குரியது. செம்மொழியாய் இருப்பதால் உள்ள சங்கடம் அதன் பழம்பெருமையும் சிறப்பும் புதுமையைத் தடைசெய்யக்கூடிய உளப் பாங்குகளை நிறைவுணர்வு, தற்காப்புணர்வு, குறுகிய நோக்கு போன்றவற்றை ஏற்படுத்தி விடுவது. இத்தகைய சூழலால் தமிழ் வளர்ச்சிக்குரிய வாய்ப்புக்களை நழுவ விட்டுக் கொண்டிருப்பதை நாம் கண்டுவருகிறோம்.

தமிழைச் செம்மொழியாக ஆட்சி அமைப்பு ரீதியாக அறிவிப்பதால் அதன் சமகால வளர்ச்சிக்கு வாய்ப்புக்கள் ஏற்படுமோ என்னவோ, ஆனால் அதுபற்றிய ஆராய்ச்சிகளை

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஊக்குவிக்க வாய்ப்புகள் உண்டாகும் என்று நினைக்கிறேன். அது பற்றி மட்டும் இங்கு சிலவற்றை நினைத்துப் பார்க்கலாம்.

இத்தகைய முறையான அறிவிப்பின்றியே உலக நாடுகள் பலவற்றிலும் தமிழின் செம்மொழிச் சிறப்பை நோக்கி அதைக் கற்கும் ஆர்வமும் அதுபற்றிய ஆராய்ச்சிகளும் பெருகி வருகின்றன எனலாம். இங்குத் தமிழ் வாழும் மொழி என்பதால் இரட்டிப்புச் சிறப்பும் கவனமும் பெறுகிறது என்றும் கூறலாம். இதற்குத் தவத்திரு. தனிநாயக அடிகள் போன்றோர் முயற்சியால் தொடங்கப் பெற்ற உலகத் தமிழாராய்ச்சிக் கழகமும் அது நடத்தி வரும் உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளும் இதற்கு நல்ல தூண்டு கோலாய் இருந்து வருவதை நாம் அறிவோம்.

தமிழை மைய அரசு செம்மொழிகளுள் ஒன்றாகச் சேர்த்துக் கொண்டால் அதுபற்றிய ஆராய்ச்சிகளுக்குச் சிறப்பு வசதிகள் கிடைக்க வாய்ப்புண்டு; அத்துடன் ஐ.நா. நிறுவனங்களிலும் இத்தகைய தகுதியைத் தமிழுக்குப் பெற்று உலக அளவில் சிறப்புக்களைத் தேடமுடியும். ஆனால் இதற்கு நாம் என்ன செய்திருக்கிறோம் என்று நமக்கு நாமே கேள்வி கேட்டுக் கொள்ளும் நிலையில் இருக்கிறோம்.

மைய அரசில் தமிழகத்தின் செல்வாக்கும் பங்கும் எவ்வாறுள்ளது. தமிழகத்திற்கென்று காபினெட் தரத்தில் மந்திரிகள் கூட இல்லை. தமிழகத்தின் பிரதிநிதிகளாகச் சென்ற நம் பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் பிறரும் தமிழுக்கு எங்கெல்லாம் ஆக்கம் செய்ய முடியும் என்று பார்த்து அறிவு பூர்வமாகவும் ஆக்க பூர்வமாகவும் என்ன செய்தார்கள்? டாக்டர். மால்கம் ஆதிசேஷையா உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்குத் தேடித்தந்த யுனெஸ்கோ அங்கீகாரம் ஏன் பின் நழுவிப் போயிற்று?

டெல்லிக்குப் புதிதாகப் போகிற தமிழனுக்கு வெளி நாட்டுக்குப் போன உணர்வுதான் ஏற்படுகிறது. அதற்கு மொழி ஒரு காரணம். அலுவலகத்திற்குப் போனால் தமிழர் தமிழரோடு ஆங்கிலத்தில் பேசுகிறார்; அல்லது இந்தியில் பேசுகிறார். கூட இருக்கும் இந்திக்காரரைப் புண்படுத்தக் கூடாதல்லவா? ஆனால் இந்தி அதிகாரிகளுக்கு அந்த நாசுக்கெல்லாம் இல்லை; இந்தி ஆட்சி மொழி; இணைப்பு மொழி என்ற பெருமை; அதை நீ தெரிந்திருக்க வேண்டும் என்ற அகந்தை; அவற்றைப் பாராட்டத்தான் வேண்டும்.

ரிசர்வ் வங்கி தரும் வெளிநாட்டுச் செலாவணி, வெளிநாட்டு. ஏற்றுமதி அனுமதி போன்றவை கூட முழுமையும் இந்தியில்தான் உள்ளன; இவற்றை வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்லும் போது இந்தி தெரிந்திருக்க வேண்டும்; அல்லது இந்தி தெரிந்தவர்களையும் உடன் கூட்டிச் சென்றால்தான் மொழி பெயர்த்துச் சொல்ல முடியும். உலகெங்கிலுமுள்ள சுமார் 150 இந்தியத் தூதரகங்களில் இந்தியை எவ்வளவு தூரம் பயன்படுத்துகிறார்கள் என்பதை ஆராய ஒரு பாராளுமன்றத் தூதுக்குழு ஒரு கோடி ரூபாய் செலவில் செல்ல விருப்பதாகச் செய்தி வந்துள்ளது. இவ்வாறெல்லாம் இந்தி ஆட்சிமொழி என்பதை எவ்வளவு கருத்துடன் மைய அரசு வளர்த்து வருகிறது என்பதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனால் அதே நேரத்தில் இந்தி முழுமையாக ஆட்சிமொழியாகும்போது இந்தி படிக்காத தமிழன் தற்குறியாய்த் தலைகுனிந்து சொந்த நாட்டிலேயே இரண்டாந்தரக் குடிமகனாய் நிற்க வேண்டி வருமா? என்ற கேள்வி எழுகிறது. இதை யாரிடம் கேட்பது? இதற்கு யார் விடை சொல்லப் போகிறார்கள்?

அடுத்து டெல்லியிலுள்ள மத்திய அரசின் பல்வேறு அலுவலகங்களிலும் தெற்கத்தியர்களைக் குறிப்பாகத் தமிழர்களை அத்திபூத்தாற் போல்தான் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக நல்ல சம்பளமும் அந்தஸ்தும் வசதிகளும் உள்ள வெளிநாட்டுத் துறையிலெல்லாம் தமிழர்களைக் காணோம். சில வேளை ஓரிரு மலையாளிகளைக் காணக்கூடும். தமிழர்கள் இத்தகைய பணிகளில் சேர முன் வருவதில்லையா? அல்லது வேறு ஏதாவது மறைமுகமான 'ஒதுக்கல்' இருக்கிறதா? தலைநகர் வடக்கே 2500 கி.மீ. தூரத்தில் அமைந்திருப்பதால் தென்கோடித் தமிழர்களால் சரியாக மத்திய அரசில் பங்குகொள்ள முடியவில்லையா? அல்லது ஆட்சிமொழி இந்தியைப் படிக்காமல் விட்டதால் உரிய பங்கைப் பெற முடியவில்லையா? இட ஒதுக்கீடுபற்றிப் போராட்டம் நடத்துகிற தமிழ்த் தலைவர்கள் கேட்க வேண்டிய கேள்விகள் இவை.

இவை எல்லாம் இப்படி இருக்கத் தமிழ்நாட்டில் என்ன நடக்கிறது? தமிழக அரசுச் சின்னத்தில் வாய்மையே வெல்லும் - தமிழ் நாடு அரசு என்று மாற்றியதை மீண்டும் திருத்தி ஆங்கிலத்தில் எழுதி மகிழ்ந்து கொள்கிற தமிழக அரசைப் பார்க்கிறோம். தமிழ்நாடு, அரசு தலைமைச் செயலகத்திற்குப் போனால் எல்லாம் மீண்டும் ஆங்கில மயமாகிறதோ என்ற

உணர்வு ஏற்படுகிறது. தமிழ் நாட்டுத் தமிழ்த் தெருவில் தமிழில் பெயர்ப் பலகைகள் அபூர்வமாகத்தான் காணப்படுகின்றன. இது வெளிநாட்டுக்காரர் கண்களையே உறுத்துகிறது? கேட்கிறார்கள் தமிழ்நாட்டில் இப்போது தமிழே இல்லையா? என்று. இதற்கிடையில் தமிழர்கள் தமிழ்பேசுவதைவிட்டு ஆங்கிலத்தைத் தாய்மொழியாக்கிக் கொள்ள வேண்டும் என்று ஏதோ ஒரு அமைச்சர் ேவறு பெரியாரைத் துணைக்கழைத்துப் புரட்சி பேசுகிறார். கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்குவோர் என்று பாரதி பாடியது நினைவுக்கு வருகிறது. தமிழ்நாடு அரசு எங்கு போகிறது? தமிழர்கள் எங்கு போகிறார்கள்? தமிழ்நாட்டில் தமிழ்த் தெருவ்ல் தமிழ்தான் இல்லை என்ற வெட்கித் தலைகுனிய வேண்டிய உண்மையை ஏதோ தமிழ்க்கவிஞனின் - தமிழ் மட்டும் தெரிந்த தமிழ்ப் பண்டிதரின் மொழி வெறி - குறுகிய நோக்கம் என்று வக்கணை பேசும் மக்கள் எதிர்ப்பு அறிவு ஜீவிகள் கண்கள் எப்போது திறக்கும்? தமிழை எழுதப் படிக்கத் தெரிந்து கொள்ளாமல் தமிழ்நாட்டில் உயர் கல்வி பெறமுடியும். ஆனால் உலகில் வேறு எங்காவது இந்த அவலம் உண்டா?

வெளிநாடுகளுக்கு வந்தால் எல்லாம் அவரவர் மொழியில்தான் நடக்கின்றன; உலகெங்கும் ஆங்கிலம் என்ற நம் வலிமைவாய்ந்த வாதம் எவ்வளவு மாயம் என்பது வெளிநாட்டுக்கு வந்தால் தெரியவரும். இணைப்புமொழிக்கு மேற்பட்ட தகுதியை நாம் ஆங்கிலத்திற்குத் தந்து எல்லாம் ஆங்கிலம் என்ற மோகத்தில் அதை நாம் தலையில் வைத்துக் கொண்டாடுவது நாம் பின் தலைமுறைக்கு இழைக்கும் அநீதியாகும். இனி விஷயத்துக்கு வருவோம்.

இந்திய அரசு இந்தியப் பண்பாட்டுறவுக் கழகம் (ஐ.சி.சி.ஆர்) என்ற அமைப்பின் மூலம் பண்பாட்டுப் பரிமாற்றத்தை நடத்தி வருகிறது. அதன் சார்பில் இந்திய மொழி அறிஞர்களும் பிறதுறை அறிஞர்களும் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பப் பெறுகிறார்கள். பிறநாட்டுப் பல்கலைக் கழகங்களில் இந்திமொழி கற்பிக்கப் பதினைந்துபேர் அனுப்பப் பெறுகிறார்கள். தமிழுக்கு வார்சா பல்கலைக் கழகச் சார்பில் போலந்து அரசின் வேண்டு கோளின்படி ஒருவர் அனுப்பப் பெறுகிறார். மேலும் சில நாடுகளில் பிறநாட்டுப் பண்பாட்டுறவுத் திட்டங்களின் கீழ் தமிழ்கற்பிக்க இந்தியப்பண்பாட்டுறவுக் கழகம் மூலம் ஏற்பாடு செய்யலாம்.

தமிழக அரசு நிறுவியுள்ள உலகத் தமிழ்ச்சங்கம் தமிழர் வாழும் நாடுகளில் தமிழ் பரப்பவும், பிற இந்திய மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் தமிழ் கற்பிக்கவும் திட்டம் வகுத்துச் செயல் படுத்தலாம். அண்மையில் தஞ்சையில் நிறைவுற்ற எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் பிற நாடுகளில் தமிழ் இருக்கைகள் ஏற்படுத்த இருப்பதாகத் தமிழக முதல்வர் அறிவித்திருந்தார். இதை எப்படிச் செயல்படுத்தப் போகிறார்கள் என்று தெரியவில்லை. இந்திய வெளியுறவுத் துறை, இந்தியப் பண்பாட்டுறவுக் கழகம் வழியாக அன்றி தமிழக அரசு இத்தகைய ஏற்பாடுகளைச் செய்ய இயலாது; எனவே இதில் மைய அரசையும் இந்தியப் பண்பாட்டுறவுக் கழகத்தையும் பங்குபெறச் செய்து அவற்றின் ஆதரவையும் உதவிகளையும் பெற்று ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். பல்கலைக் கழக மானியக்குழுவையும் இதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மேலும் ஐ.நா. நிறுவனங்களுடனும், பிறநாட்டுப் பல்கலைக் கழகங்களுடனும் தொடர்பு கொண்டு தமிழைச் செம்மொழியாகக் கற்பிக்கவும் ஆராய்ச்சிகளை மேற் கொள்ளவும் ஏற்பாடு செய்யலாம். இதற்கு உலகத் தமிழாராய்ச்சிக் கழகம் (IATR), திராவிட மொழியியல் கழகம் (DLA) போன்றவற்றின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம். வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் உதவியையும் இதில் பெற வாய்ப்புகளுண்டு.

இந்தியாவில் பிற மாநிலங்களில் இத்தகைய முயற்சிகளை மைய அரசின் உதவியின்றியே தமிழக அரசே பிறமாநில அரசுகளுடன் தொடர்பு கொண்டு பண்பாட்டுப் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் செய்துகொள்ள முடியும். ஒவ்வொரு மாநிலங்களிலும் தமிழ் இல்லங்களை அமைத்துத் தமிழ் மொழி, கலை, பண்பாட்டைப் பரப்ப ஏற்பாடு செய்யலாம். முன்பு இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களில் தமிழ் இருக்கைகளை ஏற்படுத்தித் தமிழக அரசு முன்பு தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கமளித்து வந்தது. இப்போது அவற்றை மீண்டும் சீரமைத்து விரிவு படுத்தலாம்.

தமிழைப் பிறிரிடம் கற்பிக்க முனையும் போது முக்கியமாக இரண்டு செய்திகளை இங்குக் குறிப்பிட வேண்டும். ஒன்று தமிழில் வெளிவரும் புத்தகங்கள், இதழ்கள் முதலியவற்றை ஆசிரியரும் பிறரும் அவ்வப்போது பெற்றுக் கொள்ளத் தக்க ஏற்பாடுகள்; இதைப் பரஸ்பர பரிமாற்ற அடிப்படையில்

பெறவும் கொடுக்கவும் செய்யலாம். இன்னொன்று தமிழ் கற்க வரும் மாணவர்கள் தமிழகம் வந்து தங்கிப் படித்துச் செல்லப் பயண உதவியோடு கூடிய உதவித் தொகைகள் வேண்டியவாறு கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்குத் தமிழகத்தில் உள்ள செல்வர்கள் அமெரிக்காவிலுள்ள ராக் பெல்லா, போர்டு அமைப்புகள் போல் ஏற்படுத்தி அதன் மூலமும் செய்யலாம். வெளிநாடுகளில் தமிழ் படிக்க வரும் மாணவர்களுக்கு இது ஊக்கமளிப்பதாய் அமையும். ஏனெனில் தமிழ் போன்ற மொழிகளைப் படிக்க வருவோர்க்கு அதனால் வேலை வாய்ப்பு எதுவும் இல்லை. புதிய மொழி, பண்பாடு இவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அறிவுத் தேடல் உள்ளவர்கள்தான் படிக்க வருகிறார்கள் என்பதே கண் கண்ட உண்மையாகும். இந்தி மொழிக்கு இத்தகைய ஏற்பாடுகளை ஆக்ரா இந்தி நிறுவனம், இந்தியப் பண்பாட்டுறவுக் கழகம் போன்றவை நன்கு செய்து வருவதால் இந்தி படிக்க நிறையப்பேர் வருகிறார்கள்.

தமிழைச் செம்மொழியாக அறிவித்து உலகெல்லாம் சென்று பரப்புவது நல்லதுதான். ஆனால் வாழும் மொழியாகிய அதன் வளர்ச்சிக்கு இதனால் என்ன பயன்? தமிழை நாம் பிற இடங்களில் கற்பிக்க ஏற்பாடு செய்வது போன்றே பிறமொழிகளை அவ்வவ் அரசுகளின் ஆதரவு பெற்று தமிழ் நாட்டிலும் கற்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதன் மூலம் பிறமொழிகளைத் தமிழர் கற்றுப் பிறநாட்டு அறிவுச் செல்வங்கள் தமிழுக்கு வந்து மொழி வளர வாய்ப்பு ஏற்படும்.

இந்தியாவில் ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம், தில்லிப் பல்கலைக் கழகம், ஐதராபாத்திலுள்ள ஆங்கிலம் மற்றும் பிறநாட்டு மொழிகளின் நடுவண் நிறுவனம் போன்றவற்றில் பிற நாட்டு மொழிகளைக் கற்றுக் கொள்ள வசதிகள் உள்ளன. ஆனால் தெற்கே தமிழகத்தில் அத்தகைய வசதிகள் இல்லை. சென்னையிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தஞ்சையிலுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகம், புதுவையிலுள்ள மத்திய பல்கலைக் கழகம் போன்றவற்றில் இத்தகைய வசதிகளை ஏற்படுத்தலாம். இந்தியாவிலும் உலகின் பிற நாடுகளிலும் உள்ள செம்மொழிகள், வாழும் மொழிகள் இவற்றில் முக்கியமானவற்றைக் (வடமொழி, பாலி, பிராகிருதம், வங்காளி. கிரேக்கம், இலத்தீன், அரபி, ஹீப்ரு, ஜெர்மன், ரஷ்யன். ஸ்பானியம், பிரெஞ்சு, போலிஷ், ஆப்பிரிக்க மொழிகளிற் சில, சிங்களம், பர்மியம், மலாய், தாய், வியட்நாமியம், சீனம், ஜப்பானியம் இப்படி) கற்பிக்கும் ஓர் உயர்நிலை மொழி நிறுவனம்

தமிழை மையமாகக் கொண்ட நோக்கில் அமைக்கப் பெற்றால் பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்து வாழும் மொழியாகிய தமிழை வளப்படுத்தவும் வாய்ப்பு ஏற்படும். தமிழின் பழைய செம்மொழிச் சிறப்பையும் இன்று வளர்ந்து வரும் நிலையையும் கருத்தில் கொண்டு மொழித் திட்டமிடுவோர் இதில் முனைய வேண்டும். மேலைநாட்டுப் பல்கலைக் கழகங்களில் உலகெங்கும் உள்ள மொழிகளைக் கற்றுத் தம் மொழியின் அம் மொழிச் செல்வங்களை ஆக்கிக் கொள்கிறார்கள். இத்தகைய மரபை ஏன் நாம் கடைப் பிடிக்கக் கூடாது?

செம்மொழி வரிசையில் தமிழ் என்னும்போது தமிழ் உயர்கல்வியிலும் பாடத்திட்டத்திலும் அதற்குத் தக்கபடி மாற்றங்களைக் கொண்டுவர வேண்டியிருக்கும். தமிழின் செம் மொழிப் பயிற்சியைச் சிறப்பு நிலைக்கு உயர்த்துதல், தமிழோடு ஒத்து நோக்கத் தக்க பிற மொழிகள், இலக்கியங்களில் பயிற்சியையும் தேர்ச்சியையும் பாடத்திட்டத்தில் சேர்த்தல் போன்றவை தவிர்க்க முடியாதவை. பல்கலைக்கழகங்களும் தமிழாசிரியர்களும், மாணவர்களும் புதிய களங்களையும் வாய்ப்புக்களையும் எதிர்கொள்ள முன் வர வேண்டும்.

தமிழை உலகந்தேடும் தமிழாக ஆக்க வேண்டிய கடமை தமிழர்கள் ஒவ்வொருவர்க்கும் உண்டு; செய்யத்தக்க செய்யாமல் இன்றையத் தமிழர்கள் தங்கள் தலைமுறைக் கடமைகளைத் தட்டிக் கழித்தால் வருங்கால வரலாறு வசைபாடவே செய்யும்.

குருகுலவாசம்

ஆசிரியர் வீட்டிலேயே மாணவன் தங்கி அவர்க்குத் தொண்டு செய்து கல்வி கற்கும் மரபு உண்டு. இப்போதும் இசை பயில்வாரிடத்தில், இசைக் கருவிகள் பயில்வாரிடத்தில் அதனைக் காணலாம். இதனைக் **குருகுலவாசம்** என்பர். குருவின் வீட்டிலேயே தங்குதல் என்பது அதன் பொருள் குலம் - வீடு. மாணவன், குரு உறங்கச் சென்ற பின்தான் உறங்கலும், அவர்க்கு முன்தான் விழித்தலும் வேண்டும். குரு முன்னரே விழிக்க, மாணவன் பின்னரும் உறங்குவதும் நேரும். அப்போது குரு அவனைச் சிறு தடி கொண்டு தட்டி எழுப்புவர். இந் நிலையைத் திருமூலர், இறைவன் உயிரை ஆணவமலமாகிய நித்திரையினின்றும் அருளாகிய தண்டால் எழுப்புவர் என உவமையாக்கிக் கூறுவர்.

– மூலன் தமிழ்

பக்.141 **– பேரா. ஆ. சிவலிங்கனார்**

மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியாளர்)	10 00
திரு. முருக விசாகநம்பி அவர்கள்	5 00
தூத்துக்குடி திரு. தி. ந. ஆறுமுகம் பிள்ளை அவர்கள்	5 00
திரு. த. ஆறுமுகம் அவர்கள், சென்னை – 79.	5 00
உயர்திரு. ஈசுவரனார் அவர்கள்	5 00
திரு. வேணுகோபால் அவர்கள் சாந்தி திரையங்கம், சென்னை – 2.	25 00
திரு. K.E. மணவாளன், பெங்களூர்	10 00
திரு. M/S. இராஜலெட்சுமி, முத்தையால் பேட்டை தெய்வீக சங்கம்	200 00
திரு. முனைவர் மு.ச. சிவம், ஈரோடு	10 00
தாமரைச் செல்வி D/O. திரு. பொ. பாலசுப்பிரமணியம் சென்னை – 18.	10 00
முத்துமணி D/O. திரு. பொ. பாலசுப்பிரமணியம் சென்னை – 18.	10 00

மறைமலையடிகள் கலைமன்ற வளர்ச்சிக்கு நன்கொடை

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியாளர்)	10 00
உயர்திரு. ஏ.டி. ஈசுவரனார் அவர்கள்	5 00
ஜெயா தங்கமாளிகை, பல்லாவரம், வழிபாட்டுச் செலவு	25 00
திரு. இரா. கிருட்டிணசாமி எம்.ஏ., எம்.எட் திருவேங்கடம் - P.O - 627719	20 00
திரு. கர்னீஸ்வரன், சென்னை – 44	10 00
திரு. பத்ரிநாராயணன், சென்னை – 64	10 00
திரு. A.K. கிருஷ்ணசாமி, சென்னை – 43	20 00
திரு. ஆ. மகிமைதாசன், சென்னை – 44	20 00

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக 80, பிரகாசம் சாலை, சென்னை – 108, அப்பர் அச்சகத்தில் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது.

ஆசிரியர் : இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ.,பி.லிப்.

திருமந்திரம் விளக்கவுரை

சித்தாந்த பண்டிதர் ப, இராமநாதபிள்ளை — *300 00*

தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன் திருமுறைகளுள் மிக முக்கியமாகக் கருதப்படுவது 'திருமந்திரமே' தமிழ் வேதாகம முழுமுதற் கருநூல நூலாகும். இந்நூலுக்கு மந்திரமாலை என்ற வேறு பெயரும் உண்டு. சித்தாந்த நயத்தோடு அனைவரும் புரிந்து கொள்ளுமளவுக்கு சித்தாந்த பண்டிதர் திரு. ப, இராமநாதபிள்ளை அவர்கள் உரை நல்கி உள்ளார்கள். இந்நூல் ஓரிரண்டு ஆண்டுகளாகக் கிடைக்கப் பெறாமலிருந்தது தற்போது இந்நூல் அழகிய லேசர் முறையில் அச்சிட்டு ஒரே தொகுதியாக வெளிவந்துள்ளது.

குற்றவியல் சட்டம் (CRIMINAL LAW)

பேரா. மா. சண்முகசுப்பிரமணியம் — *160 00*

குற்றம் என்பது சமுதாயத்திற்கு எதிராக நடக்கும் செயலாகும். இந்நிலையில் தமிழில் தீர்ப்பு வழங்கவேண்டும் இம்முறையில் இந்நூல் வெளிவந்துள்ளது. இவ்வாசிரியரைக் கொண்டு இதற்கு முன்னர் 'சட்டத்தமிழ்', 'தீங்கியல் சட்டம்' எனும் அரிய நூல்கள் வெளிவந்துள்ளன. சட்டத்துறையில் பல அரிய தமிழ் நூல்கள் வெளிவந்திருப்பினும் இந்நூல் அனைவரும் எளிய முறையில் புரிந்துகொள்ளும் அளவில் தெளிவாக உள்ளது. இதற்கு முன்னர் தமிழ் வெளியீட்டுக் கழகம் வெளியிட்டுள்ள இந்நூல் தற்போது கழகம் வாயிலாக வெளி வருகின்றது. பல ஆண்டுகளாகக் கிடைக்கப் பெறாமலிருந்த இந்நூல் தற்பொழுது அழகிய முறையில் அச்சிட்டு வெளிவந் துள்ளது.

மருத்துவத் தமிழ்க் களஞ்சியம்

டாக்டர் அ. கதிரேசன், எம். டி., — *35 00*

மருத்துவத்துறையில் 'தமிழால் முடியுமா?' என்ற கேள்விக்கு இந்நூல் 'முடியும்' என பதிலளிக்கும் வகையில் அமைந்துள்ளது. டாக்டர் கதிரேசனுரின் பழைய நினைவுகளை நினைவுகூர்ந்து பார்க் கும்போது நமக்கு அது ஒரு மருத்துவ வழிகாட்டியாகவே அமைந்து உள்ளது. காசநோய் என்ருல் ஒருகாலத்தில் குணப்படுத்த முடியாது என மக்களுக்கு ஒருவித அச்சத்தையே கொடுத்தது. ஆனுல் இப்போது முழுமையாக குணப்படுத்த முடியும் என இந்நூல் தெள்ளத்தெளிவாக விளக்குகிறது. கலைச்சொல்லாக்கும், மருத்துவ கேள்விபதில் இவை இரண்டும் நன்கு பயனுள்ளதாகவே அமைந்து உள்ளது.

1995 ஆகஸ்டு *28*ல் டாக்டர் கதிரேசனாரின் முதல் நினைவு நாளில் இந்நூல் வெளிவந்துள்ளது.

பதிவு எண் : M/4899

சனவரி — 1996

கழகப் புதிய வெளியீடுகள்

குறள்கூறும் வாழ்க்கை நெறி-சு ந. சொக்கலிங்கம்	30 00
திருமந்திரம்-விளக்கவுரை (புதிய பதிப்பு) -ப. இராமநாதபிள்ளை	300 00
குற்ற இயல் சட்டம்-மா. சண்முகசுப்பிரமணியம்	160 00
தமிழ் இந்தியா-ந. சி. கந்தையாபிள்ளை	70 00
பதிற்றுப்பத்து உரை (புதிய பதிப்பு) -ஔவை சு. துரைசாமிப்பிள்ளை	160 00
பாம்பன் சுவாமிகள் திருத்தொடையல் -டாக்டர் ப. இராமன்	10 00
சைவ ஆகமங்கள் ஓர் அறிமுகம் -டாக்டர் எஸ். பி. சபாரத்தினம்	18 00
ஆரியர்க்கு முற்பட்ட தமிழ்ப் பண்பாடு -புலவர் கா. கோவிந்தன்	30 00
மதுரைத் திருக்கோயில் வரலாறு -புலவர் இரா. இளங்குமரன்	15 00
மருத்துவத் தமிழ்க் களஞ்சியம் -டாக்டர் அ. கதிரேசன்	35-00
மானிட உடலியக்கவியல்-டாக்டர் அ. கதிரேசன்	35 00
காளித்தம்பியின் கதை-டாக்டர் பூவண்ணன்	30 00
நெல்லை மாவட்டச் சித்தர்கள் -சக்தி பி. சுப்பிரமணியம்	40 00

அப்பர் அச்சகம், சென்னை-108.

"செந்தமிழ்ச் செல்வி"
(செந்தமிழ்த் திங்கள் இதழ்)
நிறுவனர் : தாமரைச்செல்வர் வ. சுப்பையா பிள்ளை

இதழாசிரியர் குழு
முனைவர் பொன் கோதண்டராமன்
முனைவர் தமிழண்ணல்
முனைவர் க. ப. அறவாணன்
முனைவர் பொன் சௌரிராசன்
முனைவர் கு. சுந்தரமூர்த்தி
பேராசிரியர் கே. எஸ். சிவராமலிங்கம்
கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்
முனைவர் வீ. ப. கா. சுந்தரம்
ஆசிரியர் ; இரா. முத்துக்குமாரசுவாமி, எம்.ஏ., பி. லிட்.,

உள்ளுறை

	பக்கம்
சொல்லின் செல்வரின் நூற்றாண்டு விழா	241
வள்ளுவர், ஆளும் வர்க்கத்தை ஆதரித்த புலவரா	247
அகரமுதலும் ஆதிபகவனும்	253
பாவேந்தர் நினைவுகள்	262
இளம்பூரணர் உரைவழு	263
தமிழ் இலக்கியம் காட்டும் நட்பும் புலம் பெயர்ந்த தமிழர்களும்	266
சிறுசொல்	272
தமிழ்க் கடல் சொ. சி.	276
சௌடிய காலம்	277
இருந்தமிழ் நாட்டின் இன்றைய நிலை	278

மானிட உடலியக்கவியல்

டாக்டர் அ. கதிரேசன், எம். டி.,

இந்நூல் தமிழில் மருத்துவ அறிவியல் செய்திகளை புரிந்துகொள் பெரிதும் உதவுகிறது. தசைமண்டலம், எலும்புமண்டலம் மூச் மண்டலம் எனப் பல மண்டலங்களைப்பற்றி அனைவரும் புரிந் கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. நமது உடலிலுள்ள ஒவ்வொ உறுப்புகளும் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை நமக்கு எளிமை யான முறையில் அனைவருக்கும் புரியும்படியாகக் கூறுகிறார்.

விலை ரூ. 35/-

செந்தமிழ்ச் செல்வி
தி . வ . ஆண்டு 2027 - மாசி
மார்ச் - 1996
சிலம்பு - 70 பரல் - 7

சொல்லின் செல்வரின் நூற்றாண்டு விழா

'திக்கெலாம் புகழும் திருநெல்வேலிச் சீமையில்' என எல்லையில் புகழ்மிகு நெல்லையின் பெருமையைத் தித்திக்கும் தேன்தமிழில் எடுத்துச்சொல்லி எதிரில் இருந்தவர்களை இன்பக் கிறக்கத்தில் மூழ்கச் செய்த வான்பொய்ப்பினும் தான் பொய்யாத் தண்பொருநை நதிக் கரையில் தோன்றிய சொல்லின் செல்வர், பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் நூற்றாண்டு நிறை 2.3.96 இல் நாளில் நிகழ்ந்தது.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழகத்தில் மேடைப் பேச்சுக் கலையை வளர்த்த பேரறிஞர்களுள் பேராசிரியப் பெருந்தகை தலையாயவர். சங்கத்தமிழ் நடையில் நடைபோட்ட மறைத்திரு மறைமலையடிகளார், தென்றலே தமிழ் நடையாய் மேடையில் மொழிந்தார் திரு.வி.கலியாணசுந்தரனார் இவர்களுடன் தென்பொதிகைத் தென்றலாய், மெல்லிய பூங்காற்றாய் மேடையில் வீசிய சொல்லின் செல்வர் இருபதாம் நூற்றாண்டு மேடைப் பேச்சுத்தமிழை வளர்த்த முன்னோடிகளில் ஒருவராய்த் திகழ்ந்தார்.

"ஆங்கில மாது களிநடம் புரிந்த கல்விச்சாலைகளில் தமிழ்த்தாய் நிலை இழிந்து தலைகவிழ்ந்து ஒடுங்கி ஒதுங்கி நிற்பாளாயினள். தமிழ் ஆசிரியர்களின் உள்ளம் இடிந்தது; ஊக்கம் மடிந்தது; புகைப்பிடிந்த ஓவியம் போல் புலவர் மணிகள் பொலி விழந்தனர்" என்று எதுகைமோனை நயத்துடன் இழும் என்னும் மெல்லிய நடையில் மேடையில் முழங்கிய சொல்லின் செல்வரை "சேதுப்பிள்ளையின் வாக்கில் அவரா பேசுகிறார். தமிழல்லவா குரலெடுத்துப் பேசுகிறது" என்று பாராட்டினார் திரு.வி.க. "செந்தமிழுக்குச் சேதுப்பிள்ளை" என்றார் யோகி சுந்தானந்த பாரதியார்.

சொல்லின் செல்வர் என வளமலி புலமை இளந்தமிழுலகு பாராட்டும் பேராசிரியர்; இனிய எழுத்தாளர்; இன்சொற் பேச்சாளர்; இவர்கள் உரை கேட்டு மகிழாத தமிழர் இரார். இவர்கள் எழுதும் நூல் எதுவும் தமிழகம் முழுவதும் செல்லும் நாணயம். நூல் நோட்ட வண்ணக்கர் மதிப்பும் பாராட்டும் வேண்டாமல் செலாவணியாகும் கலா உண்டியல் என்று பாராட்டுவார் கணக்காயர் பசுமலைச் சிங்கம் நாவலர் சோமசுந்தர பாரதியார்.

சேதுப்பிள்ளை செந்தமிழன்னைக்கு வாய்த்த செல்லப் பிள்ளை. அவரால் தமிழ் வளர்ந்ததா அல்லது தமிழால் அவர் வளர்ந்தாரா என்று நோக்கின் பின்னதைக் காட்டிலும் முன்னதே முற்றிலும் உண்மை.

பெயருக்கேற்பப் பண்டிதர் தமிழுக்கும் பாமரர் தமிழுக்கும் பாலமாய் அமைந்தவர் சேதுப்பிள்ளை. இனிமையும் எளிமையும் அவர் எழுத்திலும் பேச்சிலும் இலங்கின. எதுகையும் மோனையும் எளியோர்க்கு இல்லை என்ற அவல நிலை போக்கித் தமிழ்ச் செல்வத்தை எல்லோருக்கும் வாரி வழங்கிய செல்வர் அவர்.

எழுத்திலும் பேச்சிலும் எதுகைமோனை நயத்தைத் தமிழகத்தில் முதன்முதல் நன்கு அறிமுகப்படுத்தியவர் அவரே. ஊரும் பேரும், அலையும் கலையும், வேலும் வில்லும், சேரனும் கீரனும், காளத்தி வேடனும் கங்கை வேடனும், மூவர் தமிழும் முருகனும், கம்பரும் கச்சியப்பரும் வழிவழி, வள்ளுவர் என்று தம் நூலுக்கும் கட்டுரைகளுக்கும் எதுகை மோனை நயத்துடன் தலைப்புகளைச் சூட்டி மகிழ்ந்தவர் அவர்.

நெடிய நிமிர்ந்த உருவம். நேர்கொண்ட பார்வை, மெல்லிய உதடுகளில் இழையோடிய புன்னகை, 'எடுத்தது கண்டனர் இற்றது கேட்டனர்' என்பது போல எடுத்துக்கொண்ட தலைப்பில் இனிய தமிழில் ஆற்றொழுக்காகப் பேசிய பாங்கு, மலர்ந்த முகம், இவற்றின் மொத்த உருவாய் அமைந்தவர் சொல்லின் செல்வர். பேச்சில் எப்போதும் சிலேடைநயம் பொங்கும். "புனலூரர் வந்துவிட்டது. அதனால் புகை வண்டி புனல் குடிக்கப் போகிறது." 'இரு பெருந் தகையாளர் வந்ததனால் தண்ணீர் இல்லாது போயிற்று' என்று சிலேடைநயம் மிளிரப் பேசிய ஆற்றல் அவருடைய அருஞ் செல்வம்.

இந் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழை வளர்த்த பெருந்தகைகளுள் வழக்கறிஞர்கள் முந்தி நின்றனர். ரா.பி. சேதுப்பிள்ளை. இரசிகமணி டி.கே.சி. கோ.சுப்பிரமணிய பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை, பல்கலைச் செல்வர் தெ.பொ.மீ., பொ.திருகூட சுந்தரனார் இவர்கள் அனைவருமே சட்டம்பயின்ற வழக்குரைஞர்கள். சட்டத்துறையைவிடத் தமிழ்த்துறையே சிறந்ததெனத் தமிழ்த்தொண்டாற்றியவர்கள் இவர்கள்.

நெல்லை மாவட்டம், பொருநை ஆற்றங்கரை, இராசவல்லிபுரம் சொல்லின் செல்வரின் சொந்த ஊர். அங்கே திண்ணைப்படிப்பு. பாளை சவேரியர் பள்ளியில் பள்ளிப்படிப்பு. நெல்லை இந்துக் கல்லூரியில் இடைநிலைப் படிப்பு. சென்னைப்பச்சையப்பன் கல்லூரியில் இளங்கலைப்பட்டம். சென்னை சட்டக் கல்லூரியில் சட்டப் படிப்பு.

பள்ளி மாணவராக இருந்த போதே பேசுவதில் ஆர்வம். பேச்சுப் போட்டிகளில் முதல் பரிசு பெறுதல். பச்சையப்பன் கல்லூரியில் முதல்நிலைப் பேச்சாளர். தமிழ் மன்றத் தலைவர். இவர்தம் தமிழார்வத்தைக் கண்டு பச்சையப்பனில் பட்டம் முடிந்த உடனேயே ஆசிரியப் பணியேற்பு. அதே சமயத்தில் சட்டக் கல்லூரியிலும் பயிறல்.

வழக்கறிஞராக இரண்டாண்டு சென்னையில் பயிற்சி. முழு நேர வழக்கறிஞர் பணியை மேற்கொள்ள நெல்லை திரும்புதல். பொதுப்பணியில் ஈடுபடுதல், தமிழ் இலக்கியத்தில் நாட்டம். திருக்குறளின் பெருமையை எடுத்துக்காட்ட நெல்லையப்பர் கோயில் வசந்த மண்டபத்தில் தொடர் சொற்பொழிவு. அதுவே 'திருவள்ளுவர் நூல்நயம்' என்று முதல் நூலாக உருப்பெறல். கம்ப இராமாயணத்தில் நாட்டம். பாளையில் கம்பன் கழகம் தோன்றுதல். அதில் கிழமை தோறும் கம்பன் பாடம் சொல்லல். மூன்று ஆண்டுகளில் அப்பணி முடித்தல். தொடர்ந்து ஆனந்த போதினியிலும், குமரன் இதழிலும் கட்டுரை எழுதுதல்.

பொதுப்பணியில் ஈடுபட்டதால் நெல்லை நகர்மன்ற உறுப்பினராதல். ஆறு ஆண்டுகள் அப்பொறுப்பில் இருத்தல். சிதைந்து கிடந்த தெருக்களின் தமிழ்ப் பெயர்களைச் சீராக்குதல். 'கூழக்கடை பஜார்' கூலக்கடைத் தெரு ஆயிற்று. யாதவர் தெரு காவற்புரைத் தெரு எனப் பழம்பெயர் பெற்றது. விளாமடித் தெரு

விலங்கடித் தெரு ஆயிற்று. அக்காசாலைத் தெரு அக்க சாலைத் தெரு ஆயிற்று.

புதிய தெருக்கள் அமைத்தபோது இளங்கோ தெரு, பாரதி தெரு, கம்பன் தெரு எனப் புதுப்புதுப் பெயர்கள் பெற்றன. இவை அனைத்தும் சொல்லின் செல்வரின் தமிழ்ப்பணி.

சொல்லின் செல்வரின் ஆழ்ந்த தமிழ்ப்புலமையைக் கண்டு வியந்து மகிழ்ந்த கா.சு.பிள்ளை தாம் பணியாற்றிக் கொண்டிருந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அவருக்கும் தமிழ்த்துறையில் பணியாற்ற வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தார். ஆறு ஆண்டுகள் தில்லையில் தமிழ்ப்பணி. நெல்லையில் பிறந்து தில்லையில் தமிழ் வளர்த்த பின் சென்னை நோக்கிப் பயணம். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை தழுவிக்கொள்கிறது. விரிவுரையாளராகப் பணியேற்றவர், முதல் தமிழ்த்துறைத் தலைவராகப் பதவி உயர்வு பெறுகிறார். இருபத்தைந்து ஆண்டுகள் தொடர்ந்து தமிழ்த்துறைப் பணியாற்றி ஓய்வு பெறல். ஆண்டு 1961.

சென்னையில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம். சென்னை ஒய்.எம்.சி.ஏ.வில் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் கம்பராமாயண வகுப்பு. நடத்துதல். கோகலே மண்டபத்தில் சிலப்பதிகார வகுப்பு. விளைவு 'சிலப்பதிகார நூல்நயம்' என்ற அரிய திறனாய்வு நூல். சென்னைக் கந்தகோட்டத்தில் கந்தபுராண வகுப்பு. ஆறு ஆண்டுகள் தொடர்ந்த பணி. விளைவாகக் கந்த புராணத்திலிருந்து கதைத் தொடர்புடன் சுவையான ஆயிரத்தைந்நூறு பாக்களைத் தேர்ந்து திரட்டிப் பொழிப் புரையுடன் மூன்று பகுதிகளாகக் 'கந்தபுராணத் திரட்டு' வெளிவரல்.

வள்ளுவர் மொழி பொருளன்றி அவர் மொழியும் பொன்னே போல் காத்த அவர் வழிவந்த புலவர்களின் நூல்களில் குறள் எவ்வாறு கையாளப்பெற்றுள்ளன என்பதை எடுத்துக் காட்டும் 'வழிவழி வள்ளுவர்' என்ற அரிய நூல் உருவாதல்.

தமிழ் நாட்டு ஊர்களின் பெயரை ஆராய்ச்சி செய்யும் பணியில் ஈடுபட்டுத் தாம் கண்டுபிடித்த புதிய செய்திகளை தமிழகம் 'ஊரும் பேரும்' என்ற நூலில் பேராசிரியர் தந்தார். தமிழ் நாட்டின் வரலாற்றைப் புதிய கோணத்தில் இந் நூல் தந்தது.

தமிழுக்குப் பெருமை சேர்த்த மேனாட்டுக் கிறித்துவப் பாதிரியார்கள் மற்றும் தமிழ் நாட்டுக் கிறித்துவப் பெருமக்கள் தமிழுக்காற்றிய தொண்டுகளைப் பேராசிரியர் அவர்களே முதன் முதல் நூல்கள் வடிவில் விளக்கினார். தமிழ் தனித்தியங்க வல்லது என்று விளக்கி, திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை முதன் முதல் தந்த கால்டுவெல் பாதிரியாரின் வரலாற்றைக் 'கால்டுவெல் ஐயர் சரிதம்' என்ற நூலில் தந்தார். வீரமாமுனிவர் இயற்றிய திருக்காவலூர்க் கலம்பகம் என்னும் நூலின் சிறப்பை 'திருக்காவலூர்க் கோவில்' என்ற நூலில் தந்தார். கிறித்துவத் தமிழ்த் தொண்டர் முன்னர்க் குறிப்பிடப்பட்டது போலக் கிறித்துவ அறிஞர்கள் செய்த தமிழ்த் தொண்டினை விளக்குவது.

தமிழின் பெருமையை நிலை நாட்டும் பல்வேறு கட்டுரைகளைத் தாங்கிய 'தமிழின்பம்' என்ற பேராசிரியரின் நூல் டெல்லி சாகித்ய அகாதெமி பரிசைப் பெற்றது. இது நாற்பது கட்டுரைகளின் தொகுப்பு நூலாகும். இதில் இடம் பெற்றுள்ள சரமகவிராயர், தெய்வம் படும் பாடு ஆகியவை இவருக்குள்ள இயல்பான நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்துபவை.

கம்பராமாயணத்தின் சிறப்பைச் சேதுப்பிள்ளை எடுத்துப் பரப்பி வந்த போது அதில் அடங்கியுள்ள காமரசக் குறிப்புகளைக் கொண்ட 'காமரசம்' என்ற நூலைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதியதுடன் கம்பராமாயணம் எரிக்கப் படவேண்டும் என்றார். அது படிக்கப்பட வேண்டும் என்றார் சொல்லின் செல்வர். இருவர்க்கும் 9.2.43 இல் சென்னை சட்டக் கல்லூரியில் இது குறித்துச் சொற்போர் நடந்தது. ஒட்டியும் வெட்டியும் பேசும் பாசாங்குப் பட்டிமன்றப் பாணியில் அமையாது உண்மையில் கனல்கக்கும் வாதங்களை அடுக்கடுக்காக வைத்த சொற்போர். நடுவர் தலைவர் கோவை கிழார் இராமச்சந்திரன் செட்டியார் எனும் தமிழ்ப் பேரறிஞர். 'தீ பரவட்டும்' என்று பேசினார் பேரறிஞர் அண்ணா. கம்பன் காவியம் தமிழ்ப் பண்பாட்டைக் காக்கும் காப்பியம் என்று நிலைநாட்டினார் பேராசிரியர். எத்தரப்புக்கும் வெற்றி தோல்வி யின்றி முடிந்தது சொற்போர். அஞ்சாத நெஞ்சராய், தம் சொல் வன்மையால் கூட்டத்தைக் கட்டுப்படுத்தியவர் சொல்லின் செல்வர்.

இவர்தம் பல்துறை ஆற்றலைப் பாராட்டும் முகத்தான் இவருக்குச் சென்னைப் பல்கலைக் கழகம் தன் நூற்றாண்டு

விழாவின் போது சிறப்பு டாக்டர் பட்டம் (டி.லிட்) வழங்கி இவரைப் பெருமைப்படுத்தியது.

இருபத்தைந்து ஆண்டுக்காலம் தொடர்ந்து தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றியமைக்காக இவரைப் பாராட்டிச் சென்னைப் பல்கலைக்கழகம் பெருவிழா எடுத்தது. விழா முடிந்த சில நாட்களில் பேராசியர் 25.4.1961 இல் இவ்வுலகை நீத்தார்.

தாம் ஈட்டிய பொருளை யெல்லாம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் சென்னைப் பல்கலைக் கழகத்திலும் தம் அன்னையார் சொர்ணாம்பாள் பெயரில் அறக் கட்டளைச் சொற்பொழிவுக்காக ரூபாய் 25,000 வீதம் இரண்டுக்கும் ஒதுக்கிவிட்டு எஞ்சிய தொகையை நெல்லையில் மகளிர் பேறுகால மருத்துவமனை அமைக்க ஒதுக்கினார். தமக்குப் பிள்ளை பிறக்கவில்லையாயினும் பிள்ளை பெறும் தாய்மார்களுக்கு அது பயன்படட்டுமே என்று அதனைச் செய்தார் போலும்.

இத்தகைய சொல்லின் செல்வரின், பேராசிரியப் பெருந்தகையின் நூற்றாண்டு விழாவைத் தமிழகமெங்கும் கொண்டாடத் தமிழக அரசு முன் வர வேண்டும். வருமென எதிர் பார்க்கிறோம்.

இல்லறம் நன்றோ? துறவறம் நன்றோ?

இல்லறம் நன்றோ? துறவறம் நன்றோ? என்னும் ஆராய்ச்சி சில இடங்களில் நிகழினும் இத்தகைய கணக்காயர் பாடத்தால் பெறும் பயன் அதிகம் இன்றென்பது திருக்குறளை நன்கு ஓதியுணர்ந்த பெரியார் கருத்தாகும். நாயனார், இவ்விரு நெறியையும் இரு கண்ணெனவே போற்றுகின்றாராதலின் அவர் மனத்தில் இதனின் இது சீரியது என்னும் எண்ணமே - எழுந்ததாகத் தோன்றவில்லை. 'அறன் எனப்பட்டதே இல் வாழ்க்கை' யென்று இல்லறத்தைச் சிறப்பித்த நாயனார், 'தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி வலைப்பட்டார் மற்றையவர்' என்று துறவறத்தின் சிறப்பைக் கூறினார்.

– திருவள்ளுவர் நூல்நயம்
டாக்டர். ரா.பி. சேதுப்பிள்ளை

வள்ளுவர் ஆளும் வர்க்கத்தை ஆதரித்த புலவரா ?

பா. வீரமணி

சிலம்பு - 70, பரல் - 6, பக்.239 தொடர்ச்சி

> **அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா**
> **மானம் உடைய தரசு.** - 384
>
> **இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
> **வகுத்தலும் வல்ல தரசு.** - 385

எனுங்குறள்களில் ஓர் அரசனுடைய கடமைகள் அல்லது அரசின் கடமைகள் என்ன என்பதை அறிவுறுத்துவதைக் காணலாம். ஏனைய நான்கு குறள்களில், மேற்கண்ட நெறியோடு மன்னன் ஆட்சி செய்தால் அதனால் அடையும் பயன் என்ன என்பதை விளக்குவதை உணரலாம். மேற்கண்ட குறள் நெறியில் ஆட்சி செய்தால், அவ்வாட்சி, பல்லாற்றானும் செம்மை மிகுந்த ஆட்சியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. மேற்கண்ட பண்புகளை மட்டுமே ஓர் மன்னன் பெற்றிருந்தால் போதுமானது. ஆனால், மன்பதை நாட்டமும், சமூகச் சிந்தனையும் நிறைந்த வள்ளுவர் அதோடு நின்றார் அல்லர். பொதுமக்கள் நலங்கருதி மன்னன், வேறு சில பண்புகளையும் பெற்றாக வேண்டும் என விரும்பினார். அவை யாவை?

> **காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்**
> **மீக்கூறும் மன்னன் நிலம்.** - 386
>
> **செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்**
> **கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.** - 389

அனைத்துப் பண்புகளையும், தகுதிகளையும் பெற்று, மக்கள் விரும்பும் செங்கோலாட்சி செய்யும், மாநிலம் போற்றும் மன்னனே என்றாலும் மக்கள் விரும்பும்போது காண்பதற்கு எளியவனாக மன்னன் இருத்தல் வேண்டுமென்றும், நாடாளும் மன்னனே ஆயினும், ஆணவம் கொண்டு 'மக்கள் தானே' எனக் கருதி அவர்களோடு பேசும்போது எந்நிலையிலும் கடுஞ்சொல்லைப் பயன்படுத்தக் கூடாது - என்று கூறுவதையும் காணலாம். மற்றும், ஆள்பவர்கள் யாரானாலும் அவர்களுக்குப் பொறுமை வேண்டும். மக்கள் சொல்லும் குறைகளைக் கண்டு சீறி விழக்கூடாது. அவர்கள் சொல்லும் குற்றம் குறைகளை உற்றுக் கேட்க வேண்டும். அவர்கள் சொல்லும் குறைகள்

நியாயமானவைகளாக இருந்தால் அவற்றைத் தவிர்க்க வேண்டுமெனும் சீரிய ஜனநாயகப் பண்புகளையன்றோ "செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்" எனுங் குறளில் விளக்குகிறார். இப்படிக் குடிமக்கள் சார்பாகக் குரல் எழுப்பிய வள்ளுவனை, ஆளும் வர்க்கத்தை ஆதரித்த புலவன் என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்?

செங்கோன்மையும் கொடுங்கோன்மையும்

"செங்கோன்மையாவது அரசனால் செய்யப்படும் முறையினது தன்மை. அம்முறை ஒரு பால் கோடாது செவ்விய கோல் போறலின் செங்கோல் எனப்பட்டது" என்பர் பரிமேலழகர். சுருங்கக் கூறின், செவ்விய முறையில் நடத்த வேண்டிய ஆட்சி முறையைப் பற்றிக் கூறுவது செங்கோன்மையாகும். இதற்கு மாறானது கொடுங்கோன்மையாகும்.

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர் - 550

செங்கோன்மையில் வரும் இக்குறளில் கொடியவர்களை மன்னன் ஒறுப்பது அல்லது தண்டிப்பது, பயிரைக் காப்பாற்றக் களைகளைக் களைவதற்கு ஒப்பாகும் எனக்கூறுவதால், வள்ளுவர் பெரிதும் மன்னர்க்குச் சார்பாக இருந்திருக்கக்கூடும் எனச் சிலர் கருதியிருக்கலாம். நாட்டின் முன்னேற்றத்திற்குப் (பெரும்பான்மை மக்களுக்கு) பெரும் தடையாக இருக்கும் சிலரை, பெரும்பான்மையான மக்கள் நலங்கருதிக் கடுமையாகத் தண்டிப்பதில் குற்றமில்லை. நம் காலத்தில் உலகில் உள்ள பலநாடுகள் (சோஷலிச நாடுகளும் கூட) இன்றும் இம்முறையைப் பின்பற்றித்தான் வருகின்றன. ஆனால், இந்த ஒரு குறளை மட்டும் கொண்டு வள்ளுவரின் எண்ணத்தை மதிப்பிடுவது சரியாகுமா?

ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை - 541

கொலைமேற்கொண் டாரிற் கொடிதே அலைமேற்கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து - 551

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து - 561

கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம் - 567

எனும் குறள்கள் வாயிலாக, குடிகளை வருத்தும் முறையற்ற செயல்களால் ஆட்சி நடத்தும் மன்னன், கொலைத் தொழிலைக் கொண்ட வரைவிடக் கொடியவன் என்றும், செய்த குற்றத்தைத் தக்கவாறு ஆய்ந்து மீண்டும் அக்குற்றம் செய்யாதபடி குற்றத்திற்குப் பொருந்துமாறு தண்டிப்பவனே மன்னன் ஆவான் என்றும், கடுமையான சொல்லும், முறைகடந்த தண்டனையும் அரசனின் பகையை வெல்லும் வலிமையைத் தேய்க்கும் அரமாகும் என்றும் கூறுவதைக் காணலாம். இதனால் (குற்றம் செய்பவர்களை முறையற்ற வகையில் மன்னன் தண்டிப்பானேயானால், அவனுடைய அரசு அழிந்து விடும் என்று வள்ளுவர் மிகக் கடுமையாக எச்சரிப்பதால், வள்ளுவர் எந்நிலையிலும் பொதுமக்களைச் சார்ந்தே நிற்கிறார் என்பதை நன்கு உணரலாம்.

"திருவள்ளுவர் மக்களின் நல்வாழ்வைக் குறிக்கோளாகக் கொண்டு பொருட்பால் எழுதியவர் ஆகையால் அவர் இந்த அடிப்படைகளிலேயே கருத்தைச் செலுத்தி ஆராய்ந்து கூறியுள்ளார். அவர் தமிழ்நாட்டு மூவேந்தர்களின் மரபுகளையோ கொடி, பூ முதலியவற்றையோ கூறுவதில்லை; குறுநில மன்னர்களின் மரபுகளையும் கூறவில்லை. மக்களின் வாழ்க்கை விளக்கி வழிகாட்டப் புகுந்த பெரியோர் ஆதலின் அவர் பொருட்பாலில் விளக்கியுள்ள அரசியல் கருத்துகள் எந்த ஆட்சி முறைக்கும் அடிப்படையாக வேண்டிய கருத்துகளாக விளங்குகின்றன" (டாக்டர் மு.வ. திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், பக் 84) இவ்விளக்கத்தின் வாயிலாக வள்ளுவர் நிற்பது மக்கள் பக்கமா? அல்லது மன்னன் பக்கமா? என்பதை நன்கு அறியலாம். மற்றும், உழவு அதிகாரத்தைக் கூர்ந்து நோக்கின் வள்ளுவரின் வர்க்க சார்பை நன்கு உணர்ந்து கொள்ள முடியும். இவ்வதிகாரத்தில் உழைக்கும் உழவனைப் பற்றிப் பேசுகிறாரேயன்றி, மன்னரைப் பற்றியோ நிலவுடைமையாளரைப் பற்றியோ சிறிதும் குறிப்பிடவில்லை. பேராசிரியர் டாக்டர் கைலாசபதி கூறுவதைப் போன்று வள்ளுவர் ஆளும் வர்க்கத்தை ஆதரித்த புலவராக இருந்திருப்பின், உழுவித்துண்பாரை (நிலவுடைமையாளர்) உழவு அதிகாரத்தில் சிறப்பாகக் குறிப்பிட்டிருப்பார். ஆனால், வள்ளுவர் அவ்வாறு குறிப்பிடாமல்,

"உழுவார் உலகத்தார்க்கு ஆணி" - 1032 என்றும்
உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் - 1033 என்றும்
சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் - 1031 என்றும்

உழைக்கும் உழவர் பெருமக்களை உலகத்துத் தலைமக்களாகவே போற்றுகிறார். இப்படிப் பாராட்டுவதுடன் நின்றுவிடாமல், உழவரையும் மன்னரையும் ஒப்பிட்டுச் சிறப்புடையவர் யார்? என்பதை நமக்கு அறிவிக்கவும் முற்படுகிறார்.

> **பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்**
> **அலகுடை நீழ லவர்** - 1034

இக்குறள் வழியாக, நெல்லினையுடைய தண்ணளி பொருந்திய உழவர், அரசர் பலரின் குடை நிழல்களையும் தம் குடையின் கீழ்க் காணவல்லவர் ஆவர் என்கிறார் எனில் உழவர் பெருமக்களை, அவர்களின் உழைப்பை எப்படியெல்லாம் வள்ளுவர் போற்றியிருக்கிறார் என்பதை நன்கு உணரமுடிகிறதன்றோ! உழவு அதிகாரத்தில் முழுக்க முழுக்க உழைக்கும் மக்களின் பெருமையையும், உழவையும் வள்ளுவர் பெரிதும் போற்றுவதால், அவர் உழைக்கும் வர்க்கத்தைச் சார்ந்தவர் என்பதையும், அவ்வர்க்கத்தை ஆதரிப்பவர் என்பதையும் எளிதில் துணியலாம்.* இங்குத் தலை சிறந்த உலக நாடகாசிரியரான ஷேக்ஸ்பியரை ஒப்பிட்டு நோக்குதல் வேண்டும். ஷேக்ஸ்பியர் தம் நாடகங்களில் மேல் தட்டு மக்களின் கூற்றைக் கவிதையிலும், கீழ்த்தட்டு மக்களின் கூற்றை உரைநடையிலும் கூறியிருப்பதைக் கொண்டு அவருடைய சமூகக் கொள்கையையும், மேல்தட்டுமக்கள்பால் நின்ற வர்க்க சார்பையும் உணர்ந்து கொள்ளலாம் எனச் சமூகக் கண்ணோட்டம் உள்ள இலக்கிய ஆய்வாளர் கூறுவர். ஆனால், ஷேக்ஸ்பியர்க்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தோன்றிய வள்ளுவரிடத்தில் அந்நிலைப்பாட்டைச் சிறிதும் காணமுடியாது.

மேலும், பொருட்பாலில் உள்ள எழுபது அதிகாரங்களில், இறைமாட்சி, குற்றங்கடிதல் பெரியாரைத் துணைக்கோடல், தெரிந்து செயல்வகை, வலியறிதல், காலம் அறிதல், இடன் அறிதல், தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல், சுற்றந்தழால், செங்கோன்மை, கொடுங்கோன்மை, வெருவந்த செய்யாமை, ஒற்றாடல், மடியின்மை, அமைச்சு, வினைத்தூய்மை, வினைத் திட்பம், வினைச் செயல்வகை, தூது, மன்னரைச் சேர்ந்தொழுகல், நாடு, அரண், பொருள்செயல்வகை, படைமாட்சி, படைச் செருக்கு, பகைமாட்சி, பகைத்திறம் தெரிதல், உட்பகை,

*** (மேலும், விளக்கத்திற்கு இக் கட்டுரையாளரின் "பலகுடையும் தங்குடையும்" எனும் கட்டுரையைக் காண்க. - செந்தமிழ்ச்செல்வி 1993-நவம்பர், டிசம்பர், 94-ஜனவரி இதழ்களைக் காண்க.)**

பெரியாரைப் பிழையாமை ஆகிய முப்பத்தியொரு அதிகாரங்களில் அரசரையும் அரசையும் பற்றி அவர் விளக்குகிறார். மற்ற முப்பத்தொன்பது அதிகாரங்களில் குடிமக்களைப் பற்றிப் பேசுகிறார். அரசரையும், அரசையும் பற்றிக் கூறும் முப்பத்தியொரு அதிகாரங்களில் கூட, அரசரின் சிறப்பைப் பற்றியோ, மாண்பைப் பற்றியோ பெரிதும் பேசாமல், குடிமக்களின் நன்மை கருதி ஆட்சி செய்யும் மன்னர்க்குரிய வழிமுறைகளையே கூறுகிறார். ஒவ்வொரு மன்னரும் "குடிதழீஇக்கோ லோச்சும் மாநில மன்னனாக" இருத்தல் வேண்டும் என்பதே வள்ளுவர் விருப்பம். பொருட்பாலில், பல்வேறு அதிகாரங்களில் திரும்ப திரும்ப அரசர் பற்றியும், அரசு பற்றியும் வள்ளுவர் கூறுவதற்குக் காரணம், ஆளும் வர்க்கத்தை ஆதரிக்கும் நிலை அன்று; மாறாக, ஆளும் வர்க்கம், அறநெறியைப் போற்றி மக்களை நன்முறையில் புரக்க வேண்டும் என்பதே யாகும். மக்கள் நலத்தை நன்கு பேணி "அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா மானம் உடைய அரசாக" ஒவ்வொரு அரசும் விளங்கவேண்டும் என்பதற்காகவே வள்ளுவர் பொருட்பாலைப் பெரிதும் விரித்துப் பேசினார் எனலாம்.

மேலும், குறிப்பிடத்தக்கது ஒன்று உண்டு. வள்ளுவர் உண்மையிலேயே ஆளும் வர்க்கத்தையோ, உடைமை வர்க்கத்தையோ ஆதரிப்பவராக இருந்திருப்பாராயின், உழைக்கும் மக்களை ஏனைய மக்களோடு ஒப்பிட்டு அவர்களை இழிவாகவோ, கேவலமாகவோ குறிப்பிட்டிருப்பார். ஆனால் வள்ளுவர் அவ்வாறு குறிப்பிடாமல், "உழுவார் உலகத்தார்க்கு ஆணி" என்று உயர்த்தியே குறிப்பிட்டுள்ளார். உழைக்கும் மக்களை மட்டுமே அல்லாமல், சமுதாயத்தின் கடைகோடி மக்களான ஏழைகளின் வறுமையாளர்களின் அவலநிலையையும், இழிநிலையையும் எண்ணி வருந்தி, அவர்களுக்கு ஆதரவாக உடைமைவர்க்கத்தை எதிர்த்தவர், இடித்துரைத்தவர் வள்ளுவர் எனலாம். வறுமையாளர்களையும், பொருள் இல்லாதவர்களையும் காப்பாற்றுகிற பெரும்பொறுப்பு மன்னர்களுக்கே உண்டு என்றாலும், சிலபோழ்து செல்வர்களுக்கும் அப்பொறுப்பு உண்டென்பதை வள்ளுவர் பல இடங்களில் வலியுறுத்தியுள்ளார். அச் செல்வர்களின் செல்வம் நோய்போன்றது (1006) என்றும், நச்சுமரம் போன்றது (1008) என்றும், பால் திரிந்தது போன்றது (1000) என்றும் பிறர்க்கு வழங்காமல் தாமே பொருளைத் துய்க்கும் தன்மை இறத்தலைக் காட்டிலும் கொடுமையானது (229) என்றும் சாவதைவிடத் துன்பமானது வேறொன்று இல்லை. ஆனால்,

218533

வறியவர்க்கு ஒருபொருள் கொடுக்க முடியாத நிலை வந்தபோது அச்சாதலும் இனிதே ஆகும் - 230 என்றும் கூறுவதைக் காணலாம்.

செயற்பால செய்யா திவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும் - 437

பொருளில்லாதவர்களின் இழிநிலையை உணர்ந்து, செல்வர்கள் பொருளை ஈயவில்லையென்றால், அவர்களது செல்வம் உய்வில்லாமல் கெடும் எனச் சாடுகிறார். ஈயாத கருமியின் செல்வம் கெடும் எனும் நிலையால் மட்டும் வள்ளுவர் நிற்கவில்லை. பிறர்க்கு வழங்கும் உதவியைக் கண்டு வேறொருவன் பொறாமைப் படுவானேயானால் அவனும், அவனது சுற்றமும், உணவும் உடைமையுமின்றிக் கெடுவார்கள் என்றும் வள்ளுவர் மிக வன்மையாகவே கடிந்துரைப்பதைக் கீழ்க்காணும் குறளில் நன்கு உணரலாம்.

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும் - 166

இக்குறளை நன்கு நோக்கினால் வறுமையாளர்களைப் பற்றி வள்ளுவர் எத்துணை அனுதாபத்துடன் ஆழமாகச் சிந்தித்துள்ளார் என்பதையும், அவர்தம் வர்க்க சார்பையும், ஆளும் வர்க்கத்தை மட்டுமேயன்றி, உடைமைவர்க்கத் தையும் எதிர்த்தவர் வள்ளுவர் என்பதைத் தெள்ளிதின் உணரலாம்.

(தொடரும்)

சைவம்

சைவம் சிவபெருமான் ஒருவனைத் தவிர வேறு எத்தெய்வத்தையும் முழுமுதற்பொருளாக ஏற்றுக் கொள்ளவில்லை. சிவன் தமிழர் கண்ட தெய்வந்தான்: என்றாலும் சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன் என்று சைவ நெறி கூறுகிறது. சைவம் சுமார்த்தம் போல் ஓர் இனத்தவர்க்கும் மட்டும் உரிய மதம் அன்று. எல்லாச் சமயமும் இறைவனால் உருவாக்கப்பட்ட மதம் என்றாலும் இடைக்காலத்தில் அச்சமயத்தின் புனித உருவங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. சைவமோ அதன் மூல தத்துவத்தைச் சிறிதும் மாற்றாது உலகில் ஒரு சிறிய எறும்பு முதல் பெரிய யானை ஈறாக - அறிவுடைய மக்கள் உள்பட எல்லா உயிர்களிடத்தும் அன்புகொள்ளச் செய்யும் புனிதமான சமயமாக விளங்கி வருகிறது.

- கழக வெளியீடு
தமிழக சாவகக் கலைத் தொடர்புகள்
அ. இராகவன்

அகர முதலும் ஆதிபகவனும்

திரு. க. கணேசலிங்கம், B.Sc., (Eng.)
C.Eng; M.I.E.E. (Lond.); M.I.E. (Cey.).

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'.

திருக்குறளில் முதல் அதிகாரமான கடவுள் வாழ்த்தின் முதற் குறள் இது. எழுத்துகளெல்லாம் அகரத்தை முதலாக உடையன; அது போல் உலகம் இறைவனை முதலாக உடையது, - என்பதே இக்குறளுக்குப் பலரும் காணும் பொதுவான பொருள். பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார் போன்ற முன்னைய உரையாசிரியரும் திரு.வி.க. போன்றவர்களும் இப்பொருளையே, சில மாற்றங்களுடன், காண்கின்றனர். காலிங்கர் மட்டும், அகரத்திலிருந்து எழுத்துக்கள் விரிந்தன; அங்ஙனமே மூலகாரணனாகிய இறைவனிடத்திலிருந்து இவ்வுலகப் பொருட்களெல்லாம் விரிந்தன, என்று பொருள் காண்கிறார். இது அத்வைதக் கொள்கை சார்ந்த கருத்தாக அமைகிறது. கடவுட் கொள்கையை ஏற்காத அண்மைக் காலத்தறிஞர்கள், ஆதிபகவன் என்பதற்கு வேறுபட்ட பொருள் காணுகின்றனர். ஆயினும் ஆதிபகவன் என்பது உலகத்திற்கு முதலாக உள்ள பொருள் என்பதை எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்தாக இக்குறள் கூறுகிறது.

எழுத்துக்களுக்கு முதலாக இருக்கின்ற - தலைமை குறித்த - சிறப்பொன்றையே கருத்திற் கொண்டு, அகரத்தை ஆதி பகவனாகிய உலக முதலுக்கு உதாரணமாக திருவள்ளுவர் எடுத்தாண்டாரா என்பது ஆய்வுக்குரியது. அத்துடன் அவர் கூறும் ஆதிபகவன் விளக்குவதென்ன என்பதும் சிந்தனைக்குரியது.

வள்ளுவரின் கடவுட்கொள்கை

கடவுள் வாழ்த்தென்பது கவி, தான் வழிபடு கடவுளையாதல், எடுத்துக்கொண்ட பொருட்கு ஏற்புடையக் கடவுளையாதல் வாழ்த்துதல் என்பது பரிமேலழகர் கருத்து. கடவுளை வாழ்த்துதலே கடவுள் வாழ்த்து என்பது மணக்குடவர் கருத்து. ஆனால் வள்ளுவர் கையாண்ட கடவுள் குறித்த

பெயர்களிலிருந்து வள்ளுவர் வழிபடு கடவுளை இதுவெனச் சுட்டிக் காட்ட முடியாது. வேறுபட்ட பொருட்கள் பற்றிப் பேசும் வள்ளுவத்தில் 'எடுத்துக் கொண்ட பொருட்கு ஏற்புடைக் கடவுள்' என்று எதனையும் குறிப்பிட்டுக் கூறவும் முடியாது.

திருக்குறளின் கடவுள் வாழ்த்தில் கடவுளைக் குறிக்கும் பொதுச் சொற்களாக பகலன், இறைவன் என்ற இரு சொற்கள் வருகின்றன. முதற்குறளில், பகலனும், ஐந்தாம் பத்தாம் குறள்களில் இறைவனும் எடுத்தாளப்படுகின்றன. மற்றைய குறள்களில் வரும் கடவுள் பற்றிய சொற்கள் அவனின் பண்பு அல்லது நிலை பற்றியனவாக வருகின்றன. வாலறிவன், மலர்மிசையேகினான், வேண்டுதல் வேண்டாமை இலான், ஐந்தவித்தான், தனக்குவமையில்லாதான், அறவாழி அந்தணன், எண் குணத்தான் போன்ற சொற்கள் இறைவனின் பல்வேறு பண்புகளை உணர்த்துவதாக அமைகின்றன.

கடவுள் என்ற சொல் தொல்காப்பியத்திலும் அதன் பின் வந்த நூல்களிலும் பல இடங்களில் ஆளப்பட்டுள்ளது. வள்ளுவருக்கு முன்னும் பின்னும் அறிஞர்களால் ஆளப்பட்ட கடவுள் என்ற சொல்லைத் திருக்குறளில் எந்த இடத்திலும் காண முடியாதிருக்கிறது. திருவள்ளுவர் வேண்டுமென்றே இச்சொல்லைத் தவிர்த்தாரா? அப்படியாயின் அதன் காரணமென்ன? என்ற வினாக்கள் எழுகின்றன.

கடவுள் என்ற சொல் தமிழகத்தில் காலத்துக்குக் காலம் ஒரே கருத்தில் கையாளப்பட்டது என்று கூறமுடியாது. தொல்காப்பியத்தில் கடவுள் என்ற சொல் அமரர் அல்லது தேவர்களைக் குறிப்பதாக வருகிறது. பின்வந்த சங்க நூல்களிலும் பல கடவுளர்கள் குறிக்கப்படுகின்றனர். இவை பற்றிய பின்வரும் குறிப்பு சிந்தனைக்குரியது.

> 'தெய்வம் கடவுள் என்ற சொற்கள் பண்டைத் தமிழகத்தில் பல்வேறு பொருள்களைக் குறிப்பனவாக இருந்தன. மாயோன், சேயோன், வேந்தன், வருணன், ஆகிய நிலத்திற்குரிய தெய்வங்கள், படைத்தல், காத்தல் அழித்தல் ஆகிய தொழில்களைச் செய்யும் தெய்வங்கள், அவரவர் வழிபடு தெய்வங்கள் என பலவகைக் கடவுளரை சங்க நூல்களிலே காணலாம். இவை தவிர கடவுள் தெய்வங்கள் ஆகிய சொற்கள் துறவிகளையும் முனிவர்களையும் குறிப்பனவாகவும் உள்ளன; என்பதும் அறிஞர் கருத்து'.

(க. கணேசலிங்கம்; 'வகுத்தான் வகுத்தவகை' கட்டுரை; செந்தமிழ்ச்செல்வி, பிப்ரவரி 1994)

இங்ஙனம் பல்வேறு 'கடவுளர்கள்' மக்களிடை நிலவிய காலத்தில் கடவுள் என்ற சொல்லை எடுத்தாளாமல், ஆதிபகவன் என்ற சொல்லை உலகுடன் தொடர்புபடுத்தி, எல்லோருக்கும் பொதுவான, ஏற்றதாக அமைந்த ஒரு கடவுளையே வள்ளுவர் முன்னிறுத்துகிறார். இங்கே, திருக்குறள் ஆய்வாளர் காமாட்சி சீனிவாசன் கூறுவது இதனை வலியுறுத்துவதாக அமைகிறது.

> "பழந்தமிழர் கடவுள் என்னும் சொல்லை எவ்வெப் பொருள்களில் பயன்படுத்தினாலும் வள்ளுவர் தம் கடவுள் வாழ்த்துள் பொதுவாக ஒரு கடவுளையே கூறினார்"

(காமாட்சி சீனிவாசன் 'குறள் கூறும் சமயம்' மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1979)

மேலான ஒரு பொருள் :

பகவன் என்ற வடமொழிச் சொல் தொழப்படும் அல்லது பூசிக்கப்படும் பண்புடையவன் என்ற பொருள் குறிக்கும் என்பது அறிஞர் கருத்து. (வச்சிரவேலு முதலியார் க. 'திருக்குறளின் உட்கிடை சைவசித்தாந்தமே') மேலைநாட்டு அறிஞர் ஜி. யு. போப்பும் ' என்றுமுள்ள தொழத்தக்க ஒருவன்!' (The Eternal Adorable one) என்று பொருள் காண்பர். இந்தக் கருத்தில் பகவன் என்ற சொல் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளத்தக்க மேலான ஒரு பொருளாக இருக்கிறது.

ஆதிபகவன் என்பதற்கு ஆதியாகிய பகவன், மூலகாரணனாகிய இறைவன், ஆதி பரமேஸ்வரன், என்ற பொருள்களில் பழம்பெரும் உரையாசிரியர்களும், முழுமுதற் கடவுள், முதல் உலக குரு என்று திரு.வி.க., கா. அப்பாத்துரை, போன்ற அறிஞர்களும் உரை கண்டனர். பொருள் முதல் வாதத்தைக் கடைப்பிடிக்கும் அண்மைக் காலத்தறிஞர் சிலர், மூலப்பகுதி அல்லது பிரகிருதி என்று பல்வேறு பொருள் காண விழைகின்றனர். சாங்கிய மெய்யியல் கொள்கையின் அறிவுசார்ந்த உண்மையான மூலப்பகுதியைத் திருவள்ளுவர் உட்கொண்டு

தமக்கே உரிய வகையில் அதற்கிணையான "ஆதி பகவு" என்ற மெய்யியற் சொற்றொடரை தானே உருவாக்கி, அதற்கு மாட்சிமை காட்டுவதற்காக 'அன்' என்கிற உயர்திணை ஆண்பால் விகுதியைச் சேர்த்து 'ஆதிபகவன்' என்ற சிறப்புப் பெயராக்கினார் என்பது இவர்கள் கருத்து. (கு.ச. ஆனந்தன், 'திருக்குறள் உண்மைப் பொருள்', தங்கம் பதிப்பகம்). இத்தகைய கருத்துக்கள் வலிந்து கொள்ளப்பட்டனவாகவும், மரபுமுறையை கருத்திற்கொள்ளாமல் எழுதப்பட்டனவாகவும் அமைகின்றன. திருக்குறளில் வரும் இறை குறிக்கும் வேறு பெயர்களை ஆய்ந்தால் இவற்றின் பொருந்தாமை பெறப்படும்.

கடவுள் என்ற சொல் பல்வேறு பொருள்களில் ஆளப்பட்டு வந்த காலத்தில் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளத் தக்கவாறு 'தொழப்படும் நிலையான பொருள்' என்ற கருத்திலே பகவன் என்ற சொல்லையும், கடவுள் குறிக்கும் எல்லாப் பொருட்களுக்கும் மேலான பொருள் ஒன்றை - முழு முதற்கடவுளை - குறிப்பதாக ஆதி பகவன் என்ற சொல்லையும் தன் முதல் குறளிலே கையாண்டது வள்ளுவரின் பொது நோக்குக்கும் நுண்மாண் நுழை புலத்திற்கும் சான்றாக அமைகின்றன.

காளிங்கர் உரை

வள்ளுவர் கூறும் 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்ற தொடர், உலகம் வேறு உலக முதலாகிய இறைவன் வேறு என்பதை உணர்த்துவதாக உள்ளது. இறைவனை உலகியற்றியான் என்றும் வள்ளுவர் குறிப்பிடுகிறார். (குறள். 1062). இதிலிருந்தும் இறைவன் வேறு உலகம் வேறு என்பது வள்ளுவர் கருத்தாக இருப்பதையும், அவர் அத்வைதக் கருத்தைக் கொண்டிருக்கவில்லை யென்பதையும் அறியலாம். ஆகவே, எல்லாமே 'மூலகாரணனாகிய இறைவன் கண்ணே விரிந்தன' என்று காளிங்கர் காணும் பொருள் வள்ளுவரின் கட்வுட்கொள்கைக்கு ஏற்றதாக இல்லை.

உலகமும் முதலும்

வள்ளுவரின் குறள் சமுதாய நலன் கருதிச் செய்யப்பட்ட ஒப்பற்ற ஒரு அறநூல். வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தால் வானுலக வாழ்வு இங்கேயே அமையும் என உணர்த்துவது 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்' என்ற அருளாளர் வாக்குக்கு வழிசெய்வதாக வந்தது வள்ளுவம். ஆயினும் கடவுள்

வாழ்த்தாக அமைந்த குறட்பாக்கள் மட்டும் இறையுண்மையை நிறுவுவதாகவும் இறைப்பண்புகளை உணர்த்துவதாகவும் திகழ்கின்றன.

முதற் குறள் தவிர்த்த மற்றைய பாக்கள் வாழ்வின் நன்னெறிக் கூறுகளைக் கடவுளின் வடிவங்களாக உருவகப்படுத்தியும் மேலான பொருள் ஒன்றை நெஞ்சில் நிறுத்தி நன்னெறி கண்டுய்வதற்கு வழி கூறுவனவாகவும் அமைந்துள்ளன. இவற்றின் வேறுபட்டதாக, வாழ்வியற் பண்புகளைத் தொடர்புபடுத்தாமல், முதற்குறளை அமைத்து உலக முதலாக ஒன்றை வள்ளுவர் நிறுவுகிறார். எழுத்துக்களை உலகுக்கு ஒப்பிட்டுக் கூறுவதால், உலகம் ஒரு தனிப்பொருளன்று, தொகுதிப்பொருள் என்பது புலனாகிறது. பின்வந்த சித்தாந்தப் பெருநூலான சிவஞான போதத்தின் முதற்பாடலும் இக்கருத்தைக் கொண்டிருப்பதைக் காணலாம்.

"அவனவ ளதுவெனும் அவைமூ வினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்"

இதன் பொருட் சுருக்கம், 'அவன் அவள் அது என்று எம்மால் சுட்டி அறியப்படும் தொகுதிப் பொருளான (அவை) உலகம், முத்தொழிலின் பயனை உறுதற்குரியதாயிருத்தலின், தோற்றுவிக்கத் தோன்றி நின்ற முறையே ஒடுங்கிப் போதல் உயிர்களது மலங்காரணமாக உண்டாவதாம்; உலகின் ஒடுக்கத்துக்குக் காரணனான (அந்தம் செய்யும்) கடவுளே ஆதியான முதற்கடவுள் என்று அறிவுடையோர் கூறுவர்' என்பதாகும். இங்கே உலகம் ஒரு தொகுதிப் பொருள் என்பதையும் அதற்கு முதலாக ஆதியான பொருள் ஒன்று உண்டென்பதையும் மெய்கண்டார் முதலில் கூறி நூல் செய்வதைக் காணலாம். சிவஞான போதத்துக்குப் பல நூற்றாண்டுகளின்முன் வந்த திருக்குறளின் கடவுள் கொள்கை சித்தாந்தக் கொள்கையாக இருப்பது இங்குக் கருதற்பாலது.

தத்துவம் பொது

சித்தாந்த அடிப்படையில் கண்ட பொருள் எனினும், இதனை ஒரு குறிப்பிட்ட சமயத்தவர் கருத்தாகக் கொள்ள வேண்டியதில்லை. சமயங்கள் பலவாயினும் சமய தத்துவங்கள் எல்லோருக்கும் பொதுவானவை. மேலை நாட்டுத்

தத்துவங்களிடை வேறுபட்ட நோக்கிருப்பினும் அவற்றை வேறுபாடு கருதி எவரும் ஒதுக்குவதில்லை. இந்திய தத்துவங்கள் எனவரும் பொழுது விருப்பு வெறுப்புக்கு ஆளாகி ஒரு பக்கம் சார்தல் எம்மவரின் வழக்கமாக இருக்கிறது.

தத்துவங்கள் என்று வரும்பொழுது எந்தச் சமய தத்துவமும் ஒரே வழியில் வளர்ந்ததில்லை. கிறித்தவம் பௌத்தம் போன்ற சமயங்களில் பல பிரிவுகள் உண்டாகியிருப்பதே அந்தந்தத் தத்துவத்துறையில் வேறுபாட்டையும் மாறுபாட்டையும் காட்டுவனவாக இருக்கிறது. இந்திய தரிசனங்கள் எதுவும் மாறுபாடடையாமல் முன்பிருந்த தனித்துவத்துடன் வளர்ந்ததில்லை. சித்தாந்தம் கூட இதற்கு விதிவிலக்கல்ல. உள்ளது அழியாது, இல்லது தோன்றாது என்ற சித்தாந்தக் கொள்கை (சற்காரியவாதம்) ஒரு சாங்கியக் கொள்கையும் கூட. இந்தச் சாங்கியக் கொள்கையையே சித்தாந்தம் உள்வாங்கி இருக்கிறதென்பது சில அறிஞரின் கருத்து. இங்ஙனம் பல எடுத்துக்காட்டுக்களைக் காட்டலாம். ஆகையால் எத்தகைய தத்துவமானாலும் அதனை ஒதுக்காமல் மெய்ப்பொருள் காண்பதே அறிவு. சித்தாந்தம் தமிழகம் போற்றி வளர்த்த தத்துவக்கொள்கை. எந்தக் கொள்கையையும் ஒதுக்கித் தள்ளாமல் ஆராய்ந்து பார்த்துக் கொள்வதும் விலக்குவதும் அதன் மரபு.

அகரத்தின் முதன்மை

திருக்குறளுக்கு உரைகண்ட பரிமேலழகர் "அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும், ஆதி பகவற்குத் தலைமை செயற்கை யுணர்வானன்றி இயற்கையுணர்வான் முற்றும் உணர்தலானுங் கொள்க" என்று விளக்குகிறார். 'அகர முதல' என்பதில் முதன்மை தலைமைபற்றி வந்த எடுத்துக்காட்டு உவமை என்பது பரிமேலழகர் கருத்து.

'ஆதிபகவன் முதற்றே உலகு' என்பதற்குப் பொருள் கண்ட மேல்நாட்டு அறிஞர்களான பெஸ்கி, எல்லீசு போன்றவர்களும் முதன்மை என்பதற்குத் தலைமை என்றே பொருள் கண்டனர். "உலகம் இறைவனைத் தலைவனாகக் கொண்டது" (The World has God as its head) என்று பெஸ்கியும் "எல்லா உலகங்களிலும் என்றுமுள இறையே தலைவர்" (In all the world, the Eternal God is Chief) என்று எல்லீசும் விளக்குவர்.

எழுத்துக்களின் ஒலிக்கு அகர ஒலி அடிப்படையாக அமைந்ததென்பது அறிஞர் கருத்து. இக்குறளுக்கு விளக்கம் அளிக்கும் திரு.வி.க. பின்வருமாறு விளக்குவார்.

> "அகரம் தனித்தும், அகர ஒலியாயெழுந்தும், மற்றெழுத்துக்கெல்லாம் ஆகியும், அவற்றை இயக்கியும் வருவது போல, ஆதி பகவனும் தனித்தும் உலகமெலாமாகியும் அவற்றை இயக்கியும் வருகிறார்"
>
> **- (திரு.வி.க., 'திருக்குறள் விளக்கவுரை')**

அகரம் பற்றிய திரு.வி.க.வின் இக்கருத்து சைவ சித்தாந்த அடிப்படையிலுள்ள கடவுள் கொள்கையை ஒத்திருக்கிறது. இறைவன் உயிர்களுடன் ஒன்றாய் உடனாய் வேறாய் இருக்கிறான் என்று இறை உயிர்த்தொடர்பைச் சித்தாந்தம் விளக்கும். உயிர்களுடன் இறைவனுக்குள்ள தொடர்பு போல், எழுத்துலகத்துடன் அகரத்துக்குள்ள தொடர்பும் அகர ஒலியாய் தனித்து எழுந்தும் (வேறாகியும்) மற்றெழுத்துக்களின் ஒலியாகியும் (ஒன்றாகியும்) அவற்றை இயக்கியும் (உடனாகியும்) விளங்குகிறது.

பழந்தமிழ் நூலான தொல்காப்பியம் மெய் எழுத்துக்களின் ஒலி அமைப்பு அகர எழுத்தினைப் பொருந்தி அமையும் என்கிறது.

"மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்". இந்த அடிக்கு உரைகண்ட நச்சினார்க்கினியர், இறைவன் இயங்கு திணைக் கண்ணும், நிலைத்திணைக் கண்ணும் பிறவற்றின் கண்ணும், அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லோர்க்கும் ஒப்ப முடிந்தாற் போல, அகரமும் உயிர்க்கண்ணும், அவற்றின் தனிமெய்க் கண்ணும், கலந்து அவற்றின் தன்மையாகவே நிற்கும் என்பது ஒப்ப முடிந்தது" என்று விளக்குகிறார்.

ஒலி வடிவத்தால் அகரம் மற்ற எழுத்துக்களுக்கு முதன்மை பெற்றிருப்பது போல், வரிவடிவத்தாலும் (உருவ அமைப்பாலும்) முதன்மை பெற்றுள்ளது. இதனை திரு.பா.வே. மாணிக்கநாயக்கர் தமது "தமிழ் எழுத்துக்களின் நுண்மை விளக்கம்" (The Tamil Alphabet and Its Mystic Aspect" by P.V. Manikka Naicker) என்னும் நூலில் விளக்குகிறார். பொறியாளரான மாணிக்க நாயக்கரின் விளக்கம் அறிவு பூர்வமாக உள்ளது. (விரிவஞ்சி அதனை இங்கே தரவில்லை).

ஒலி வடிவாலும் வரிவடிவாலும் ஏனைய எழுத்துக்களுக்கு முதன்மை பெற்றிருக்கும் அகர எழுத்தை உலகமுதல்வனுக்கு உதாரணமாகக் காட்டிய வள்ளுவர் திறம் போற்றற்குரியது.

புதிய சிந்தனை

வள்ளுவர் வழிபடுங் கடவுள் இதுவெனச் சுட்டிக் காட்ட முடியாத நிலையில், அவர் கடவுள் வாழ்த்தாகத்தான் வழிபடுங்கடவுளை வாழ்த்தினாரென்று கூறமுடியாதென்பதை முன்பு கண்டோம். அவர் எடுத்துக் கொண்ட பொருளுக்கு ஏற்புடைக் கடவுளை வாழ்த்துகிறார் என்பது பரிமேலழகர் கருத்து. "சத்துவ முதலிய குணங்களான மூன்றாகிய உறுதிப் பொருட்கு, அவற்றின் மூவராய முதற்கடவுளரோடு இயைபுண்டாகலான்.... இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்படக் கூறினாரென்க" என விளக்குகிறார்.

சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னும் முக்குணங்களும் உடல் குறித்தவை. திருவள்ளுவர் இக்குணங்களின் அடிப்படையில் தன் நூலை ஆக்கினார் எனக் கொள்ள முடியாது. அறம், பொருள், இன்பம், ஆகிய மூன்று குறித்த நூலே திருக்குறள். பழந்தமிழ் நூலான தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும் இன்பம், பொருள், அறம் ஆகிய மூன்றும் பற்றித்தான் கூறப்பட்டுள்ளன. பின்வந்த நூல்களிலேதான் வீடு பற்றிப் பேசப்படுகிறது. திருவள்ளுவரும் தமிழக மரபுப்படி அறம் பொருள் இன்பமென தன் கருத்துக்களை வகைபிரித்தார் எனக் கொள்ளலாம். இந்த வகையில் அமைந்து பல்வேறு பொருட்கள் பற்றிக் கூறும் திருக்குறளில் எடுத்துக் கொண்ட பொருளுக்கு ஏற்புடைக் கடவுளை வாழ்த்தினார் என்று கூறுதல் தவறாகும்.

தத்துவ அடிப்படையில் உலகம் சொல் உலகம் (சத்தப்பிரபஞ்சம்), பொருள் உலகம் (அர்த்தப் பிரபஞ்சம்) என இரண்டாக இருக்கிறது. சொல்லுலகம் எழுத்துக்களை உறுப்பாகக் கொண்டது. அது பொருள் உலகிற்கும் அடிப்படையாக அமைந்ததென்று கூறுவர். 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்பது தொல்காப்பியத்தொடர்.

சொல்லுலகம் சுத்தமாயையின் காரியம் (செயற்பாடு) என்பர். மாயை அதி சூக்கும (அதி நுட்ப)ப் பொருள்; அதனின்று தத்துவங்கள் எனப்படும் முதல்களும் (மூலப்பொருட்களும்), பின்பு அவற்றின் செயற்பாடான தனு கரண புவனபோகங்களும் தோற்றும், தத்துவங்கள் மாயையின் பாரியங்களாதலால் உலகிற்கு நேரடியான முதற்காரணம் மாயையே என்பது சித்தாந்தக்கருத்து. பானைக்கு மண் போல, உலகிற்கு முதற்காரணம் மாயை என்பதும், மண் தானாகப் பானையாகாது, அதற்குக் குயவன் ஒருவன் வேண்டும் என்பதும் சித்தாந்திகள் வாதம். இங்ஙனமே உலகு தானாகத் தோன்றுவதில்லை, அதனைத் தோற்றுவிக்க ஒருவன் உளன், அவனே முழு முதல் என்பதும் இவர்கள் கருத்து.

இந்த அடிப்படையில், சொல்லுலகிற்கு முதல்வனாக உள்ள ஒருவனே திருக்குறள் என்னும் எழுத்துலகிற்கும் முதல்வனாக உள்ளான் என்ற கருத்தில் உரை காண முடியும். ஆகவே, "அகரத்தை முதலாக உள்ள எழுத்துக்களெல்லாம் ஆதி பகவனை முதலாக உடைய உலகம்" என்பது புதிய பொருளாகும். இங்கே 'எழுத்தெல்லாம்' என்பதற்கு குறட்பாக்கள் எனவும் 'உலகு' என்பதற்கு சொல்லுலகம் எனவும் பொருள் அமைகிறது.

இந்தக் கருத்து மரபு வழிவந்த உரைகளிலிருந்து மாறுபட்டிருப்பினும், அவற்றை மறுக்க எழுந்ததல்ல என்பதும் புதிய நோக்கில் காணப்பட்டதென்பதும் கருதற்பாலது.

அநாதிப் பரம்பொருள்

நமக்குத் திருமூலர் எல்லாப் பொருள்களிலும் கடவுளைக் கண்டு வணங்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார். இப்படிக் கடவுளுக்கு நன்றி சொல்லும் முகமாக ஏற்பட்ட வணக்கம் மாறி, பின்னாலே பல தெய்வ வழிபாடு வந்துவிட்டது. அவரவர் மன நிலைக்கு ஏற்றவாறு கடவுளைக் கற்பித்துக் கொண்டு அந்தக் கடவுளுக்கு வணக்கம் செலுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். எப்படியும் வணங்க வேண்டும் என்ற எண்ணம் வந்தால் சரி என்று கருதி வணங்கிக் கொள்ளட்டும் என்று பெரியவர்கள் சொல்லி விட்டார்கள். அப்படி வணங்குகின்ற போது, ஆத்மார்த்தமாக, அன்பு செலுத்தி, எந்தக் கடவுளை வணங்கினாலும் அந்தக் கடவுளாக எல்லாம் கடந்து நிற்கும் அநாதிப் பரம் பொருளே வந்து நிற்கும்.

திருமூலர் அருளுரை

– தவத்திரு தேமொழியார் சுவாமிகள்

பாவேந்தர் நினைவுகள்

(டாக்டர் மு. துரைசாமி, மலேசியா)

(சிலம்பு - 70, பரல் - 6, பக். 224 தொடர்ச்சி)

10. அப் பேராசிரியர் அடக்கமாய் நின்றார்!

இதன்தொடர் பாகக் கவிஞர் என்னிடம்
இன்னொரு நிகழ்ச்சியும் இயம்பினார். அதுஇது!
பல்கலைக் கழகப் பட்ட தாரி;
அருந்தமிழ் ஆங்கிலம் இரண்டும் பயின்றவர்,
நல்லதோர் இடத்தில் பல்கலைக் கழகப்
பேரா சிரியராய்ப் பதவியும் பெற்றவர்
ஒருவர் இருந்தார். அருந்தமிழ் மொழியில்
அறிவும், ஆயும் ஆற்றலும் தம்போல்
பெற்றவர் இலரெனப் பெருமை படைத்தார்.
ஆங்கிலம் நமது கவிஞர் அறியார்
என்பதால் இவர்க்கோ இறுமாப் பதிகம்.
தமிழிலும் தாமே புலியென நினைப்பு!
இத்தகை நினைப்பில் எழுதியும் பேசியும்
அடக்கமில் லாமல் நடந்து கொண்டார்.
இதனைக் கண்டநம் புதுவைக் கவிக்கோ
குயிலில் இவர்மேல் குறியும் வைத்துத்
தீட்டிய எழுத்துச் சாட்டையால் வாட்டினார்!
பின்னரே பேரா சிரியரும் கவிஞரின்
பெருந்தமிழ்ப் புலமையைப் புரிய நேர்ந்தது!
ஒருநாள் கவிஞரோர் திருமண வீட்டில்
விருந்துண் டெழுந்துகை கழுவ வருங்கால்,
திடுமென ஒருவர் ஓடிச் செம்பில்நீர்
எடுத்தவண் நின்றே ஏறு பாவேந்தர்
கால்களுக்கு ஊற்றிக் கைக்கும் ஊற்றினார்!
யாரிவர் என்றே நேர்தலை நிமிர்ந்து
கவிஞர் நோக்கினார். தலையைக் கவிழ்த்தே
அப்பே ராசிரியர் அடக்கமாய் நின்றார்!
புன்னகை புரிந்தவா றாசியும் கூறி
நம்பா வேந்தர் நடந்தார் மகிழ்ந்தே!

(தொடர்

இளம்பூரணர் உரைவழு

முனைவர் இரா. இராசகோபாலன்
தமிழ்த்துறை
மன்னர் சரபோசி அரசு கல்லூரி
தஞ்சாவூர்.

தொல்காப்பியப் பொருளதிகாரம் அகத்திணையியல், புறத்திணையியல் என்ற பகுப்பால் சிறப்புறும். பொருளதிகாரத்தில் அகத்திணையியல் முதலில் இடம் பெறுவது குறிக்கத் தக்கது. அகத்திணையியலின் முதல் நூற்பா

"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப"

என அகப்பொருள் இலக்கணம் நுவலும்.

தொல்காப்பிய உரைகாரர்களில் முதன்மையர் இளம்பூரணர் "கைக்கிளை என்று சொல்லப்படும் பொருள் முதலாகப் பெருந்திணை என்று சொல்லப்படும் பொருள் ஈறாக ஏழுபொருள் முற்படக் கூறப்பட்டன என்று சொல்வர்" என்று குறிப்பிடுவர்.

கைக்கிளை முதலாகப் பெருந்திணை இறுவாயாக இருதிணைகள் மட்டுமே நூற்பாலில் வெளிப்படக் கூறப்படினும், நடுவண் ஐந்திணைகளையும் உள்ளடக்கியே நூற்பாவைத் தொல்காப்பியர் எழுதிணை என முடித்திருத்தலால் ஐந்திணைகள் சொல்லாமலேயே சொல்லப்படும் சிறப்புடைத்து என்பது தெளிவுறும்.

கைக்கிளைக்கு உரையெழுதிய இளம்பூரணர் "கைக்கிளை என்ற பொருண்மை யாதோ எனின், பெருமையில்லாத தலைமக்கள் உறவு என்றவாறு" என்பர். பெருந்திணை பற்றி "நடுவண் ஐந்திணையாகிய ஒத்தகாமத்தின்மிக்கும், குறைந்தும், வருதலானும், எண்வகை மணத்தினும் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என்பன அத்திணைப்பாற்படுதலானும், இந்நான்கு மணமும் மேன்மக்கள் மாட்டு நிகழ்தலானும், இவை உலகினுள் பெருவழக்கு எனப் பயின்று வருதலானும், அது பெருந்திணை எனக் கூறப்பட்டது" என்பர். இவ்விருதிணைகள் பற்றியும் இளம்பூரணர் முடிப்பாக "கைக்கிளை ஒருதலை வேட்கை எனவும், பெருந்திணை ஒவ்வாக் கூட்டமாம் இன்பம்

பயத்தல் அரிது எனவும் கூறதலான் இந்நூலுடையார் காமத்துப் பயனின்மை உய்த்துஉணர வைத்தவாறு அறிந்து கொள்க" என்பார்.

கைக்கிளை பெருந்திணை ஆகிய இருதிணைகள் பற்றி மேற்கண்டவாறு உரையெழுதிய இளம்பூரணர் "ஐந்திணைப் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் எனச் சொல்லப்பட்ட அவ்வுரிப்பொருள் ஒத்த அன்பும், ஒத்த குலனும், ஒத்த வடிவும், ஒத்த குணமும், ஒத்த செல்வமும், ஒத்த இளமையும் உளவழி நிகழும்" என உரைப்பர்.

ஐந்திணையை ஒத்த காமம், ஒத்த கூட்டம் என ஆங்காங்கே குறிப்பிடும் இளம்பூரணர், அத்தலைமக்கள் கூட்டம் அன்பினால் மட்டுமே நிகழ்வுறும் எனக் குறிக்காது ஒத்த என்ற சொல்லை ஒவ்வொன்றிற்கும் முன் நிறுத்தி குலத்தாலும், வடிவாலும், குணத்தாலும், செல்வத்தாலும் இளமையாலும் நிகழ்வுறும் எனவும் கூறுவது பொருந்துமாறு என்னை?

ஒத்த கூட்டம் எனக் கூறின் அது உள்ளக் கூட்டமே. அதற்கு அன்பே ஈட்டம். இளம்பூரணர் 'ஒத்த' என்ற சொல்லை முறையே, குலம், வடிவம், குணம், செல்வம், இளமை ஆகியவற்றின் முன்னர்க் கொண்டு வந்து நிறுத்துவதாலேயே, அவர் குறிப்பிடும் மேற்கண்டவற்றில், வேறுபட்ட, ஒத்ததற்ற நிலைகளும் உள என்பது புலனாகும். அகன் ஐந்திணைக்கு அன்பே விடையாகும். பிற அமைப்புக்களெல்லாம் என்னவெனில் தடைகளாகும்.

குறள்,

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்" என்று கூறும்.

இளம்பூரணர் அடுக்கும் குலம் வேறுபடும், வடிவம் மாறுபடும்; குணம் குன்றும், செல்வம் செல்வோம் என்ற இயல்புடைத்து; இளமை நிலையில்லாதது, இவையெல்லாம் இவ்வாறு கிடக்க அன்பு வேறுபாடு, மாறுபாடு, குறைதல், கழிதல் இல்லாத நிலைத்த நீர்மைத்து - எதையும் எதிர்பாராதது. எதிபாராது இயைவது.

குறுந்தொகை,

"யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்

யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே"

என்று நெஞ்சக் கலப்பு, அன்பின் நிலைப்பு என்பதாகவே முடிக்கிறது. உற்றம், சுற்றம், முன்பின் அறிமுகம் ஏதுமின்றி மண்ணக நிலனில், வானக நீர்க்கலப்பாய் நம் நெஞ்சம் கலந்தது அன்பினாலன்றோ என்று இப்பாட்டின் காதலர் கூறுவதையும் கேட்கின்றோம்.

அகத்திணையியலில் நூற்பாவின் முதலில் தொல்காப்பியர் கைக்கிளையை முதன்மைப்படுத்தினும், அதன் இலக்கணத்தை ஐந்திணை விரிவுக்குப் பின்னரே பெருந்திணையோடு அடுத்துச் சுருக்கியுரைப்பர். அங்ஙனம் ஐந்திணை விரித்துரைக்கப்படுதல் வழி அதன் மாண்பை உய்த்துணர வைப்பர்.

ஐந்திணையை விரித்துரைக்கும் ஞான்றை அறம், பொருள், இன்பம் ஆகிய மாந்த வாழ்க்கைக்குரிய மும்மைப் பொருண்மைகளும் அன்பொடு இயைந்தது என்பதைத் தொல்காப்பியர்,

"இன்பமும், பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை"

என்ற நூற்பாவான் நிறுத்துவர்.

ஆதலின் ஐந்திணை ஒத்த அன்பின் வழி நிகழ்வதாம் என்பதே வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த காப்பியர் கண்ட முடிவென்க. முதன்மை உரைகாரர் உரைக்கும் ஏனைய பிற வழிகளானும் நிகழும் என்பது பொருந்தா என்க.

இறைவனை மறவாதே!

நீ எதை வேண்டுமானாலும் செய். ஆனால் இறைவன் நினைவை மறவாமல் செய். இது எதுபோல என்றால் குழந்தை ஒன்று தூணையே பற்றிக் கொள்ளுவான். அப்போது கீழே விழமாட்டான். அதுபோல நீ உலகத்திலே எந்த செயலிலே ஈடுபட்டாலும் இறைவனை நினைத்துக் கொண்டே அனைத்தையும் செய். மயக்கம் வராது. அப்படியே வந்தாலும் இறைவன் திருவடியிலேயே இருப்பாய்.

– திருமூலர் அருளுரை
தவத்திரு தேமொழியார் சுவாமிகள்
பக். 155

தமிழ் இலக்கியம் காட்டும் நட்பும் புலம் பெயர்ந்த தமிழர்களும்

திரு. அழகப்பா ராம் மோகன்

அமெரிக்கா

தமிழனுக்குப்புலம் பெயர்தல் என்பது இன்று நேற்று நடந்து வரும் ஒரு நிகழ்ச்சி அல்ல. வரலாற்றுக் காலந்தொட்டே தொடர்ந்து நடந்து வரும் ஒரு நிகழ்ச்சி. பன்னெடுங்காலம் முன் குமரிக் கண்டத்தில் தொடங்கி கடல் கொண்டதால் தமிழர்கள் இரு தடவை புலம் பெயர்ந்து இந்தியத் துணைக் கண்டத்திற்குச் சென்று பின்பு அங்கிருந்து இன்று உலக நாடுகள் அனைத்திற்கும் சென்று தங்களோடு தமிழ் நாகரிகப் பண்பாட்டினை எடுத்துச் சென்று இருக்கிறார்கள். அதில் தமிழ்ச் சிந்தனை யாளர்களின் பங்கும் படைப்பாளர்களின் பங்கும் பெரிது.

மொழி என்பது பலருக்கு ஒரு சமுதாயமாக வாழ, சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ள உதவும் ஒரு கருவி. அந்தச் சமுதாயத்திற்கென ஒரு பண்பாடும் நாகரிக முதிர்ச்சியும் வளர வளர மொழியும் வளர்கிறது. இலக்கியம் படைக்கப்படுகிறது. இலக்கணம் வகுக்கப்படுகிறது. இந்தச் சிறந்த பண்பாட்டு நாகரிக முதிர்ச்சி மலர்வதற்கு எது அடிப்படை?. அதில் வெற்றி கண்ட ஒரு சமுதாய மக்கள், குடும்பம் சுற்றம் என்ற எல்லைக்குள் தங்களுக்குள்ளும், குடும்பம் சுற்றம் என்ற எல்லையைத் தாண்டி மற்றவர்களோடும் இணைந்து வாழ, எப்படித் தங்களைத் தயார் படுத்திக் கொண்டார்கள், அதற்குத் தேவையான மனித நேய ஒருமைப்பாட்டை வெளியிட எதைத் துணைக்கு எடுத்துக் கொண்டார்கள் என்று தேடிப் பார்த்தால் அது நட்பு என்ற உறவாய்த்தான் இருக்கும். அந்த நட்பின் அடிப்படை இலக்கண இலக்கியங்களை முறைப்படுத்தி வரம்பிட்டுக் காப்பதில் எந்தச் சமுதாயம் அதிகக் கவனம் செலுத்துகிறதோ அந்தச் சமுதாயம் இன்று ஒரு ஒப்பற்ற நாகரிகப் பண்பாட்டு வளர்ச்சியை அடைந்து இருக்கும். நமது தமிழ் இலக்கியங்கள் அதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

நட்பே உலகிற்கு ஆதாரம். ஒரு மனித உயிர் பிறப்பு எடுக்கும் பொழுது, அதற்குப் பாலூட்டும் தாயோடு நட்பு. அரவணைத்துக் கொள்ளும் எல்லோருடனும் முகம் மலரச் சிரிக்கும் நட்பு. குழந்தையாகி விளையாடும் பொழுது, குடும்பம் என்ற வட்டத்தை விட்டு ஓட உதவும் சிறுவர்களது நட்பு. பள்ளி செல்லும் பொழுது வழிகாட்டும் ஆசிரியரது நட்பு. இளமையின் ரகசியங்களைப் பகிர்ந்து கொள்ள தோழர்களின் நட்பு. அதுவே ஒருவனுக்கு ஒருத்தி என்று கனிந்தால் காதல் என்ற நட்பு. பொருளீட்டும் உலகில் பிறரோடு வேலை செய்யும் பொழுது ஏற்படும் மற்றவர்களது நட்பு.

நட்பு என்பது இயற்கையின் படைப்புகளின் எல்லாம் மிக உன்னதமானது. நட்பு என்ற உறவு மொட்டுப் போல் அரும்பி, பூவாக மலர்ந்து, காயாகி, கனியாகக் கனிந்து, முடிவிலே பழுத்து மண்ணோடு முத்தமிடும் காப்பியம். எந்தச் செடிக்கு மொட்டாக வேண்டும் என்று தேர்ந்து எடுப்பதற்கு எப்படி மொட்டுக்கு உரிமை இல்லையோ அதுபோல பிறக்கின்ற உயிருக்கு, குழந்தையின் வடிவம் கொடுக்கும் பெற்றோரைத் தேர்ந்து எடுக்கும் உரிமை இல்லை.

காற்றோடும் மழையோடும் கதிரவனின் ஒளியோடும் உறவாடுவதே, மொட்டு உலகோடு ஏற்படுத்திக்கொள்ளும் முதல் உறவு. குழந்தையும் அதுபோல மற்றவர்கள் நீட்டும் நேசக் கரங்களில்தான் தனது முதல் நட்பைத் தொடங்குகிறது. சிறுவர் சிறுமியர் பூப்போல இளமையின் தனித் தன்மை மலர வளர்ந்து, பூக்கள் வண்டுகளை வரவேற்பது போல பலரை நண்பர்களாக, தன்னோடு நட்புறவு கொள்ள உறவாட அழைக்கிறார்கள். ஒரு வண்டின் நட்பினால் கருவுண்டு காயாகும் பூப் போல, பருவ நங்கையும் நம்பியும் தங்களது முழுமை பெற்ற நிலையை மற்றொரு பரிமாணத்தில் காட்டுகிறார்கள். இங்கேதான் தங்களுக்கிடையே உள்ள நட்பை இன்னும் பலரோடும் பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுகிறது. காய் கனிய, காலம் தேவை. அதுபோல பலரோடும் உறவு கொள்ளும் நட்பு பக்குவம் அடைகிறது. வள்ளுவர் கூறும் உரிமை கொண்டாடும் "பழைமை" என்ற நட்பு வலுப்பெறுகிறது. வள்ளுவர் கூறியவாறு நட்பு ஆராயப்படுகிறது. தீய நட்பு என்றும் கூடா நட்பு என்றும் விலக்கப்படுகிறது. செய் நன்றி அறிதலின் மகத்துவம் உணரப்படுகிறது. கனிந்த கனி பழுத்து தானே விழுந்து மண்ணை முத்தமிடுவது போல, பக்குவப்பட்ட நட்பு தன்னை இழந்து நண்பருக்குப் பயன் விளைவிக்கும் அருளாக இறுதியில் சங்கமிக்கிறது. இன மானத்திற்காகவும் மற்றவர்களது அடிப்படை

உரிமைகளுக்காகவும் நலத்திற்காகவும் விலை மதிப்பு இல்லா தன் உயிரையே அர்ப்பணிக்கும் தமிழ் ஈழப் போராளிகளின் நட்பு இந்தச் சங்கமத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு.

தனி மனிதன், சமுதாயத்தோடு உறவாட நட்பு துணை செய்கிறது. அந்தத் தனி மனிதனுக்கு ஒரு தாய், ஒரு தந்தை, வாழ்க்கைக்கு ஒருத்தி, வாழ்வதற்கு ஒரு நாடு, ஆன்மீகப் பிணைப்பிற்கு ஒரு கடவுள், நெருங்கி வாழ ஒரு சுற்றம், தன்னை இனம் கண்டு கொள்ள ஒரு இனம், இவ்வாறாக ஒருமையில் உறவு காணும் ஒருவனுக்கு, உலகளாவிய அளவில், மனித நேய ஒருமைப்பாட்டைக் காணும்படி பன்மையில் உறவு கொள்ள உதவுவது நட்பு. இந்தக் கேண்மையில் பிறந்ததுதான் சங்ககாலத் தமிழர் கணியன் பூங்குன்றனார் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று அன்று விடுத்த அறைகூவல்.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற நட்பின் ஒப்பற்ற கணிப்பு தமிழ் இலக்கியம் காட்டும் நட்பு என்ற மாளிகையின் நுழைவாயில்.

ஒரு எச்சரிக்கை! இது வாழ்ந்த மாளிகை அல்ல. உயிர் அற்ற பொருட்காட்சி சாலை அல்ல. இது வாழும் இலக்கியத்தின் நட்பு மாளிகை. உள்ளே பல தமிழ் இலக்கியக் கர்த்தாக்கள், படைப்பாளிகள் பெரும் சிந்தனையில் ஈடுபட்டுத் தங்கள் படைப்பை வாய்விட்டுப் பாடிக் கொண்டும் எழுதிக் கொண்டும் இருப்பார்கள். அவர்களுக்குத் தொந்தரவு ஏதும் இன்றி தள்ளி நின்று கவனமாகக் கேட்டு வந்து விடுவோம். இந்த நட்பு மாளிகையில் எண்ணற்ற அறைகள். எண்ணற்ற படைப்பாளிகள். எல்லாவற்றையும் கண்டு கேட்டு வருவது இயலாது. முடிந்த வரை அழியாப் புகழ் பெற்ற ஒரு சில தமிழ் இலக்கிய வேந்தர்களைப் பார்த்துவிட்டு வந்து விடுவோம்.

எல்லை இல்லாது, உலகத்தையே ஊராக்கி உலகத்து மாந்தர்கள் யாவரையும் கேளிர் அல்லது நண்பர்கள் என்று நட்புக் கரம் விரிக்கும் இந்த யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பிரம்மாண்டமான நுழைவாயிலைத் தாண்டிப் போகிறோம்.

அதோ பாருங்கள். பெரிய புராணம் என்ற சைவ நூலைச் சேக்கிழார் படைக்கிறார். அவர் பாடும் முதல் பாட்டிலே முதல் அடியிலே "உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்" என்ற பாட்டின் ஒலி நமக்குக் கேட்கிறது. அதோ! அங்கே கம்ப

ராமாயணம் என்ற வைணவ நூலைக் கம்பர் இயற்றுகிறார். "உலகம் யாவையும் தாமுளவாக்கலும்" என்று தொடங்குவது நம் காதுகளுக்கு எட்டுகிறது இன்னும் சிறிது உள்ளே செல்லுகிறோம். இலக்கண நூலாம் நம்பியகப் பொருள் ஆசிரியர் தன் முதல் பாட்டிலே முதல் அடியிலே "மலர்தலை உலகத்து" என்று பாட ஆரம்பிப்பது நமது காதில் விழுகிறது. இன்னும் நுழைந்து போகிறோம். சங்க நூலாம் பத்துப்பாட்டு முதற்பாட்டு திருமுருகாற்றுப்படை.

முதல் பாட்டிலே முதல் அடியிலே முதற் சொல்லாக "உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு" என்று ஆரம்பிப்பதைப் பார்க்கிறோம். அதோ அங்கு செல்வோம். ஆசிரியர் இளங்கோ அடிகள் என்ன எழுதிக்கொண்டு இருக்கிறார் என்று பார்ப்போம். ஐம்பெருங்காப்பியமான தனது சிலப்பதிகார முதல் பாட்டில் முதல் அடியில் "அங்கண் உலகளித்தலால் திங்களைப் போற்றுதும்" என்று பாடக் கேட்கிறோம். அதோ ஔவைப் பாட்டி தென்படுகிறார். அவர் "ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ (உலகத்தீர்) மாநிலத்தீர்" என்று கேட்பது தெரிகிறது. தமிழ்ப்பெரும் புலவனாம் கபிலர் ஏதோ பெருத்த சிந்தனையில் இருப்பது தெரிகிறது. அவர் தாம் செய்கிற அகவலுக்கு முதற் பாடலிலே "உலகத்தீரே உலகத்தீரே மனிதனுக்கு வயது நூறல்லதில்லை" என விளக்கம் கேட்கிறோம். அது சரி. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு என்று தமிழர் அனைவரையும் கூட்டாளியாக்கிச் சொன்னானே பாரதி, அந்த வள்ளுவரைப் பார்க்காமல் போக முடியுமா?. எப்போதும் போல் பெருத்த சிந்தனையில் மூழ்கி இருக்கிறார். பக்கத்திலே திருக்குறள் தென்படுகிறது. அதன் முதல் அதிகாரத்தில் முதல் குறளில் என்னதான் எழுதி இருப்பார் என அறிய ஆவல் தோன்றுகிறது. "ஆதிபகவன் முதற்றே உலகு" என்று உலகை முன்வைத்துத் திருக்குறள் விரிகிறது காண்கிறோம். அவரது சிந்தனைக்குத் தொய்வு ஏற்படா வண்ணம் அங்கிருந்து நகர்கிறோம்.

வெகு நேரமாக நடந்து நடந்து செல்லுகின்ற நீங்கள் களைப்பாற, சுகமான குளிர்ந்த காற்று வீசும் அறையில் உட்காரும்படி அந்த இலக்கிய மாளிகையின் தமிழ் இன அமைப்பாளர்கள் வேண்டுகோள் விடுத்து, உலகிற்கே நன்கொடையாக வள்ளுவர் அளித்த திருக்குறளை உங்கள் ஒவ்வொருவருக்கும் நன்கொடையாகத் தருகிறார்கள் ஏன் என,

திருக்குறள் பக்கங்களைப் புரட்டுகிறேன். அதில் இந்தக் குறள் தென்படுகிறது. "இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே ஒழுக்கம் உடையார் வாய்ச் சொல்"

உங்களுடைய வாழ்க்கை சீரும் சிறப்புமாக அமைய வேண்டுமானால், வாழ்க்கையிலே வழுக்கல் இன்றி இருக்க வேண்டுமானால், சேற்று நிலத்தில் கூட நடக்க வேண்டுமானால், ஒழுக்கம் உடையாரது வாய்ச் சொல்லை ஊன்றுகோல் போல உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள், உயர்வீர்கள், என்று கூறும் இந்தக் குறள் காட்டும் வாய்ச் சொல் எங்கே என்று தேட வேண்டாம். எல்லாம் திருக்குறள் தொகுப்பிலே இருக்கிறது எனச் சொல்லாமல் சொல்வது போல, நம் ஒவ்வொருவருக்கும் திருக்குறள் புத்தகத்தை, வள்ளுவர் என்ற ஒழுக்க சீலரின் வாய்ச் சொல்லாக நினைக்கும்படி தந்தார்களோ என வியக்கிறோம். வெகு தூரம் சென்று விட்டோம். களைப்பாறிய பின் திரும்பவும் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற நுழைவாயிலுக்கு வர பயணத்தைத் தொடருகிறோம். தமிழ் இலக்கியப் படைப்பாளிகளின் இந்த உலகளாவிய பார்வை, பொதுநோக்கோடு, நட்புறவு, எவ்வாறு தனி மனித வாழ்வில் அடங்கி ஒடுங்குகிறது என வியக்கிறோம். அதற்குப் பதில் அளிப்பது போல அதோ பாருங்கள்!, தமிழ் வேந்தன் அதியமான் கிடைத்தற்கரிய நெல்லிக் கனியைத் தான் உண்ணாமல் ஔவையாருக்கு அளிக்கும் சொல்லோவியத்தைக் காண்கிறோம். சற்றுத் தள்ளி நடக்கிறோம். அங்கே யார் மயிலுக்குப் போர்வை போர்த்துகிறார்?. பேகனா? அனுபவித்து நடை போடுகிறோம். அதோ! யார்? வேள் பாரியா? தவழக் கொம்பு இல்லாமல் தவிக்கும் முல்லைக் கொடிக்குத் தனது தேரையே தந்து நடந்து வரும் பறம்பு நாட்டு மன்னன் வேள் பாரியை வியப்புடன் பார்த்துக்கொண்டே செல்கிறோம். அதோ! கோவூர் கிழார் நட்பின் உரிமையுடன் மன்னனுக்கு இடித்துரைத்து பகை மன்னனின் இரு குழந்தைகளைக் காப்பாற்றும் ஒப்பற்ற காட்சியைப் பார்த்துப் பெருமை அடைகிறோம். அதோ! பிசிராந்தையார் தான் இதுவரை சந்திக்காத ஆனால் ஒத்த உணர்ச்சியால் நட்பு செலுத்தி வந்த ஒரு தமிழ் மன்னன் இறந்த செய்தி கேட்டுத் தானும் வடக்கிருந்து உயிர் விட்டுக்கொண்டு இருக்கிறாரே! புணர்ச்சி பழகுதல் வேண்டா ஒத்த உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும் என்ற வள்ளுவர் வாக்கு நினைவுக்கு வருகிறது. விட்டுச் செல்ல மனமில்லாமல் நுழை வாயிலுக்கு அருகில் வந்து விட்டோம். அது யார்? இரு

பெரும் கர்ம வீரர்கள்! பெரியாரும் குன்றக்குடி அடிகளாருமா? இருவரும் இருவேறு நிலைகளில் இருந்து தொண்டு செய்தாலும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு நட்புக்கு இலக்கணமாக இருக்கக் காண்கிறோமே? பொது நலம் வேண்டித் தன் நலம் நெகிழ்ந்த தூய நட்பு அல்லவா?

நிறைவோடு கணியன் பூங்குன்றன் நுழைவாயிலைத் தாண்டி நான் வாக்களித்தபடி உங்கள் அனைவரையும் திரும்ப இங்கே கொண்டு வந்து சேர்த்து விட்டேன். வெறுங்கையோடு சென்றோம். தமிழ் இலக்கிய நட்பு மாளிகை நம்மை வரவேற்று உபசரித்துக் குறளோடு அனுப்பி வைத்தது.

இந்தத் தமிழ் இலக்கிய மாளிகைச் சுற்றுலாவிலே நாம் தெரிந்து கொண்டது என்ன? தமிழ் இலக்கியப் படைப்பாளிகள் குறுகிய நாட்டிலே இருந்து கொண்டு அவரவர் செய்த இலக்கிய இலக்கண நூல்கள் உலக மக்களை நோக்கிச் செய்தவை என்று அறிகிறோம். இதுதான் தமிழ்ப் பண்பு. தமிழருடைய பண்பும் ஆகும்.

தமிழ் இலக்கியங்கள் காட்டும் இந்த உலகளாவிய நட்பினைத் தனி மனித வாழ்க்கைக்கு இலக்கணமாக ஒழுக்க சீலர் வள்ளுவர் தன் வாய்ச் சொல்லாகக் குறள்கள் மூலம் எவ்வாறு நமக்கு ஊன்றுகோல் போலத் தருகிறார் என்று பார்ப்போம். நட்புக்கென ஒரு சொல் ஓவியமே படைத்து இருக்கிறார் வள்ளுவர். நட்டல், கேண்மை என்று நட்பை முதலில் விளக்கி, பின் அதனை ஆராய்ந்து, அதைப் பழுக்க வைத்து, உரிமை கொண்டாடும் நட்பாக பழைமை எனப் பெயரிட்டு, அதற்குப் பிறகு தீய நட்பு என்றும் கூடா நட்பு என்றும் அவைகளை விலக்கத் தக்க நட்பாகக் கூறி, இறுதியில் நட்பினை எவ்வாறு பாராட்டிப் போற்ற வேண்டும் என்று செய்நன்றி அறிதல் குறட்பாக்கள் மூலமாக முடித்து இருக்கிறார். 6 அதிகாரங்கள். 60 குறள்கள். ஒவ்வொரு குறளும் ஒரு வண்ணம். இந்த 60 வண்ணங்களைக் குழைத்துத் தீட்டிய சொல் ஓவியம்தான் தமிழ் இலக்கியத்தில் வள்ளுவர் வகுத்த நட்பு இலக்கணம். சுருங்கச் சொல்வதற்குப் பெயர் போன வள்ளுவருக்கு உலக வாழ்வை எவ்வாறு வாழ வேண்டும் எனச் சொல்ல 1330 குறள்கள் வேண்டி இருந்தது. ஆனால் அதன் ஒரு அங்கமான நட்பு என்ற பொருளைச் சொல்ல மொத்தமாகத் திருக்குறளில் 4.5 சதவிகிதம் தேவைப்பட்டது. அதாவது 22 குறள்களுக்கு 1 குறள் விகிதம் நட்பு பற்றி விளக்கியுள்ளார்.

(தொடரும்)

சிறு சொல்

முனைவர் மலையமான்
சென்னை.

அவன் பாண்டிய மன்னன்; அவன் இளைஞன். ஆகவே நெடுநல் யானையும் தேரும் மாவும் படையமை மறவரும் பெற்றிருந்த முடி மன்னர்கள், 'பாண்டியன் இளைஞன்' என்று உளையக் கூறினர். இது பாண்டியனின் செவியில் வந்து படிந்தது. அவன் நெஞ்சில் கோபம் வெடித்தது. அவன் வஞ்சினம் கூறினான் 'சிறு சொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை, அருஞ் சமம் சிதையத்தாக்கி, முரசமொடு ஒருங்ககப் படேஎனாயின், குடி பழி தூற்றும் கோலேன் ஆகுக; மாங்குடி மருதன் தலைவனாகப் புலவர் பாடாது வரைக என் நிலவரை' என்பன போன்று அவன் நெடுமொழி கூறினான். அந்தப் பாண்டியன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்று புறம் உரைக்கும். (பா. 72)

இப்பாடலில் அவன் சொன்ன 'சிறுசொல்' என்ற தொடர், 'சிறுமைத் தனமான - புல்லிய - என்ற பொருளைத் தரும். அதாவது, இங்குச் 'சிறு' என்ற சொல், தன்மையை பண்பைக் காட்டும். நெல்லிக் கனியைப்பற்றிச் சங்கப்பாடல்களில் குறிப்பு வருகிறது. 'சிறு இலை நெல்லி' என்று அது உரைக்கப்படுகிறது. இங்குச் சிறு என்பது அளவைக்காட்டும். எனவே, சங்க காலத்தில், சிறு என்ற ஒரு சொல்லே, தன்மையையும் அளவையும் தெரிவித்தது. ஆனால் தற்காலத்தில் சிறுமை என்பது தன்மையையும் சிறிய என்பது அளவையும் காட்டுவதாக அமைந்துள்ளது.

ஒவ்வொரு மொழியிலும் சிறுசொற்கள் (சிறிய சொற்கள்) உள்ளன. பெரிய (எழுத்துகள் மிகுதி கொண்ட) சொற்களும் உள்ளன. சிறு சொற்கள் சிறப்புக்குரியன என்று கருதப்படுகிறது. "சிறிய சொற்கள் இரவில் தீப்பொறிகள் போல ஒளி வீசுகின்றன. பகலை வாழ்த்தி வரவேற்கும் விடியலைப்போல உள்ளன. கத்தி முனைபோலக் கூர்மையாக உள்ளன. கன்னத்தில் வழியும் உப்புக் கண்ணீரைப் போலச் சூடாக உள்ளன. அம்மைப்போல அழுத்தமாக உள்ளன. அவை கொட்டும் தேனீ போன்றவை" என்று ரிச்சர்டு லீடரர் என்ற மொழியியல் அறிஞர் 'மொழியின் அற்புதம்' (MIRACLE OF LANGUAGE BY RICHARD LEADERER)

என்ற நூலில் சிறு சொற்களைப் பெரிதும் பாராட்டியுள்ளார். (ப. 33-34)

ஆங்கிலத்தில் உள்ள 20 சிறு சொற்கள் பேச்சு வழக்கில் 25 விழுக்காட்டளவு பயன்பட்டு வருகிறது என்றும் அவர் தெரிவிக்கிறார்.

ஜார்ஜ் ஆர்வெல் என்ற மற்றொரு அறிஞர் 'அரசியலும் ஆங்கில மொழியும்' என்ற தன்னுடைய நூலில் மொழி பற்றிக் கூறியுள்ள பரிந்துரைகளில் ஒன்று சிறு சொற்களைப் பற்றியதாகும். சிறிய சொல் பொருத்தமாக இருக்குமிடத்தில் பெரிய சொல்லைப் பயன்படுத்தாதே என்று அவர் எடுத்துரைக்கிறார். இன்றைய ஆங்கில வழக்காற்றில் மதிமயக்கும் பெருஞ்சொற்களுக்குப் பதிலாக, சிறு சொற்களைப் பயன் படுத்துவதே நடைமுறையாகிவிட்டது. இன்று பெரிய பேச்சாளர்களும் சிறு சொற்களையே கூறுவது வழக்கமாக உள்ளது என்று ரிச்சர்டு லீடரர் தெரிவிக்கிறார். ஷேக்ஸ்பியர் சிறு சொற்களையே பரவலாகப் பயன்படுத்தியுள்ளார் என்று கூறும் அவர், லியர் மன்னன் இறக்கும் கட்டத்தில் ஆற்றிய உரையைச் சான்று காட்டுகிறார். ஆங்கில நாட்டு ஜேம்ஸ் அரசன், தயாரித்த விவிலிய நூலில், சிறு சொற்களே மிகுதியாக இடம் பெற்றுள்ளன என்று அவரே அறிவிக்கிறார்.

சிறு சொற்கள் காலத்தில் மூத்தவை என்று சொல்லலாம். தொடக்க நிலையில், ஒலியினின்று செம்மைப் படுத்திய சொற்களை மனிதன் உருவாக்கியபோது அவை, சிறு சிறு சொற்களாகவே இருந்திருக்கும். எனவே சிறு சொற்கள் காலத்தில் மூத்தவை என்று கொள்வது பொருத்தமாகவே தோன்றுகிறது. (மற்றொரு காரணத்தையும் இங்குச் சொல்லலாம். பெரியதாக உள்ள கத்தி, (அ்) விளக்குமாறு அதிக காலம் பயன்படும்போது சிறியதாகிவிடுகிறது. நீண்டிருந்த பாம்பு நெடுங்காலத்திற்குப் பிறகு கூழைப் பாம்பு ஆகிறது. அவ்வாறே சற்று நீளமான சொற்களும் கால்லப்போக்கில் குறுகிச் சிறு சொல்லாகி விடுகின்றன. (எ-டு மீனாம்பாள் என்ற சொல் மீனா என்றும் மங்கையர்க்கரசி என்ற பெயர் மங்கை என்றும் குறுகிவிடுவது இன்றும் நடைமுறையில் உள்ளது. இப்படி நெடுஞ்சொல் குறுகிவிடுவதும் காலப் பழமைக்கு மற்றொரு சான்றாகிறது.)

ஓல்காப் பெருமைத் தொல்காப்பியனார் ஓரெழுத்தொரு மொழி ஈரெழுத்தொரு மொழி, இரண்டிறந்திசைக்குப்

தொடர்மொழி ஆகியவை, மொழி நிலை தோன்றிய நெறி என்கிறார் (தொல். மொழி. மரபு. நூ.12) அவரே நெட்டெழுத்தேழே ஓரெழுத்தொரு மொழி என்றும் எடுத்துரைக்கிறார். (தொல். மொழி. நூ. 10). நெடில் எழுத்துகளில் ஒன்றான ஔகாரம் மெய்யொடு இணைந்து சொல்லாகும் என்றும் (நௌ) "குற்றெழுத்தைந்தும் மொழிநிறைபிலவே" என்ற தொல்காப்பிய நூற்பாவின் எச்ச உம்மையால் சில தனிக்குறில்கள் ஓரெழுத்தொரு மொழியாகும் என்றும் (து. நொ) அந்த அரும்பெரு நூலின் உரையாசிரியர்கள் உரைப்பர்.

நன்னூலார், ஓரெழுத்தொருமொழி, 42 என்பர்.

உயிர்மவில் ஆறும் தபநவில் ஐந்தும்
கவசவில் நாலும் யவ்வில் ஒன்றும்
ஆகும் நெடில் நொது ஆங்குறில் இரண்டொடு
ஓரெழுத்தியல் பதம் ஆறேழ் சிறப்பின.

(நன்னூல் பதவியல். 2)

இவை சிறப்புடைய ஓரெழுத்துச் சிறு சொற்கள் என்பதால் இவ்வளவு சிறப்பு இல்லாத ஓரெழுத்துச் சொற்களும் அவர் காலத்தில் இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. நன்னூலார் காலத்தில் ஓரெழுத்தொரு மொழிகள் அதிகரித்திருந்ததையும் நாம் உணரமுடிகிறது. இது காலத் தொன்மைக்குச் சான்றளிக்கிறது.

தமிழில் தன்மை முன்னிலைச் சொற்களின் ஒருமை, ஒன்று (அ) இரண்டு எழுத்துகளைக் கொண்டதாக உள்ளன. படர்க்கைச் சொற்கள் மூன்றெழுத்தும் அதற்கு மேற்பட்டதாகவும் உள்ளன. மனிதனுடைய உடல் உறுப்புகளைக் காட்டும் சொற்களில் பெரும்பான்மையானவை ஈரெழுத்துகளாலேயே அமைந்துள்ளன (எ-டு. தலை, கண், வாய், செவி, கால், தொடை. நா, கை என்பவை ஓரெழுத்தொரு மொழியாலான சிறு சொற்கள்) மனிதன் அடிக்கடி பயன்படுத்திய பொருள்களும் ஒன்று (அ) இரண்டு எழுத்துகளைக் கொண்ட சிறு சொற்களே (எடு : தீ, ஏ(அம்பு), ஊ (இறைச்சி) வேல், வாள், வில்) ஆதிப் பழந்தமிழனை அடுத்திருந்த இயங்குதிணைப் பெயர்களும் நிலைத்திணைப் பெயர்களும் இரண்டெழுத்துச் சொற்களால் ஆனவை (எ - டு. ஆடு, மாடு, நாய், பூனை, செடி, கொடி, வேர், கிளை, இலை, காய், கனி, பூ-ஓரெழுத்தொருமொழி, மரம்-மூவெழுத்தொருமொழி). அவன் பொருளை எண்ணத் தொடங்கிய நாளில் உருவானவை, சிறு சொற்களாகவே உள்ளன. (எடு, ஒரு, இரு, மூ, நால், ஐ, ஆறு, ஏழு, எண் (எட்டு), பத்து (ஒன்பது- ஒன்று குறைந்த பத்து)

அவனுடைய உறவுப் பெயர்களில் பல மூன்றெழுத்துச் சொற்களால் ஆனவை (எ-டு அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, மாமா, அத்தை, மகன், மகள்) முன்னிலை ஏவில் வினை முற்றுகளும் (வினைச் சொற்களின் பகுதிகளும், ஒன்று (அ) இரண்டு எழுத்துகள் கொண்ட சிறு சொற்களாக உள்ளன.

நட வா மடி சீ விடு கூ ஏ வை
நொப் போ வௌ உரிஞ் உண்பொருந் திருந்தின்
தேய்பார் செல்வவ்வாழ்கேள் அஃ கென்(று)
எய்திய இருபான் மூன்றாம் ஈற்றவும்
செய் யென் ஏவல் வினைப் பகாப்பதமே

(நன். பத. ப.10)

தமிழில் இடைச் சொற்கள் சிறு சொற்களாகவே உள்ளன.
(எடு : ஏ, ஓ, என, உம், கொல்)

உரிச் சொற்களும் அவ்வாறே அமைந்துள்ளன.
(எடு : சால, உறு, தவ, நனி, கழி, கூர்)

மனிதன் வாழிடங்களும் சிறு சொற்களாக உள்ளன
(இல், மனை, சேரி, ஊர்)

அவன் தோற்றிய இசைக்கருவிகளும் சிறு சொற்களால் அமைந்தவை.
(யாழ், குழல், முழவு)

எனவே பயன்பாடு காரணமாகத் தமிழில் சிறு சொற்கள் மிகுதியாக உள்ளன என்பது தெரிகிறது.

நன்னூலார்,

பகாப்பதம் ஏழும் பகுபதம் ஒன்பதும்
எழுத்தீறாகத் தொடரும் என்ப (நன்னூல் பத. 3)

என்று கூறுகிறார். பகுபதச் சொற்கள் ஒட்டு நிலை கொண்டவை. இவற்றின் பகுதி, பெரும்பாலும் ஈரெழுத்து கொண்ட சொல்லாகும். பகாப்பதத்தில் ஆறு/ஏழு எழுத்துகளுக்குக் காட்டப்பட்ட சான்றுகள் வடமொழிச்சொற்களாகும் (எடு : தருப்பணம், உத்திரட்டாதி). எனவே தமிழில் பெரும்பான்மையானவை சிறு சொற்கள் என்று கூறலாம்.

திருவள்ளுவரும் சிறு சொற்களைப் போற்றினார். அவருடைய திருக்குறளில் சிறுசொற்கள் மிகுதியாக உள்ளன. அவர் சிறுமை அளவைப் போற்றிய காரணத்தால்தான் ஒன்றே முக்கால் அடி அளவுகொண்ட உலகில் வேறு எம்மொழியிலும் இல்லாத - குறள் வெண்பா என்ற - புது யாப்பினைத்

தோற்றுவித்தார். அண்மைக்காலத்தில் வாழ்ந்த தமிழ்த் தென்றல் திரு.வி.கவும் தன் பேச்சிலும் எழுத்திலும் சிறு சொற்களையே அதிகமாகப் பயன்படுத்தியுள்ளார். எனவே சிறு சொற்கள் சிறப்புடையவை; தொல்காப்பியரும், அவர் பின் வந்தோரும் சிறு சொற்களின் சிறப்பை உணர்ந்திருந்தனர்; தமிழில் சிறு சொற்கள் மிகுதியாக உள்ளன; அவை, அடிக்கடி பயன்படுதல் காரணமாக உருவில் சிறிதாக உள்ளன; இவை தமிழின் காலத்தொன்மைக்கும் சான்றாக இருக்கின்றன என்று கூறலாம்.

மயிலாடுதுறை டாக்டர் சொ. சிங்காரவேலனார்
மறைவு குறித்த இரங்கற்பா

தமிழ்க்கடல் சொ.சி.

சொ.ச. செந்திலாண்டவன்
அகர முதலி இயக்ககம்.

கடலன்ன தமிழ்மனமே! காய்தல் இன்றிக்
கனியன்ன சொற்பேசும் சொல்லின் செல்வ!
திடமான உடலில்லை என்றால் கூடத்
தெய்வமனத் தமிழ்உள்ளம் இன்பக் கூடம்!
உடன்பிறந்த புகழோடு ஞாலம் பேசும்
ஒளியார்ந்த புகழோடு வாழ்ந்த செம்மால்!
புடம்போட்ட சைவநெறிப் போற்றி வாழ்ந்த
பொன்மனமே! புண்ணியமே! புலம்பு கின்றோம்!

காலமகள் உனையள்ளிச் சென்றாள்! சென்றாள்!
கதறுகின்றோம்! கலங்குகின்றோம்! ஆற்று வோமோ?
ஆலமரம் போலிங்கே வாழ்ந்து பல்லோர்
அறிவுக்கண் திறந்திட்ட ஆசான் நீயே!
ஓலமிடும் உள்ளத்தின் துன்பம் எல்லாம்
ஓயாது அழுதாலும் தீர்வோ? தீர்வோ?
சீலமகன் நீயெனவே உன்னை மேலே
சீராட்ட நினைத்தாளோ? காலத் தெய்வம்!

அஞ்செழுத்தை நாவாரச் சொல்லும் பாங்கும்
அருமறையாய்த் திருமுறையை ஓதும் பாங்கும்
நெஞ்சகத்தில் தாண்டகத்தின் வேந்தர் பாடல்
நேயமுற ஆழ்ந்தாயும் நீண்ட நோக்கும்
செஞ்செவியக் கவியமுதம் இயற்றும் பாங்கும்
செந்தமிழின் பல்துறையின் எழுத்தின் பாங்கும்
செஞ்சொல்லின் கொண்டலவர் சீர்மை பேசும்!
செம்மைநலம் போற்றிமிகக் கலங்கு கின்றோம்!

கொடிய காலம்!

முத்தமிழ்க் கவிஞர்
டாக்டர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

இன்பவெறி ஒன்றேதான் ஓங்கும் காலம்!
இதயமெலாம் வயிற்றுக்குள் இருக்கும் காலம்!
கண்ணிரண்டும் பொய்சொல்லிப் பிழைக்கும் காலம்
கடல் எழுந்து குட்டைகளை வணங்கும் காலம்!
பெண்ணினத்தைப் பிறந்தவுடன் கொல்லும் காலம்
பெரியவர்கள் பேசாமல் இருக்கும் காலம்!
மண்ணுலகில் இப்போது கொடிய காலம்!
மனிதர்கள் மனிதரையே உண்ணும் காலம்!
என்றைக்கும் ஒழுக்கத்தை மதியா தாரை
எய்ட்ஸ் வந்து மிரட்டுகின்ற காலம்! நீதி
இன்றைக்கு விலைபோகும் காலம்! பாட
இயலாதோர் வாயசைக்கும் காலம்! வைக்கோல்
கன்றுக்கு மதிப்பளிக்கும் காலம்! நஞ்சு
கவர்ச்சியுடன் நமையழைக்கும் காலம்! நிற்கும்
குன்றுக்குக் குளிர்என்று சட்டை தைத்துக்
கொடுப்பதற்கு வரிசையிலே நிற்கும் காலம்!
எழுந்துவரும் கதிரவனைச் சொந்தம் கொள்ள
எந்தவழி எனத்தேடும் காலம்! பள்ளிக்
குழந்தைகளைக் கடத்துகின்ற காலம்! நாட்டில்
கொலைத்தொழிலும் ஒருதொழிலாய் ஆனகாலம்!
விழுந்தவனின் தலைமீது கல்லைப் போட்டே
வேதனையை யார்செய்தார்? என்னும் காலம்!
ஒழுங்குமுறை இல்லாத காலம்! புல்லும்
ஒருதலைவர் ஆவதற்கே குதிக்கும் காலம்!
கொடுமைகளைப் பார்த்தாலும் பார்க்கா வண்ணம்
குனிந்துகொண்டே செல்கின்ற காலம்! மண்ணில்
இடிவந்து விழுந்தாலும் "என்மேல் இல்லை"
எனஉரைத்து மகிழ்கின்றோர் நிறைந்த காலம்!
அடிமையென இருப்பதுவே இன்பம் என்னும்
அணுகுமுறை மேற்கொள்ளும் காலம்! மக்கள்
கடமைகளை மறந்துவிட்டுத் திரியும் காலம்!
கண்டிப்பாய் மன்னிக்க முடியாக் காலம்!
பணம் பண்ணும் காலமிது! பெற்ற தாயைப்
பணத்துக்குக் கொன்றுவிடத் துணியும் காலம்!
குணம்மண்ணில் கிடக்கின்ற காலம்! வாழக்
குறுக்குவழி தேடுகின்ற காலம்! நல்ல
மணம்உள்ள முல்லைப்பூ விலக்கப் பட்டு
வண்ணவண்ணக் காகிதப்பூ வாங்கும் காலம்!
பிணம்பேசும் என்றுசொன்னால் நம்பிக் கொண்டே
பெருங்கூட்டம் காத்திருக்கும் நீண்ட காலம்!

இதுபோன்ற கொடுங்காலம் தேவை தானா?
எருக்கம்பால் பசும்பாலாய் நடிக்க லாமா?
நதிநீரும் சிறுநீரும் கலக்க லாமா?
நறுந்தேனைத் தெருவோரம் ஒதுக்க லாமா?
மதயானை பெருமைகுன்றிக் கிடக்க லாமா?
மதிவாணர் மூலையிலே இருக்க லாமா?
புதுவாழ்வு படைப்பதற்கு நடுங்க லாமா?
புவியெங்கும் முத்திரையைப் பொறிப்போம்! வாரீர்!

இருந்தமிழ் நாட்டின் இன்றைய இழிநிலை

பேராசிரியர் தெ. முருகசாமி
முதல்வர், இராமசாமி தமிழ்க்கல்லூரி, காரைக்கு.

ஒருவரை யொருவர் இகழ்தலும் புகழ்தலும்
இருந்தமிழ் நாட்டின் இன்றைய இழிநிலை!
கன்னித் தமிழின் கனத்தபண் பாட்டை
மன்னி வளர்க்க மறந்தார் பலரும்!
வெட்க மின்றியும் விவேக மின்றியும்
கட்சிப் பிரிவெனும் கசட்டுத் தனத்தால்
[illegible] நாளும் நலிவை யெய்தி
மாளும் தமிழினம் மதிப்பும் இழந்தே!
ஆங்கிலப் பாங்கைத் தாங்குந் தமிழர்கள்
ஓங்கிய தமிழை ஓரங் கட்டினர்!
வாடைக் காற்றாய் வசவுகள் பேசுவோர்
மேடைப் பேச்சையும் கொச்சைப் படுத்தினர்!
எங்கு நோக்கினும் இழிசுவ ரொட்டிகள்
தொங்கும் காடாய்த் தோன்றுது நாடு!
நெறிப்பட வாழ்ந்த தமிழினம் இன்று
குறிக்கோ ளில்லாக் கோமாளித் தனத்தால்
சாதிக் கலவரச் சழக்கில் சிக்கிப்
பேதித் தெங்கும் பிணங்கிப் பொசுங்குது!
திண்மை தீரம் தியாகம் இல்லாப்
பெண்மைப்பேடிகள் பிறங்குறும் இனமாய்
அரைவேக் காட்டின் அரசியல் தனத்தில்
திரைப்படத் திருந்தே தலைவரைத் தேடும்
நரைத்தபண் பாட்டை நடைமுறைப் படுத்த
வரையறை யற்று வாழத் துடிக்குது!
இங்குளத் தமிழனின் இழுபறி நிலையால்
எங்குளத் தமிழனும் ஏழி கின்றான்!
இந்த இழிவெலாம் போக்குதற் கந்தோ
செந்தமிழ்ச் செல்வியே! செப்புக நல்வழி!
தைத்திங்கள் தண்ணார் பொங்கல்
வைத்து வணங்குறும் வண்டமி ழோர்க்கே!

218533

'செந்தமிழ்ச் செல்வி' பற்றிய உரிமை விளக்கம் 1956 ஆம் ஆண்டுச் சட்டம் விதி - 8, படிவம் - 4 இல் கண்டுள்ளபடி

1.	வெளியிடும் இடம்	:	261, இலிங்கி செட்டித் தெரு, சென்னை-1.
2.	வெளியீட்டு முறை	:	திங்களிதழ்
3.	அச்சிடுவோர் பெயர்	:	அப்பர் அச்சகம்
	இனம்	:	இந்தியர்
	முகவரி	:	80, பிரகாசம் சாலை, சென்னை - 108.
4.	வெளியீட்டாளர் பெயர்	:	தென்னிந்திய தமிழ்ச் சங்கம்
	இனம்	:	இந்தியர்
	முகவரி	:	80, பிரகாசம் சாலை, சென்னை - 108.
5.	ஆசிரியர் பெயர்	:	திரு.இரா. முத்துக்குமாரசாமி
	இனம்	:	இந்தியர்
	முகவரி	:	80, பிரகாசம் சாலை, சென்னை - 108.

6. இதழ் உரிமையாளர்கள், மூலதனத்தில் நூற்றுக்கு ஒரு விழுக்காட்டிற்கு மேற்பட்ட பங்குகளுடைய பங்காளிகள் ஆகியோரின் பெயர்களும் முகவரிகளும்: தென்னிந்திய தமிழ்ச் சங்கம் (பதிவு)

மேலே தரப்பட்டுள்ள விளக்கங்கள் அனைத்தும் என்னுடைய முழு நம்பிக்கைக்கும் அறிவுக்கும் ஏற்ப உண்மையானவை என இரா. முத்துக்குமாரசாமியாகிய யான் உறுதியளிக்கிறேன்.

(ஒப்பம்) இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ.,பி.லிப்.,
பதிப்பாளர்.

10-3-1996.

மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியாளர்)	10 00
திரு. முருக விசாகநம்பி அவர்கள்	5 00
தூத்துக்குடி திரு. தி. ந. ஆறுமுகம் பிள்ளை அவர்கள்	5 00
திரு. த. ஆறுமுகம் அவர்கள், சென்னை – 79.	5 00
உயர்திரு. ஈசுவரனார் அவர்கள்	5 00
திரு. வேணுகோபால் அவர்கள் சாந்தி திரையங்கம், சென்னை – 2.	25 00
திரு. K.E. மணவாளன், பெங்களூர்	10 00
திரு. N.S. இராஜலெட்சுமி, முத்தையால் பேட்டை தெய்வீக சங்கம்	200 00
திரு. முனைவர் மு.ச. சிவம், ஈரோடு	10 00
தாமரைச் செல்வி D/o. திரு. பொ. பாலசுப்பிரமணியம் சென்னை – 18.	10 00
முத்துமணி D/o. திரு. பொ. பாலசுப்பிரமணியம் சென்னை – 18.	10 00
திரு. ப. கோவிந்தராசு மதுரை	35 00

மறைமலையடிகள் கலைமன்ற வளர்ச்சிக்கு நன்கொடை

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியாளர்)	10 00
உயர்திரு. ஏ.டி. ஈசுவரனார் அவர்கள்	5 00
ஜெயா தங்கமாளிகை, பல்லாவரம், வழிபாட்டுச் செலவு	25 00

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக 80, பிரகாசம் சாலை, சென்னை – 108, அப்பர் அச்சகத்தில் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது.

ஆசிரியர் : இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ.,பி.லிப்.

218533

03/m211 NoSC N96

அருள்நந்திசிவம் அருட்பணி மன்ற வெளியீடு

சிவஞானபோதம் - விளக்கவுரை	60	00
சைவசித்தாந்தம் - சு. மணி	8	00
சிவப்பிரகாசம்	22	00
திருஉந்தியார் திருக்களிற்றுப்படியார்	20	00
மெய்கண்ட நூல்களுள் ஏழு	30	00
சிவஞானமாபாடியம்	260	00
சிவஞானசித்தியார்	60	00
தசகாரியம்	11	00

கிடைக்குமிடம்
திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.,
154, டி. டி. கே. சாலை, சென்னை-18.

WORKS OF Dr. G. U. POPE

TIRUKKURAL (Paper Pack)	120	00
" (Hard Bound)	295	00
NALADIYAR	495	00
TIRUVASAGAM	495	00

ASIAN EDUCATIONAL SERVICES
No. 5, SRIPURAM FIRST STREET,
ROYAPETTAH, MADRAS-600 014.

பதிவு எண் : M/4899 மார்ச் — 1996

கழகப் புதிய வெளியீடுகள்

மாமனிதர் மண்டேலா - இராம்குமார்	75 00
நினைவுத் திரைகள் (என் வரலாறு) - கா. பொ. இரத்தினம்	90 00
திருவாசகம் தெளிவுரை - ப. இராமநாத பிள்ளை	75 00
மருத்துவத் தமிழ் முன்னோடி - டாக்டர் கிறீன் - அம்பி	35 00
இதயமும் இதய நோய்களும் - தமிழும் பன்னீர்செல்வம்	25 00
திருமுருகன் அந்தாதி - ம. அரங்கநாதன்	5 00
நெல்லை மாவட்டச் சித்தர்கள் - சக்தி பி. சுப்பிரமணியம்	40 00
மானிட உடல் இயக்கவியல் - டாக்டர் கதிரேசன்	35 00
மருத்துவத் தமிழ்க் களஞ்சியம் - டாக்டர் கதிரேசன்	35 00
ஜப்பானில் நான் கண்டதும் கேட்டதும் - சு. ந. சொக்கலிங்கம்	அச்சில்
விண்வெளிப் பயணம் - டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்	,,
நமது உடல் - டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்	30 00
முல்லாவின் கதைகள் முப்பது - புலவர் இரா. இளங்குமரன்	18 00
பூமியின் கதை - என். கே. வேலன்	22 00
வங்காளப் பழமொழிகள் - டாக்டர் கொ. முத்தையா	25 00
புதையல் வீடு - டாக்டர் பூவண்ணன்	30 00

அப்பர் அச்சகம், சென்னை-1௦௦.